Sir, we are operating under conditions where the due process of law has to be observed and I am sorry to state that the utilisation of these two Acts—the Maintenance of Internal Security Act and the Defence of India Rules—against traders is, in my opinion, a most undesirable feature of normal law and order by administration in our country. The Maintenance of Internal Security Act was drafted mostly to take action against Naxalites, people who threw bombs, people who had arms and ammunitions, who are being financed by foreign countries; and the Defence of India Rules are rules which were framed when we were facing an aggression from Pakistan and when certain emergency powers were given to the Government. I cannot understand why when we have the Essential Commodities Act, these Acts have been resorted to. In this connection, I think it would be relevant to mention that the recent Bill given notice of by the Government and which is going to be shortly moved, regarding an amendment to the Essential Commodities Act, envisages certain major changes in the laws of our land; and I take this occasion to high-light one or two points mentioned in this proposed amendment and the reason for my doing it is that if this Bill is introduced in the Legislative Assembly, if it receives its assent and if it comes up before the Council for discussion, we will not be able to alter one line or one sentence of the Bill. I am merely wishing to point out some of the most unwelcome features in this Bill in the hope that the Hon. Minister will have time to think again on this matter before introducing a Bill of this nature. Sir, I hold no brief for hoarders, smugglers and black-marketeers, etc. But, may I point out that under the old Essential Commodities Act, the penalties that were envisaged were that in case a person was found guilty the judicial authority might imprison the person for a period of six months, one year or three months, depending on the degree of the offence and also on the fact whether it was his first offence or second offence. But the amendment that is sought to be moved has sought to remove the discretionary power of the judicial authority and in this amendment they have stated that any person who commits an offence under the Essential Commodities Act will be compulsorily imprisoned for a period which may extend to three years—6 months in the case of first offence, one year for the second offence, and 3 years in the case of third offence. Sir, I realise the argument the Hon. the Minister for Food

[1974 மார்ச் 30 [THIRU A. R. Damodaran]

may extend to three years—6 months in the case of first offence, one year for the second offence, and 3 years in the case of third offence. Sir, I realise the argument the Hon. the Minister for Food will bring forth. It is possible for him to say that the black-marketeers and the hoarders only will be prosecuted and ask why genuine traders should fear action under the Essential Commodities Act. If he wants an example, I can give my own example of how very nearly I would have gone to jail for an offence which has been thrown out in the Court. On August 23, 1972 one of my branches was raided by the Food Cell and it is Madapet, South Arcot District. The clerk incharge of that branch was alleged to have sold 10 litres of kerosene to a lorry which was standing 100 yards away from the shop. This branch is one of 22 branches that my firm maintains and he is one of the 120 employees that I have in my firm. A case was launched in the Court. The kerosene that was available in the shop, amounting to Rs. 4,500, was seized and prosecution was launched against the clerk and the unfortunate Manager who happens to be staying in Panruti. Only five days ago, the Court ruled that there was no offence made out, the oil should be returned, and the clerk and the unfortunate Manager were released. Sir, the offence was of a minor technical nature. Under this amendment, no differentiation regarding the degree of the offence has been contemplated. Any small technical offences under the Essential Commodities Act would imperil the safety of the partner or the proprietor of the concern and even the missing of a minor entry in the stock books such as 100 litres would result in a prosecution under the Act and the Hon. Minister wants compulsory imprisonment for a period of six months. While I agree that stern, strong action should be taken against those smugglers who are taking lorry-loads across our borders into Kerala State, may I point out that the strengthening of the punishment clauses of this Act

(Mr. Chairman sounded the gong.)

I have almost finished Sir...... would only add to the burdens of the traders and simple retail businessmen and would invite not only a great deal of criticism but would also imperil the very distribution which the Government have at heart. Thank you, Sir.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, உணவுத் துறையை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் நம்முடைய அமைச்சரவர்கள் அபாயகரமான நிலைமையில் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆடிக் காற்றில் அம்மியே பறக்கும் என்று சொல்வார்கள். அதே மாதிரியாக, விலைவாசிகள் ஏறிக்கொண்டே போகின்றன. இரண்டு நாட்களுக்கு முன்பு மாலை வேளையில் வழக்கமாக வெளியே போய்விட்டு கடைக்கு வந்தேன். ஒரு நோட்டீசும் இல்லாத படிக்கு எலெக்ட்ரிசிடி இல்லை. வணிகர்களுக்கு பணத்தை எப்படிப் பட்டுவாடா செய்வது என்ற நிலை. காரணம் இருள் சூழ்ந்த நிலை. இம்மாதிரியுள்ள நிலைமையில், விவசாயத்திற்கு மாத்திரமல்ல, வீடுகளுக்கு வேண்டிய வெளிச்சத்திற்கு மண்ணெண்ணெய் கிடைப்பது எப்படி என்பது தெரியவில்லை. மண்ணெண்ணெய் எங்கேயிருக்கிறது என்று தெரியவில்லை. வினியோகப் பொறுப்பை கார்டு மூலமாக எல்லா இடங்களுக்கும் கொடுத்து இதைச் சீரமைக்க வேண்டும். ரீடெய்லர்கள், கோவாபரேடிவ் சொசைடிகள் மூலமாகக் கொடுக்கப்படுகிறது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கோவாபரேடிவில் இருக்கிறவர்கள் யோக்கியர்கள் என்று நான் சொல்ல வரவில்லை. கோவாபரேடிவிலே திருடினால் 10 பேர்களுக்குத் தெரியும். கோவாபரேடிவ் மூலமாக கார்டுகள் மூலமாக கொடுத்துவிட வேண்டும். கார்டு மூலமாகக் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். அது மாத்திரமல்ல. சி.எஸ்.ஆர். போன்றவர்கள் ஊர்களுக்குப் போய் மண்ணெண்ணெய் கிடைக்கிறதா என்று பார்க்க வேண்டும். கவர்ன்மெண்டால் சிவில் சப்ளை மூலமாக இவ்வளவு சிரமத்திற்கிடையே நடைபெறும் வினியோகம் சீராக நடைபெறுகிறதா என்று கண்காணிக்க வேண்டும். அதே மாதிரியாக ஜீனி விஷயத்தில் நடக்கிற ஊழலைப் பார்த்தால், ஜீனி வினியோகம் கோவாபரேடிவ் சொசைடி மூலமாக நடக்கிறது. பாதி பிரைவேட் டீலர்ஸ் மூலமாகக் கொடுக்கிறார்கள். ஏழை விவசாயிகளுக்கு, கிராமத்தில் இருக்கிறவர்களுக்கு எத்தனை மூட்டைகள் வந்திருக்கின்றன என்று தெரியவில்லை. அவர்கள் இப்படித் தெரியாமல் இருக்கிறார்கள். சப்ளையாகவில்லை என்று சொல்கிறார்கள். இதை கோவாபரேடிவ் சொசைடி மூலமாகக் கொடுக்க வேண்டும். பொது மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஸ்தாபனத்தின் கீழ் இப்போது மிகவும் அசாதாரணமான காலமாக இருக்கிற இந்த நேரத்தில் இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பயிர் வகைகளின் விலையானது நாளுக்கு நாள் ஏறிக்கொண்டிருக்கிறது. உளுந்து, துவரை, நிலக்கடலை போன்றவைகள் விலை ஏறியிருக்கின்றன. அந்தக் காலத்தில் நிலக்கடலை 2 ரூபாய் விற்றது இன்று 100 ரூபாய்க்கு விற்கிறது. அந்த மாதிரி துவரை ஒரு மூட்டை இன்றைக்கு 50, 80 ரூபாய் விற்கிறது. பஞ்சாப், ஹரியானா போன்ற இடங்களிலிருந்து

சீரான வினியோகம் செய்வதற்கு தக்கவாறு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜில்லாக்களிலே நாங்கள் வினியோகஸ்தர்களை நம்பி பிரயோசனமில்லையென்று நம்புகிறேன். மண்ணெண்ணெய் ஒரு டின் ரூ. 12.50 என்று கொடுக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். வெளியே பிளாக் மார்க்கெட்டில் ரூ. 27.50 என்று விற்கிறார்கள். இவ்வளவு தூரம் விலைவாசிகள் உயர்ந்திருக்குமானால், திரு. ஜெயராம ரெட்டியாருக்குக் கூட இந்த ஆசையைப் போக்குவது மிகக் கஷ்டமாக இருக்குமென்று நினைக்கிறேன். இந்த நிலையில் எவ்வளவுக்கெவ்வளவு சட்ட பூர்வமாக கடுமையாக தண்டிக்க வேண்டுமோ அப்படி தண்டித்தாலொழிய அவர்கள் இந்தப் பழக்கத்தை விட மாட்டார்கள். அதுவும் மிகவும் பழக்கப்பட்டு, ஊறிப்போயிருக்கிற ஊரிலிருந்து வருகிறவன் ஆதலால், திடேவட்டமாகச் சொல்கிறேன். இந்த விஷயத்தில் கமிட்டி ஒன்று போட்டு, அனுபவஸ்தர்களைப் போட்டு, எந்த மாதிரிச் செய்யலாம் என்று பார்க்க வேண்டும். அரசில் எஷவளவோ சிரமப்பட்டு காரியங்களை நடத்துகிறார்கள். இந்திய அரசிடம் கேட்டு, இத்தனை ஆயில் வேண்டும், பருப்பு வேண்டும், சிமெண்ட் வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வருகிறார்கள். எப்படிச் செய்தால் ஒழுங்காக நடக்கும் என்று பார்த்து, இதற்கான திட்டத்தை வகுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திக்கொள்ள ஆசைப்படுகிறேன். பாமர மக்களுடைய கஷ்டத்தைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை]

(பிற்பகல் 4-50)

* **திரு. டி. கே. பொன்னுவேலு:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, உணவுத் துறை கொள்கைப்பற்றிய விளக்கக் குறிப்பின் மீதான விவாதத்தில் கலந்து கொள்கின்ற நல்ல வாய்ப்பு எனக்குக் கிடைத்ததற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உணவை வினியோகிக்கின்ற முறையில், அந்த இலாகாவின் அமைச்சர் மிகச் சீரிய வகையில் அதைச் செயல்படுத்துகின்றார் என்று சொன்னால், அது மிகையாகாது என்று கருதுகிறேன். அவருக்கு உறுதுணையாக அந்த இலாகாவின் செயலரும் மற்றவர்களும் செயல்படுகின்றார்கள் என்று சொன்னால், அதுவும் மிகையாகாது என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இருக்கக்கூடிய அந்த விநியோக முறையில் எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல் சிறு, சிறு குறைகள் நிவர்த்திக்கப்பட வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பெரியவர் திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் தூரத்தில் இருக்கக்கூடிய கிராமங்களுக்குத் தரவேண்டிய சர்க்கரை தரப்படவில்லை, ரவை கொடுக்கப்படவில்லை, மைதா தரப்படவில்லை என்று குறிப்பிட்

டார்கள். அங்கே இருக்கக்கூடிய கிரமங்களுக்கு எடுத்துச் செல்ல தனியாரையோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களையோ எடுத்துச் செல்ல விடுவதன் மூலம், கொண்டு செல்லப்பட வேண்டிய கிராமங்களுக்கு எடுத்துச் செல்லாமல் மூட்டைகளை எடுத்த இடத்திலேயே மூட்டைக்கு ரூ. 100, ரூ. 140 என்று அதிக விலைக்கு விற்கப்படுகிறது. அதனை இல்லை என்று சொல்லி மறுத்துவிட முடியாது.

நாட்டு மக்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்லப்படுவதுபோல, நாமும் சில நடவடிக்கைகளை எடுத்தால்தான் இதைத் தடுக்க முடியும் என்று நான் கருதுகிறேன். செலவோடு செலவாக நாம் வினியோகிக்கின்ற சர்க்கரையையும் இதர பண்டங்களையும் கொடுக்க வேண்டிய இடங்களுக்கு அவை கூட்டுறவுச் சங்கங்கள் எனினும், தனியார் துறை எனினும் நேரடியாக எடுத்துச் சென்று அந்தத் தனியார் அல்லது கூட்டுறவுச் சங்கங்களிடம் தரப்பட வேண்டும் என்று இருந்தால், அவர்கள் திரும்பவும் கிராமத்திற்கு வெளியே கொண்டு வந்து கள்ளச் சந்தையில் விற்க ஏதுவாக இருக்க முடியாது என்று கருதுகிறேன். மக்கள் அப்போது சரக்குகளைக் கண்காணித்துக்கொள்வார்கள். அவர்களுக்கு ஆகக்கூடிய கூடுதல் செலவை, விற்கக்கூடியவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலைமையை ஏற்படுத்தலாம் என்றும் கருதுகிறேன். அது முடியாவிட்டால் அதற்காகக்கூடிய செலவை சர்க்காரே ஏற்றுக்கொள்ளலாம் அல்லது வேறு வழிகளைத் தேடலாம். நாம் அப்படிச் செய்தால், திட்டவட்டமாக நூற்றுக்கு 95 பங்கு அல்லது ஏன் 99 பங்குகூட, இந்தப் பண்டங்கள் கள்ளச் சந்தைக்குப் போக முடியாது என்று கருதுகிறேன். இந்த முறையில் செயல்பட்டால், இந்தப் பண்டங்களுக்கு ஏற்படக்கூடிய தட்டுப்பாட்டினை பெருமளவில் ஒழிப்பதுடன் நம்முடைய தேவைக்கு மிகுதியாக இருக்கும் சூழ்நிலை உருவாகும் என்பது என்னுடைய நம்பிக்கை.

முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் பசுமைப் புரட்சி ஏற்பட்டுவிட்ட தமிழகத்தில் நான்கு மாநிலங்களையும் சேர்த்து ஒரு உணவு மண்டலம் ஏற்படக்கூடிய அபாயத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அது ஒரு புறம் இருக்க இன்னொருபுறம் என் போன்று நெல் உற்பத்தி செய்யக்கூடியவர்கள் தொடர்ந்து நெல் உற்பத்தி செய்வார்களா என்று அஞ்சுகிறேன். நெல் உற்பத்தி செய்யக்கூடிய நான் வாங்கி உண்பவர்கள் உண்ணாமல் இருந்து விடுவார்களே, கஷ்டப்படுவார்களே என்ற மனிதாபிமான உணர்வால் உற்பத்தி செய்கிறேனே என்று பொய்யாகப் பிரசாரம் செய்ய மாட்டேன். எப்படி ஆசிரியர்கள் பிள்ளைகள் படிக்க வேண்டும், அதற்காகத்தான் அந்த உத்தியோகத்திற்கு வந்தோம்—சம்பாத்தியத்திற்காக அல்ல என்று சொல்ல மாட்டார்களோ, எப்படி நோய் நொடியால் வாடுபவர்கள் நலம் பெறுவதற்குத்தான் மருத்துவம் படிக்கின்றோம் என்று சொல்லமாட்டார்களோ, அதிக அளவில் காசு

பணம் சம்பாதிக்க முடியும் என்று மருத்துவம் பயிலுபவர்கள் சொல்லுவார்களோ, அதேபோல்தான் விவசாயிகளும் தங்களுக்குப் பணம் கிடைக்கிறது என்பதற்காகத்தான் விவசாயம் செய்கின்றார்களே தவிர, நாட்டு மக்கள் பசியால் வாடுவார்கள் என்பதற்காக உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்வது வெறும் பசப்பு வார்த்தை, மழுப்பல் முறை என்று நான் திட்டவட்டமாகக் கூறுகிறேன். என்னைப் பொறுத்த வரையில் விவசாயம் தொழில். தொழிலில் நெல் உற்பத்தி செய்வதைவிட கரும்பு உற்பத்தி செய்வது அதிக லாபம் என்றால், நிச்சயமாகக் கரும்பு உற்பத்தி செய்வதற்கு என்னுடைய நிலத்தை மாற்றிவிடுவேன். அல்லது சீதோஷ்ணஸ்திதி அனுகூலமாக இருந்து திராட்சை உற்பத்தி செய்தால் அதிக லாபம் கிடைக்கும் என்றால், திராட்சைப் பழம் உற்பத்தி செய்ய என்னுடைய நிலத்தை மாற்றிவிடுவேன். எலுமிச்சம் பழம் உற்பத்தி செய்தால் லாபம் என்று தெரிந்தால், அதைச் செய்வேன். கரம்பாகப் போடுவது அனைத்திலும் லாபம் எனில் அப்படியே செய்வேன். ஆண்டுகள் சிலவற்றிற்கு முன்னால் என்னுடைய நிலத்தில் மூன்று போகம் நெல் பயிர் செய்தேன். ஆனால் இன்றையதினம் என்னுடைய நிலத்தின் பெரும் பகுதியில் வேர்க்கடலை போடுகிறேன். எண்ணெய் உற்பத்தி பெருக வேண்டும் என்ற எண்ணத்திலா என்றால், இல்லை. வேர்க்கடலை போடுவது தான் எனக்கு பயிர் செய்தேன். ஆனால் இன்றையதினம் என்னுடைய நிலத்தின் பெரும் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, ஏற்கனவே உள்ள விலையை மாற்றி, அதிக விலையைக் கொடுக்க வேண்டுமென்று பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே இரண்டு விவகாரங்கள் இருக்கின்றன. கோதுமை உற்பத்தி செய்தால், என்னிடம் தற்சமயம் சரியான கணக்குகள் இல்லை. டெல்லி சர்க்கார் அதற்கு 200 கோடி ரூபாய்க்கு மேல் மானியம் என்ற பெயரில், இந்தியா பூராவும் தருகின்றார்கள். அதேபோல் தமிழக சர்க்கார் நம்முடைய மாநிலத்தில், முக்கியமான உணவுப் பொருளாக அரிசி இருப்பதால், கோதுமைக்குக் கொடுக்கப்படுவதுபோல், நெல்லுக்கு சப்சிடி மானியம் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் குவிண்டாலுக்கு ரூபாய் 70 என்று மத்திய சர்க்கார் நிர்ணயம் செய்திருக்கிறார்கள். என்னுடைய காதுகளில் இன்னும் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது. தமிழக அரசின் சார்பில்தான் முன்பு ஒருதரம் கூறப்பட்டது. மதிப்பிற்குரிய அன்றைய விவசாய அமைச்சர் மாண்புமிகு திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் தன்னுடைய மாவட்டத்தில் 57 கிலோ கொண்ட மூட்டை ஒன்றுக்கு ரூ. 75 என்ற விலைக்கு விற்பதுதான் விவசாயிக்குச் சாதாரண லாபம் கிடைக்கக் கூடியது என்று இதே மேலவையில் அமைச்சராக குறிப்பிட்டார்கள். அப்படிப் பட்ட விலை நிலைமை இன்னும் வராதது விவசாயியினுடைய துரதிர்ஷ்டம்தான்.

விசித்திரமான நிலைமை, இன்றையதினம் தமிழ்நாட்டில் மட்டும் அல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலேயே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இருக்கிறது. 70 சதவித மக்கள் இந்த நாட்டில் விவசாயம் செய்கின்றவர்கள் இருக்கின்றார்கள். ஜனநாயகத்தில் அவர்கள் மெஜாரிட்டி நிலையில் உள்ளவர்கள். மற்ற, மற்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களின் நிலைமைகள் வேறு. நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு தத்துவத்தைச் சொன்னார்கள். அதைச் செயல்படுத்திக்கொண்டும் இருக்கிறார். போக்குவரத்துத் துறையின் மூலமாக அதை முதலில் செயல்படுத்தி வருகிறார்கள். முதல் இல்லாமலேயே லாபம் பெறுகின்றவர்கள் இருக்கின்றார்கள். எந்த முதலும் போடாமல், உள்ள மூலதனத்தில் பங்கு பெறுகிறார்கள். அந்தத் தொழிலில் பாத்தியதை பெறுகிறான். அதில் கிடைக்கின்ற லாபத்தில் பங்கு பெற உரிமை பெறுகிறான். எந்த முதலும் போடாத அந்தத் தொழிலாளர்களுக்கு அந்த உரிமை உண்டு. அன் ஸகில்ட் லேபரர் என்று சேருகிறான். பிறகு ஸ்கில்ட் லேபரர் ஆகிறான். பிறகு கால ஓட்டத்தில் அவன் மூலதனத்தில் உரிமையும், லாபத்தில் பங்கும், கொள்கை வகுப்பதில் பாத்யத்தையும் பெறுகிறான். ஆனால் முதல் போட்டு நிலம் வாங்கிய விவசாயிகள் அதற்குப் பிறகு கந்தாயம், கந்தாயம் என்று ஒவ்வொரு முறையும் பயிரிடுவதற்கு முதல் போடும் விவசாயி பயிரிடும் பயிருக்கு என்ன விலை என்று விலை நிர்ணயிப்பதற்கு உரிமை இல்லாதவனாக இருக்கிறான். இப்படிப் பட்ட நிலைமை விவசாய உலகத்தில் விவசாயிகளுக்கு ஏன் ஏற்பட வேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்டாமல், தட்டிக் கேட்காமலிருக்க முடியாது. இந்த முறை நிச்சயமாக மாற்றப்பட வேண்டியதாகும். நிச்சயமாக இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு பரிகாரம் காண வேண்டுமென்று அழுத்தம் திருத்தமாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 5-00)

எவ்வளவுதான் அன்பாகப் பேசினாலும், எவ்வளவுதான் இதமாகச் சொன்னாலும், எவ்வளவுதான் நாட்டின் நெருக்கடி நிலைமைகளைச் சுட்டிக்காட்டினாலும், எவ்வளவுதான் ம்க்களுடைய பசியையும், பட்டினியையும் எடுத்துச் சொன்னாலும், 70 சதவிகித மக்களுடைய உண்மையான உணர்வுகள், உழைப்பின் பலன்கள் அவர்களுக்குப் போய்ச் சேராமல் எங்கோ இருந்து வரக்கூடிய வியாபாரியும், எதிலும் எப்படியும் தலையிட முடியும் என்ற நிலைமையிலும், அந்தஸ்திலும் இருக்கக்கூடிய சர்க்காரும் தலையிட்டு விலை நிர்ணயம் செய்வது என்பதும், அதற்குப் பிறகு அதற்குச் சால்ஜாப்புகளும், சமாதானங்களும், சாகசங்களும் செய்துகொண்டிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்பதனை நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்,

1974 மார்ச் 30] [திரு. டி. கே. பொன்னுவேலு]

நெல்லை உற்பத்தி செய்யும் விவசாயி அதை உற்பத்தி செய்ததற்குப் பிறகு, அதைக் கொண்டுதான் துணி வாங்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றையதினம் காலைப் பத்திரிகை, நேற்றைய தினம் விற்ற 4 முழம் வேட்டியின் விலை ரூ. 4.80 என்றிருந்தால், இன்றைய தினத்திலிருந்து 20 சதவிகிதம் அதாவது ஒரு ரூபாய் கூட்டி ரூ. 5.80 என்று அதே துணி விற்கப்படப்போகிறது என்று குறிப்பிட்டார்கள். மத்திய சர்க்கார் அந்த விலையேற்றத்தை முன்நின்று நடத்தியிருக்கிறது. விவசாயி அதை வாங்கியாக வேண்டும். அவன் வீடு கட்டவேண்டும்—மன்னிக்கவும், அவன் வீடு கட்டக்கூடிய நிலைமையில் இல்லை—அவன் எங்கேயாவது குடக்கூலி வீட்டுக்குப் போக வேண்டும் என்றால், அந்தக் குடக்கூலி ஆண்டுக்காண்டு, மாதத்துக்கு மாதம் ஏறக்கூடிய நிலைமையிருக்கிறது. அதை அவன் கட்டாயம் தந்தாக வேண்டும். அவன் வாங்கும் பருப்பு, அவனுடைய நல்லது கெட்டது அனைத்தும் விலையேறிக் கொண்டிருக்கிறது.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது ரூ. 4.80 விற்ற துணிக்கு ஒரு ரூபாய் கூட்டி விற்பதாகச் சொல்லவில்லை. ரூ. 4.80 விற்ற துணிக்கு, கமிஷன் ஒரு ரூபாய் கொடுத்திருக்கிறார்கள் என்று தான் சொன்னார். விலையைக் கூட்டிக் கொடுக்கவில்லை. நண்பர் திரு. பொன்னுவேலு அவர்கள் சொல்வதை வைத்து கடைக்காரர்கள் கூட்டிவிடப் போகிறார்கள். ரூபாய் 4.80-க்கு விற்கக்கூடிய கோர்ஸ் கிளாத்துக்கு, ஒரு ரூபாய் கமிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தான் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள்.

திரு. டி. கே. பொன்னுவேலு: தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் கூறிய வாதத்தை அவரை மதிக்கின்ற முறையில் ஏற்றுக்கொள்கிறேன். அப்படியே வைத்தாலும், ரூ. 4.80 விற்கக்கூடிய துணிக்கு, அவனுக்கு ஒரு ரூபாய் கமிஷன் இருக்கிறது. ஏறத்தாழ அவனுக்கு 20 சதவிகிதம் கமிஷன் இருக்கிறது. ஆனால் விவசாயிக்கு, ஒரு மூட்டை நெல்லை உற்பத்தி செய்வதற்கு ஆகக்கூடிய செலவில் ½ சதவிகிதம் லாபம் இருக்கிறதா என்றால் இல்லை என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூட ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் எனக்கு அச்சமில்லை. அப்படிப்பட்ட இழிநிலைமை எதற்காக? அவன் ஆண்டுக்காண்டு, கந்தாயத்துக்கு கந்தாயம், உற்பத்தி செய்த பிறகு என்ன நிகர லாபம் அல்லது நஷ்டம் என்று கேட்டால், ஒரு எக்கரா பயிரிட்டேன், 5 சென்ட் நிலத்தை அதற்கு ஈடாக விற்றேன் என்பதுதான் நிலைமை. இன்றையதினம் ஆசிரியர் என்றால், என்ஜினியர் என்றால், டாக்டர் என்றால், வழக்கறிஞர் என்றால், அவர்களுக்கு ஊதியத்தைக் கூட்டிக்கொண்டு போகிறோம். மாதத்துக்கு மாதம் சம்பளம் ஏறிக்கொண்டு போகிறது. ஆசிரியர்கள் இருக்கக்கூடிய எண்ணிக்கையை விட, மாணவர்கள் எண்ணிக்கை அதிகம். ஆகவே ஆசிரியர்

களே, நீங்கள் தயவு செய்து உங்களுடைய சம்பளத்தைக் கூட்டிக் கொள்ளாதீர்கள் என்று கேட்கிறோமா என்றால் கிடையாது. அதே போல் என்ஜினியர்களைப் பார்த்து குறைக்கச் சொல்லிக் கேட்பது கிடையாது. அதே போல செகரடேரியட்டில் வேலை செய்கிற யாரையும் பார்த்து உங்களுடைய சம்பளத்தைக் கூட்டிக் கேட்காதிர்கள் என்று சொல்வதில்லை. இவ்வளவு எல்லாம் ஏன்? ஆளுபவர்கள் எண்ணிக்கை குறைவு; ஆளப்படுபவர்கள் எண்ணிக்கை அதிகம் என்பதற்காக, ஆளுபவர்கள் வசதிகளைக் கூட்டிக் கொள்ளாமல் இருக்கிறோமா? ஆறு வருடத்திற்கு முன்னால் தினப்படி 12½ ரூபாய். இன்று 35 ரூபாய்; சம்பளம் 150 ரூபாய்; இன்று 350 ரூபாய். பஸ்களில் பயணம் செய்வதற்கு புதிய சலுகை. அப்படி இருக்கும்போது உற்பத்தி செய்கின்ற விவசாயியைப் பார்த்து, வாங்கி உண்பவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது; ஆகவே விலையைக் குறையுங்கள் என்று சொல்வதில், அல்லது விலையைக் கட்டுப்படுத்துங்கள் என்று சொல்வதில் என்ன நியாயம், என்ன தர்மம், என்ன யோக்கியதை இருக்கிறது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. சென்ற ஆண்டில் என்னுடைய ஊரைப் பொறுத்த வரையில், ஏர் கூலி 2 ரூபாய். தமிழ் நாடு சர்க்கார் ஏர் கூலியை ஐந்து ரூபாயாக உயர்த்தியது, எனக்கு மகிழ்ச்சி. தொழிற் சங்கத் தலைவர்கள், திரு. காட்டூர் கோபாலைப் போன்றவர்கள் பெருமைப்படுவார்கள். தொழிலாள வர்க்கம் மாலை சூட்டும். கிராமப்புறங்களில் இரண்டு ரூபாயாக இருந்த கூலி, நான்கு ரூபாயாக ஆகிவிட்டது. நான் குறிப்பிட விரும்புவது, விவசாயத்தில் பாதிச் செலவு கூலியில் போய்விடுகிறது. சென்ற ஆண்டு எங்களுக்கு ஆன செலவைப் போல் இன்றைய தினம் இரண்டு மடங்கு செலவாகிறது. அவ்வாறு ஆனதற்குப் பிறகு சென்ற ஆண்டு வந்த வருவாயைவிட இந்த ஆண்டு வருவாய் குறைந்திருக்கிறது. வருவாயைக் கூட்ட வேண்டிய நடவடிக்கையை சர்க்கார் எடுக்க வேண்டாமா? ஆகவே, விவசாயிக்கு எப்படி கட்டுப்படியாகும் என்பதை அருள்கூர்ந்து எண்ணிப்பார்த்தாக வேண்டும். வாங்கி உண்பவர்களைப் பாதுகாக்க வேண்டாமா என்றால், அது மிகவும் நியாயமான கேள்வி; யாரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய கேள்வி; மனிதாபிமானம் படைத்தவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டிய கேள்வி. சர்வ வல்லமை படைத்த சர்க்கார் சப்சிடி கொடுப்பதன் மூலமாக, மானியம் தருவதன் மூலமாக வாங்கி உண்பவர்களைப் பாதுகாக்க வேண்டுமே தவிர, விவசாயியின் குடலை மாலையாகக் கேட்பதன் மூலம் சரிக்கட்டக் கூடாது என்பதனை மிகவும் பணிந்து கூறி தமிழ் நாட்டு சர்க்காரின் உணவுக் கொள்கையை வரவேற்று, எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வரவேற்றுத்தான் முடித்திருக்கிறீர்கள்.

1974 மார்ச் 30]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு தலைவரவர்களே, இன்றைய தினம் உணவுக் கொள்கைபற்றிய விவாதத்தில் கலந்துகொள்வதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணவுக் கொள்கையைப்பற்றி வியாக்கியானம் சொல்லியிருக்கிறார்கள் (அவையில் சிரிப்பு). வியாக்கியானம் தான்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: கொள்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வியாக்கியானத்தை நீங்கள் சொல்லுங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: உணவுப்பொருள் என்னும்போது நாட்டிலே அரிசி மட்டுமல்ல, அதைச் சார்ந்த பல வகையான மற்ற வெஞ்சனப் பொருட்களும் இருக்கின்றன. இந்தக் கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருப்பது அரிசி, மண்ணெண்ணெய், கோதுமை, சர்க்கரை, சில வகைப் பயிறு இவற்றைப் பற்றித்தான். அரிசியைப் பொறுத்தவரையில் நமது மாநிலம் உபரி மாநிலம். நமது மாநிலத்தில் நல்ல விளைச்சல் விளைந்திருக்கிறது. ஆகவே கவலையில்லாத மாநிலம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அண்டை மாநிலத்திற்கு அனுப்பவேண்டிய பொறுப்பும் நமக்கு இருப்பதால், அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே ஆட்சியின் கொள்கை என்று சொல்லப்பட்டிருந்தது உணவுப் பொருட்களின் விலையைக் குறைப்பது. ஆனால் சென்ற வருடத்திலும், அதற்கு முந்திய வருடத்திலும் விற்ற விலையைப் பார்த்தால், இப்போது உணவுப் பொருட்களின் விலை அதிகமாக இருக்கிறது. இன்றைய தினம் படி அரிசி என்ன விலை விற்கிறது என்று பர்சென்டேஜ் பார்த்தால், சென்ற ஆண்டைக் காட்டிலும் 50 சதவிகிதத்திற்கு மேலாக விலை தூக்கி விற்கிறது. ஆட்சியாளர்களின் ஆசை படி அரிசி ஒரு ரூபாய்க்குக் கொடுக்க வேண்டும் என்பது. ஆனால் இன்றைக்கு படி அரிசி கிட்டத்தட்ட ஒன்றுக்கு மூன்றாக, 3 ரூபாய் என்று விற்கிறது. நல்ல அரிசியாக வாங்க வேண்டுமென்றால், மேலும் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. தஞ்சை, தென்னாற்காடு போன்ற உபரி விளைச்சல் இருக்கின்ற மாவட்டங்களில் சற்று சுமாரான விலை இருக்கிறது. காரணம் அந்த மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டத்திற்கு எடுத்துச் செல்லக்கூடாது என்றிருப்பது. இந்த மாவட்டங்களை விட்டுவிட்டு, மற்ற மாவட்டங்களைப் பார்த்தால், அங்கெல்லாம் வேறு விதமான கட்டுப்பாடு இருப்பதால், படி அரிசி 3 ரூபாய், 3½ ரூபாய் என்று விற்கிறது. கோவை, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் இன்னும் அதிகமான விலை விற்கிறது. மாநகராட்சி உள்ள இடங்களிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் பங்கீடு முறை இருக்கிறது. 4½ கோடி மக்களில் 22½ அல்லது 25 லட்ச மக்கள்

இதனால் பயனடைகிறார்கள். மற்ற மக்களுடைய நிலைமை என்ன? எல்லாம் ஏழை ஜனங்கள். அன்றைக்குக் கூலி வாங்கிச் சாப்பிட வேண்டிய ஜனங்கள். அவர்களுடைய கூலி இரண்டு ரூபாயிலிருந்து ஐந்து ரூபாய் உயர்ந்திருந்தபோதிலும், இன்றைய தினம் இருக்கின்ற விலைவாசியில் அவர்கள் அன்றாட வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசிய சாமான்களை வாங்கிச் சாப்பிட முடியுமா? அந்தத் தொழிலாளர்கள் வேலை செய்து விட்டு, கூலியை வாங்கிக்கொண்டு சாயந்திரம் வீடு திரும்பி, குளித்துவிட்டு கிராமத்தில் இருக்கின்ற கடைக்குச் சென்று சாமான்களை வாங்குகிறார்கள். அந்தச் சாமான்கள் 3, 4 வியாபாரிகள் கைமாறி கடைசியாக கிராமத்திற்கு வருவதால், விலை அதிகமாக விற்கிறது. தொழிலாளிகள் கூலி வாங்கியும், அதுவும் போதாமல் கடனுக்குத் தான் சாமான்களை வாங்கவேண்டியிருக்கிறது. முக்கால் வாசி கிராமங்களில் இருக்கின்ற தொழிலாளிகளுக்கு வேலை உத்தரவாதம் இருக்கிறதா என்றால் இல்லை. வேலை கிடைக்காத நாட்களில் பொருட்களை கடனுக்குத்தான் வாங்கவேண்டியிருக்கிறது. கடன் வாங்க ஏதாவது பித்தளை சாமானை அடகு வைத்தால், அதற்கு வட்டிக் கணக்குப் பார்த்தால், 10 ரூபாய் வாங்கினால் 15 ரூபாய் வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. சர்க்கரை 300 ரூபாய் வருமானம் வருகிறவர்களுக்கு இவ்வளவு, 500 ரூபாய் வருமானம் வருகிறவர்களுக்கு இவ்வளவு என்று நிர்ணயித்து கார்டு முறை வைத்திருக்கிறோம். அப்படிக் கொடுக்கப்படுகின்ற கார்டுக்கு குறித்த அளவு சர்க்கரை நியாய விலையில் கிடைக்கும் என்ற உத்தரவாதம் இருக்கிறது. ஆனால் மற்ற பொருட்களின் விலை ஏறிக்கொண்டிருக்கிறது. விலை வாசி ஏற்றத்தைத் தடுக்க முடியவில்லை. ஆகவே அரசாங்கம் கண்டிரிபியூஷன் கொடுத்து, கொள்முதல் செய்து, அந்த அரிசியை ரேஷன் கடை மூலமாக ஏதாவது வழியில் தொழிலாளிகளுக்கு, பாட்டாளி வர்க்கத்துக்கு மட்டுமாவது பங்கீடு செய்கின்ற முறையைப் புகுத்தி, குறைந்த விலையில் கட்டுபடியாகும் விலையில் கொடுத்தால்தான் ஜனங்களால் வாழ முடியும்.

(பிற்பகல் 5.10)

அடுத்தபடியாக, மண்ணெண்ணெய் பிரச்சினையைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையில், எப்படித்தான் இருக்குமென்று தெரியவில்லை. எல்லா இடங்களிலும் எலக்டிரிபிகேஷன் செய்கிறார்கள். கிராமங்கள் மட்டத்தில் எலக்டிரிபிகேஷன் செய்தும், மண்ணெண்ணெய் பிரச்சினை தீரவில்லை. இப்போது நகரத்தில் ஒரு காட்சியைப் பார்க்கிறோம். வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு, கார்டைத் தூக்கிக்கொண்டு கடைக்குப் போகிறார்கள். அங்கு 4 மணி நேரம், 5 மணி நேரத்திற்குக்

குறைவில்லாமல் நின்று, எண்ணெயை வாங்கிக்கொண்டு வருகிறார்கள். மேலும் அளவிலும் குறைகிறது. மண்ணெண்ணெயின் தரத்தைப் பார்த்தால், அது மண்ணெண்ணெய்தானா அல்லது மண்ணைக் கலந்து தரப்படும் எண்ணெயா என்ற அளவுக்கு இருக்கிறது. மேலும் லாரி ஓட்டுகிறவர்களும், பஸ்களை ஓட்டுகிறவர்களும், பெட்ரோலுடன் மண்ணெண்ணெயைக் கலந்து ஓட்டுகிறார்கள். எனவே அதிக விலை கொடுத்து வாங்கும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை இருப்பதால், ஏழை ஜனங்களுக்கு வாங்கும் வாய்ப்பில்லை. குறைந்த அளவுக்கு சப்ளை கொடுத்தாலும், அதைச் சரியான முறையில் பங்கிட்டுக் கொடுத்தால்தான், அது ஏழைகளுக்குப் போய்ச் சேரும். இல்லையென்றால், லாரிகளுக்கும், மற்ற வாகனங்களுக்கும்தான் போய்ச் சேரும். உதாரணமாக 1,000 கார்டுகள் இருக்கிற இடத்தில், 500 'போகஸ்' கார்டுகள் இருக்கின்றன. எப்படி அந்தக் கார்டுகள் கொடுக்கப்படுகிறதென்று தெய்வத்திற்குத்தான் தெரியும். ஒரு பேரூராட்சி அல்லது நகராட்சியை எடுத்துக்கொண்டால், 50,000 குடும்பக் கார்டுகள் இருக்க வேண்டிய இடத்தில். 25,000 சேர்ந்து, 75,000 கார்டுகள் இருக்கின்றன. அப்படியிருந்தால் எப்படி பங்கீடு சரியாக நடக்கும்? வேண்டப்பட்டவர்களுக்குத்தான் போகிறது. மேலும் பற்றாக்குறை என்று சொன்னால், ஜனங்கள் அந்தப் பொருளை வாங்கிச் சேமிக்கிறார்கள். அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை, கோதுமை போன்ற பொருள்களில் பற்றாக்குறை இருந்தால், அதை வாங்கிச் சேமித்து வைக்கின்ற ஆசை ஜனங்களுக்கு இருக்கிறது. அப்படி சேமித்து வைக்கும்போது, ஏழை ஜனங்களுக்கு வாங்கக் கூடிய வாய்ப்பு குறைந்துகொண்டிருக்கிறது. எனவே 'ஜெனுயின்' கார்டு தானா என்று பார்த்துக் கொடுக்க வேண்டும். இதில் அமைச்சரவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோதுமை வினியோகம்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தலைவரவர்கள், எனக்கு நீரிழிவு நோய் இருக்கிறதோ என்று சொன்னார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நான் சொல்லவில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : நான் தாங்கள் சொன்னதாகச் சொல்லவில்லை. தலைவரவர்கள் சொன்னார்களென்று சொல்கிறேன். நம்முடைய மாநிலத்தில் ஏராளமான 'பேக்கரீஸ்' இருக்கின்றன. அவை சரியாக வேலை செய்கின்றனவா என்பது பகவானுக்குத்தான் வெளிச்சம். ஆனால் கோட்டா வாங்குவதில் குறைவில்லை. சாதாரண ஏழை ஜனங்களுக்கு கோதுமை கிடைக்கவில்லை. கடைக்குப் போனால் எல்லாப் பண்டங்களும் வடநாட்டுப் பெயரில்தான் இருக்கின்றன. மைசூர்பாக், பாம்பே காஜா,

[திரு. ஐய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்] [1974 மார்ச் 30

பெனாரஸ் அல்வா, நாக்பூர் புட்டிங் என்று எல்லாம் வடநாட்டுப் பெயர்கள். தமிழ்நாட்டில் பெயரே கிடையாதா அல்லது தமிழ் நாட்டுப் பெயர்களே தெரியவில்லையா என்பது தெரியவில்லை. சென்னை அல்வா என்று சொல்வதற்கு கூட வாய் வரவில்லை. பெனாரஸ் அல்வா என்று சொல்லுகிறார்கள். 20,000 பேர்களுக்கு அதிகமாக உள்ள டவுன்களைப் பார்த்தால், ஷேட்டுகள்தான் நிறைய கடை வைத்திருக்கிறார்கள். தடுக்கி விழுந்தால் ஷேட்டுகள் வைத்திருக்கும் ஸ்வீட் ஸ்டாலில்தான் விழ வேண்டும். எப்படித்தான் இந்த ஸ்வீட் ஸ்டால் அதிகமாகிவிட்டதோ தெரியவில்லை. எல்லாம் டெல்லி ஸ்வீட் ஸ்டால், பாம்பே ஸ்வீட் ஸ்டால், கல்கத்தா ஸ்வீட் ஸ்டால் என்றிருக்கிறது. இன்று ஒன்று இருந்தால், நாளை நான்கு ஆகிவிடுகிறது. முன்பு வட்டிக் கடைதான் அதிகமாக இருந்தது. இப்போது ஸ்வீட் ஸ்டால் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அவர்கள் ஸ்வீட்டை எதில் பண்ணுகிறார்களென்று தெரியவில்லை. நல்லெண்ணெய் 9½ ரூபாய்; கடலை எண்ணெய் 10 ரூபாய்; டால்டா விலை நெய் விலையைவிட அதிகமாகிவிட்டது. (குறுக்கீடு) ஸ்வீட் ஸ்டால் எப்படி நடக்கிறதென்பதை சர்க்கார்தான் கவனிக்க வேண்டும். சர்க்கரையெல்லாம் அங்கே போய்விடுகிறது. சர்க்கரை, கோதுமை, ஆட்டா, மைதா எல்லாம் அங்கே போய்விடுகிறது. எனவே ஜனங்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. சர்க்கரையைப் பொறுத்தவரையிலும், அதிகமான சம்பளம் பெறுகிறவர்களுக்கு அதிகமென்று போட்டிருக்கிறோம். நம்முடைய வாழ்க்கைத் தரம் வேகமாக உயர்ந்து கொண்டிருக்கிறது. எல்லோரும் டீ, காபி அதிகமாகச் சாப்பிடுகிறார்கள். கொஞ்சம் வயதானவர்கள், வாழ்க்கைத் தரம் அதிகமாக உடையவர்கள் சாப்பிடுவதில்லை. எங்கே சாப்பிட்டால் நீரிழிவு நோய் வந்துவிடுமோவென்று அவர்கள் பயப்படுகிறார்கள். ஆனால் தொழிலாளி 15 தடவை டீ சாப்பிடுகிறான். எனவே தொழிலாளர்களுக்கு அதிகமாகக் கொடுத்து, பணக்காரர்களுக்குக் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. தொழிலாளர்களுக்கு, டீ சாப்பிட்டால்தான் வேலை செய்ய முடிகிறது. வரி அதிகமாகச் செலுத்துபவர்கள், சர்க்கரை, கோதுமை போன்றவற்றை நிறையப் பெறுகிறார்கள். இன்று டீ கடைகள் ஏராளமாக இருக்கின்றன. ஒவ்வொரு இடத்திலும் 20, 30 லாரிகள் நின்றுகொண்டிருக்கின்றன. அவர்களுக்கும் சர்க்கரைதான் தேவைப்படுகிறது. எனவே அவர்களுக்கு அதிகமாகத் தர வேண்டும். இன்கம்-டாக்ஸ், வருமான வரி செலுத்துவதைப் பார்த்து, இப்போது கோட்டா கொடுக்கிறோம்.

திரு. டி. கே. பொன்னுவேலு: சென்ற முறை மாண்புமிகு உறுப்பினர், திரு. தீக்ஷிதர் அவர்கள், தனக்கு 3 கிலோ சர்க்கரை என்றும், தன்னுடைய பணியாளருக்கு 6 கிலோ சர்க்கரை என்றும் சொன்னது கவனத்தில் இருக்கிறது. இப்போது அதை மாற்றி விட்டாரா என்று அறிய விரும்புகிறேன்.

1974 மார்ச் 30]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: அது அப்படித்தான் இருந்துகொண்டிருக்கிறது. எந்த அதிகாரி இப்படிக் கொடுத்தாரென்று தெரியாது. இன்னும் அந்தத் தவறுகள் அப்படியே இருக்கின்றன.

திரு. டி. கே. பொன்னுவேலு: தொழிலாளர்களுக்கு அதிகமாகவும், முதலாளிகளுக்குக் குறைவாகவும் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். உங்களுக்கு 3 கிலோவும், தொழிலாளிக்கு 6 கிலோவும் கொடுத்திருப்பதாகக் குறை சொல்லியிருக்கிறீர்கள். எது உண்மையென்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: பொதுவான பிரச்சினையில் தொழிலாளர்களுக்கு அதிகமாகக் கொடுத்தால்தான் நல்லது. எனவே டீ கடைக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டும். கார்டுகள் கொடுக்கும் முறை சரியாக இல்லை யென்று ஏற்கெனவே சொன்னேன். அதைச் சரி செய்யவேண்டும். அடுத்தபடியாக, ஓட்டல்களுக்குப் போனால், பல பொருள்கள் வீணாவதைப் பார்க்கலாம். சாதத்திலிருந்து, சாம்பார், சட்டினி வரை வீணாகிறது. தேங்காய் விலை 1½ ரூபாய் விற்கிறது. உணவுப் பொருள்கள் நிறைய வீணாகின்றன. இதையெல்லாம் கட்டுப்படுத்தி, ஏழைகள் வாங்கக்கூடிய அளவில் சாமான்களின் விலை இருந்தால்தான், நாடு சுபிட்சமாக இருக்கும். எனவே இந்த உணவுக் கொள்கையில் இன்னும் சீர்திருத்தம் செய்து, பங்கீட்டுக் கடைகளை நல்ல முறையில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, உணவு, குடிமைப் பொருள்கள்பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில் எனது கருத்துக்களைச் சொல்ல அனுமதித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிற மாநிலங்களுடன், நமது மாநிலத்தை ஒப்பிடுகிறபோது, உணவுத் துறையில் அவ்வளவு போராலும் பாராட்டப்படுகிற நிலையில்தான் இருக்கிறதென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. பல்வேறு காரணங்களுக்காகப் பிற மாநிலங்களுக்குச் சென்று வருகிறவர்கள், அந்த மாநிலங்களில் தங்கி தங்களது சொந்த மாநிலமாகிய தமிழகத்திற்கு வருகிறவர்கள் அங்கிருக்கும் நிலையையும், இங்கிருக்கும் நிலையையும் ஒப்பிட்டுச் சொல்லும்போது, உண்மையில் உணவு நிலைமையில் நமது அரசு கண்ட வெற்றியை, எந்தச் சார்பில் இருந்தாலும், பாராட்டுகிறார்களென்பதை யாரும் மறந்துவிட முடியாது. உலகம் தழுவிய உணவு நெருக்கடியுள்ள சமயத்தில்கூட, தமிழகத்தில் உணவுத் துறையில் ஓரளவுக்கு நமது சுய தேவையைப் பூர்த்தி செய்து கொண்டுள்ளோம். கடந்த ஆண்டில் மாத்திரம் 1,11,435 டன் அரிசியைப் பிற மாநிலங்களுக்கும், மத்தியத் தொகுப்பிற்கும் நாம் அளித்திருக்கிறோம்.

இது நமது மாநிலத்தின் உணவுக் கொள்கையின் வெற்றியை மிகச் சிறப்பாகக் கோடிட்டுக் காட்டுகிறது. இந்த நிலைமையில் இந்த அரசையும், இந்த உணவுத் துறையில் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சரவர்களையும் பாராட்டி, என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 5.20)

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து வருகிறவன் நான். கன்னியாகுமரி மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம் போன்றவைகள் எல்லையோரப் பகுதியில் இருப்பதனால், அங்கே உணவு நிலைமையில் சில சிக்கல்கள் இருந்து வருவதை நாம் தெரிந்துகொள்ள முடிகிறது. ஒரு பெரிய கார் அல்லது பஸ் போன்ற ஊர்தியில் பின் சீட்டில் உட்கார்ந்தால் சவுகரியமாக இருக்கலாம். இன்ஜினுக்குப் பக்கத்தில் சூடாக இருக்கின்ற பகுதியில் உட்கார்ந்தால், சூடாகத்தான் இருக்கும். அதைப்போல நாங்கள் கேரளாவுக்குப் பக்கத்திலே இருக்கிறோம். இந்தியாவிலேயே கேரளா உணவுப் பொருள் நிலைமையிலே சூடான பகுதி என்பது தெரியும். ஆகவே நீங்கள் எவ்வளவு திட்பமான சூழ்நிலையை உருவாக்கித் தந்தாலும், அந்தச் சூடு எங்களையும் கொஞ்சம் தாக்காமல் விடுவதில்லை என்ற நிலை இருப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதை மாற்றி தமிழகம் முழுதுக்கும் உள்ள நிலைமையை உருவாக்குகின்ற ஒரு நிலையை என்னுடைய அனுபவ ரீதியாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், நான் முன்னலேயே இந்த மாமன்றத்தில் சொல்லியிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைந்து பிரிவினை செய்கின்றபோது, அன்று ஆட்சிப் பொறுப்பிலேயிருந்தவர்கள் தமிழுணர்வு உள்ளவர்களாக இல்லாத ஒரு காரணத்தினால், அந்த எல்லையை நெய்யாற்றங்கரை வரை கொண்டு செலுத்தி, நெய்யாற்றங்கரை ஆறை ஒரு எல்லைப் பகுதியாகப் பிரிக்காமல் விட்டுவிட்டார்கள். உண்மையிலேயே நெய்யாற்றங்கரையிலேயிருந்து குஞ்சன் நாடார் என்பவர் தமிழ் நாடு காங்கிரஸ் சார்பில், தமிழகத்தோடு அப்பகுதி இணைய வேண்டுமென்ற இயக்கத்தின் சார்பாக மூன்று முறை வெற்றி பெற்று, கேரள சட்ட சபைக்கும், திருக்கொச்சி சட்ட சபைக்கும் உறுப்பினராக வந்திருக்கிறார்கள். அப்படி இருந்த பகுதியை விட்டுவிட்டிருக்கிறார்கள். அண்மையிலே கேரள சட்டசபையிலே கன்னியாகுமரி மாவட்டத்தைக் கேரளத்தோடு சேர்த்துக்கொள்ள முடியுமா என்ற வினா எழுப்பியதும், அங்கேயுள்ள முதலமைச்சர் அவர்கள், அப்படி எழுப்பியது தவறு, அது தீர்ந்து போன பிரச்சினை, அதை எழுப்பக் கூடாது என்று சொன்னதையும் பத்திரிகை வாயிலாக நாம் அறிந்திருக்கிறோம். அது போலவே தமிழகத்திற்கு உரிமையான நெய்யாற்றங்கரைப் பகுதியை நாம் திருப்பிக் கேட்க வேண்டுமென்று சொல்லவில்லை.

ஏனென்றால் நாமும் பெருந்தன்மையாக, விட்டுவிட்டதை விட்டு விடுவோம். இருந்தபோதிலும் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய உணவுப் பிரச்சினையிலே முக்கியம் என்னவென்றால், கேரள எல்லைப் பகுதி ஒரு இயற்கை யான பகுதியாக அமையவில்லை. அது ஒரு ஆற்றையோ அல்லது ஒரு மலையையோ எல்லையாகக் கொண்டிருந்தால், தடுத்திருக்க முடியும். ஆங்கிலத் திலே 'என்கிளேவ்' என்பார்கள். இணைந்து குழைந்து ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து கொண்டிருக்கக் கூடிய பகுதியாக கன்னியாகுமரி மாவட்டமும், கேரளமும் இணைந்திருக்கிறது. ஒரு சாலை கேரளப் பகுதி என்பார்கள். இன்னும் ஒரு மைல் போனவுடன் கன்னியாகுமரி மாவட்டம் என்பார்கள். இது ஒன்று. மற்றொன்று, கேரளாவிலே அரிசி விலை ஒரு பக்கா படி எட்டு ரூபாய் அல்லது ஏழு ரூபாய் ஆக இருக்கிறது. இங்கே 3½ அல்லது 4 ரூபாயாக இருக்கிறது. ஆகவே இங்கே அரிசியை வாங்கி ஒரு படியைக் கொண்டு போனால் நான்கு ரூபாய் கிடைக்கிறது. கன்னியாகுமரி மாவட்ட எல்லையிலே குழித்துறையிலே நான்கு ரூபாய் கொடுத்து ஒரு படி அரிசியை வாங்கி கேரளாவிலேயுள்ள வியாபாரியிடத்தில் கொடுத்தால் ஒரு பக்கா படிக்கு மூன்று அல்லது நான்கு ரூபாய் கிடைக்கிறது. ஆகவே சாதாரண தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள், ஐந்து பக்கா படி அரிசியை வாங்கி பெரிய செல்வந்தர்கள் வைத்திருக்கிற பை மாதிரி அழகான பையிலே வைத்துக்கொண்டு போகிறார்கள். இப்படி ஏழை மக்கள் சாதாரண நிலையிலே உள்ளவர்கள் இப்படி அரிசியைக் கடத்துகின்ற சூழ்நிலை இருக்கிறது. இதைத் தடுக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்ன மாதிரி தெரிந்த ஸ்மக்லர்கள், கடத்தல் வியாபாரிகள் அரிசி யைக் கடத்திக்கொண்டு செல்கிறார்கள். இவ்விரண்டையும் தடுக்க நமது அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது என்பதை நான் பரிபூரணமாக உணர்வேன். உயர்தர அதிகாரிகள் நல்ல முறையிலே செயல்பட்டு வருகி றார்கள். ஆனால் எதிர்பார்க்கிற அளவு வெற்றி பெறுகிறோமா என்றால், அது இல்லை என்பதுதான் என்னுடைய எண்ணம். அது வெற்றி பெறச் செய்ய என்ன செய்ய வேண்டும் என்ற ஆக்க ரீதியான என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். சாதாரண மக்கள், கூலி வேலை செய்து வாழ்க்கை நடத்துகிறவர்கள், தினமும் மூன்று நான்கு ரூபாய் கிடைக்கக்கூடிய கூலி வேலைக்கு இப்பொழுது செல்வதில்லை. நாள் முழுதும் வேலை செய்தால் அவ்வளவுதான் கிடைக்கும். ஆனால் ஐந்து பக்கா அரிசியை காரிலேயோ, பிளஷரிலேயோ கொண்டு சென்றால், 15 ரூபாய் கிடைக்கும். ஆகவே எல்லோ ருக்கும் எளிதாக சிரமம் இல்லாமல், அதிகக் கஷ்டமில்லாமல், அதிகம் சம்பா திக்கிற வேலை எது என்றால், இப்பொழுது அரிசி கடத்துவது என்ற வேலை தான். அது நடந்துகொண்டிருக்கிறது. அதைத் தடுப்பதற்கு பறக்கும்

படை—காவல் படை என்றெல்லாம் பணியாற்றுகிறார்கள். மிகச் சிறப்பாக அவர்கள் செய்தாலுங்கூட அவர்களால் கண்டுபிடிக்க முடியாத நிலைமை இருக்கிறது. சிலவிடங்களிலே கீழ்மட்ட அதிகாரிகள் அதற்கு உடந்தையாக இருந்து விடுகிற சூழ்நிலையும் இருக்கிறது. இதைத் தடுப்பதற்கு ஒரு நல்ல நிலையை நாம் ஏற்படுத்த வேண்டும். லாபத்தைக் கருதி அல்லது வருவாயைக் கருதித் தான் இந்தத் தொழிலிலே ஈடுபடுகிறார்கள். பத்து நாள் அரிசியைக் கடத்திக் கொண்டு சென்றால், தினசரி 10 ரூபாய் லாபம் வருகிறது. ஒரு நாள் அரிசியைப் பிடித்துக்கொள்கிறார்கள். அரிசியை யார் கடத்துகிறார்களோ அவர்கள் கோர்ட்டுக்கு இழுத்துச் செல்லப்பட்டு பத்து நாட்கள் அலைக்கழிக்கப்படுவார்களேயானால், அந்தத் தொழிலிலே சாதாரணமானவர்கள் ஈடுபடமாட்டார்கள். சாதாரண மக்கள் ஒரு மாதம் ஈடுபட்டால், 500 ரூபாய் சம்பாதிக்கிறார்கள். ஒரு நாள் பிடித்துவிட்டால் 100 ரூபாய் போனாலும், 400 ரூபாய் மிச்சம். அதைவிட ஒரு நாள் அவர்களைப் பிடித்து, நாகர்கோயில் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலே வழக்கு பதிவு செய்து, வழக்குத் தொடுத்து வேலைக்குச் செல்ல முடியாமல் 10 நாட்கள் அலைவார்களேயானால், அந்தத் தொழிலிலே நிச்சயம் இறங்கமாட்டார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அதற்கு இப்பொழுதிருக்கும் சட்டம் இடந்தரவில்லையென்றால், சட்டத்தில் திருத்தம் செய்து, ஒரு படி அரிசி கொண்டு சென்றாலும் வழக்குப் பதிவு செய்து கோர்ட்டுக்குக் கொண்டுவர வேண்டும். அப்படிச் செய்வதால், இரண்டு லாபம் இருக்கிறது. ஒன்று, யாரிடத்தில் அரிசி பிடிக்கப்பட்டாலும் வழக்கு பதிவு செய்யப்படும் என்றால், சாதாரணமானவர்கள் அந்தத் தொழிலிலே ஈடுபடமாட்டார்கள். அரிசி போய்க்கொண்டிருக்கட்டும். நாம் கொஞ்சம் விட்டுவிட்டுப் போகலாம் என்று கடைசி நிலை அரசு ஊழியர்களும் நினைக்கமாட்டார்கள். இப்பொழுது ஜீப்பிலே போகிறார்கள். அரிசி 10, 15 பேரிடமிருந்து பிடுங்கப்படுகிறது. கடைசியிலே ஜீப் நிறையக் கிடைக்கும். ஐந்தாறு அதிகாரிகள் ஆளுக்குக் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக்கொண்டது போக, பாக்கி கணக்கிலே வருகிறது. வழக்குப் போட வேண்டும் என்று இப்பொழுது சட்டமில்லை. ஆகவே கடத்தப்படுவதைத் தடுப்பதிலே அவர்களுக்கு அக்கறை இல்லை. இந்த நிலையை மாற்றுவதற்கு வழக்குப் போட்டு நடவடிக்கைகளை எடுக்க சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்பொழுதுதான் மக்கள் கடத்தலில் ஈடுபடுவதைத் தடுக்க முடியும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கேரளாவிலே என்ன சொல்லிக்கொள்கிறார்களென்றால், இவர்கள் எவ்வளவுதான் சட்டம் போட்டுத் தடுத்தாலும் எங்களுக்கு என்ன, அரிசி விலை உயரும், இவ்வளவுதான். முன்னாலே 100 ரூபாய் கொடுத்து ஒரு லாரியைக்

கொண்டுவர வேண்டுமென்றால், இப்பொழுது 1,000 ரூபாய் கொடுக்கவேண்டி வரும் என்று சொல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அம்மாதிரி கடத்திக் கொண்டு போவதற்கு அதிகாரிகளின் துணையும் இருக்கிறது. அப்படிப்பட்ட அதிகாரிகளைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். பெரிய அதிகாரிகளைத் தண்டித்தால்தான் முடியும். சாதாரண அதிகாரிகளைத் தண்டித்தால் முடியாது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாறுவேடம் போட்டுக் கொண்டு, பெரிய அதிகாரிகளைக் கூட சோதிக்க அந்தப் பகுதிக்கு வரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அவர்கள் ஒரு தடவை வந்து விட்டுச் சென்றால், அங்கே உள்ள சிறிய அதிகாரிகள் கூட மந்திரியே மாறுவேடம் போட்டு வருகிறார் என்று அச்சப்படுவார்கள். களியிக்காவிளை யிலே—(குறுக்கீடு)—என்ன மாறுவேடம் போடவேண்டும் என்று சொன்னால் தெரிந்துவிடும். தனியாகக் கேட்டால் சொல்கிறேன். கூட காவல் அதிகாரி களை வைத்துக்கொண்டு ஒரு தடவை சுற்றிவிட்டு வந்துவிட்டால், யாராவது புதிய ஆளைக் காணும்போது, ஒரு வேளை அமைச்சர்தான் மாறுவேடத்திலே வருகிறாரோ என்று எண்ணிக்கொண்டு கொஞ்ச காலம் நடிப்பை வெற்றிகர மாக முடிப்பார்கள். அதிலே தவறு செய்பவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. கன்னியாகுமரி மாவட்டம் 33 மைல் கடற்கரையைக் கொண்டது. அரிசியை நல்ல சாக்கிலே கட்டி, பிளாஸ்டிக் தாளைப் போட்டு கட்டி, கடலிலே தூக்கிப் போட்டு விடுகிறான். கொஞ்ச நேரங் கழித்து எடுக் கிறான். எனவே கடற்கரையைக் கவனிக்க தனியான படை வேண்டும்.

(பிற்பகல் 5.30)

இவ்வளவும் கொஞ்சம் கொஞ்சம் செய்து வருகிறோம். நான் முன்னாலேயே சொன்னேன். நாங்கள் தமிழகத்தோடு 1956-இலே சேர்ந்தோம். இப்பொழுது 1974. ஏறக்குறைய 17 வருடங்கள் முடிந்துவிட்டன. 17 வருடமாக அரிசி யைக் கடத்திச் செல்லாமலிருப்பதற்கு நாம் எவ்வளவு ரூபாய் செலவு செய்கிறோம்? அத்தனை ரூபாயையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு மாஸ்டர் பிளான் போட்டு, இதற்கென்று ஒரு திட்டம் வகுத்தால், எல்லையோரத்திலே கோட்டை சுவரே கட்டி, இரண்டு பர்லாங்கிற்கு ஒரு ஆளை வைத்து துப்பாக்கி மூலம் பாதுகாத்துக்கொள்ள முடியும். இதைப்பற்றி நமக்கு என்ன என்று இருந்து விடக்கூடாது. இது ஒரு நிரந்தரப் பிரச்சினை தமிழ் நாட்டுக்கு. இப்போது மட்டுமில்லை, இன்னும் ஒரு நூறு ஆண்டுகள் கழித்தாலும் இந்தப் பிரச்சினை இருக்கத்தான் போகிறது. காரணம், கேரள மாநிலம் உணவிலே ஒருக்காலும் தன்னிறைவு பெற முடியாது. உணவு உற்பத்தி செய்வதற்கான அளவிற்குப் போதுமான நிலம் இல்லை. தண்ணீர் ஏராளமாக இருக்கிறது. ஆனால்

விணுக மேற்குக் கடலில் போய் விழுந்தாலும், நமக்கு அதைத் திருப்பி விடுவதற்கு மனமல்லாதவர்களாக இருக்கின்றார்கள். எனவே நமக்குத்தான் நிரந்தரமான பாதுகாப்பைத் தேடிக்கொள்ள வேண்டும். உதாரணமாக குழித்துறை ஆறு இருக்கின்றது. நம் எல்லைப் பகுதியில் ஐந்து மைல் பகுதிக்கு உள்ளடங்கிய முறையில் ஓடுகிறது. இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் காவல் துறை அதிகாரிகளிடத்திலும்கூடப் பேசியிருக்கிறேன். அவர்களும் இதை ஓரளவிற்கு ஒப்புக்கொண்டு ஆராய்வதாகச் சொல்லியிருக்கின்றார்கள். நான் கூறிய யோசனை என்னவென்றால், அந்த ஆற்றின் கீழ்க் கரையைச் சற்று அகலப்படுத்தி ஜீப்கள் போவதற்கு ஏற்ற வகையில் அங்கே ரோடை அமைத்து ஒரு மொபைல் பார்டியைப் போட்டுக் கண்காணிக்க வேண்டும் என்பதுதான். ஆனால் அதிலுள்ள பிரச்சினை, அதிலே சில பகுதிகள் தனியார் வசம் இருப்பதாகத் தெரிகின்றது. அதை நாம் கையகப்படுத்திக் கொள்ளுவதற்கு சட்டம் இருக்கும்போது, அதை உபயோகப்படுத்தி அந்த நிலங்களை அரசு எடுத்துக்கொண்டு அந்தப் பாதையைப் போட்டு இந்த நிலையை உருவாக்க வேண்டும். இப்படி ஒரு நிரந்தரமான முறையில், இந்தப் பகுதியிலும் கடற்கரைப் பகுதியிலும் போதிய அளவிற்குக் கண்காணித்தால்தான் பிரச்சினை தீரும்.

அடுத்து, இப்போது புறங்காடு தாலுக்காவிலே 18 கிராமங்களிலும் கல்குளத்தில் 10 கிராமங்களிலும் ஸ்டேசுடரி ரேஷனிங் என்று கொடுத்து வருகின்றார்கள் 2,000 கிராம் என்று. நாகர்கோவிலில் இரண்டு வாரத்திற்கு ஒரு முறை என்ற அளவில் கொடுத்துக்கொண்டு வருகின்றார்கள். இதை நியாய விலைக் கடைகள் மூலம் வாரத்திற்கு ஒரு முறை என்ற அளவில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்து தோவாளை, அகஸ்தீஸ்வரம் தாலுக்காவிலும் ஏழை மக்களுக்கு அறுவடை முடிந்து மூன்று மாதங்கள் கழித்து—அறுவடை சமயத்தில் வேண்டாம், அது முடிந்து மூன்று மாதம் கழித்து,—பற்றுக்குறை காலத்திலே நியாய விலைக் கடைகள் மூலம் சிறிதளவாவது அரிசி ரேஷன் வழங்குவதற்கான திட்டத்தினை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் ஒன்று, தமிழ் நாட்டிலே பல்வேறு பகுதிகளில் அரிசியின் தரத்திற்குத் தக்கபடி படி ரூ. 2.50-லிருந்து ரூ. 3 வரையில் விற்கிறது. ஆனால் கோளத்தில் படி ரூபாய் ஏழு என்ற அளவிலும் விற்கிறது. ஆனாலும் திருவனந்தபுரம் ஓட்டல்களிலே 1½ ரூபாய் அல்லது 2 ரூபாய்க்கு நல்ல சாப்பாட்டைச் சாப்பிடுகிறோம். ஆனால் நல்ல அரிசி 2½ ரூபாய் என்று விற்கும் சென்னை நகரிலுள்ள ஓட்டல்களில் அதைவிடக் கூடுதலாகக் கொடுத்துச் சாப்பிட்

டாலும், அதைவிட தரம் குறைவான உணவைச் சாப்பிட வேண்டியிருக்கிறது. வியாபாரிகளும் ஓட்டலை நடத்துகின்றவர்களும் செய்யும் நிலை இது. இதற்குக் காரணம் என்ன? கேரளத்தில் கன்ஸ்யூமர் ரெஸிஸ்டென்ஸ்—உண்பவர்களுடைய எதிர்ப்பு இருக்கின்றது. திருவனந்தபுரம் அல்லது வேறு கேரள நகரங்களில் நேற்று வரையில் 1½ ரூபாய் என்று இருந்தது இன்றைக்கு இரண்டு ரூபாய் என்றால், சாப்பிடப் போகின்றவர்களே சண்டை போடுவார்கள். அதிகாரிகள் வரவே வேண்டாம். அவர்களே போராடுவார்கள். அங்கே கன்ஸ்யூமர் ரெஸிஸ்டன்ஸ் இருக்கின்றது. இங்கே இல்லை. இங்கே தமிழர்களுடைய பண்பெல்லாம் மாறிவிட்டது. எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளுவதுதான் நமது பண்பாடு இப்போது. ஹோட்டல்காரர்கள் எதை எப்படிப் போட்டாலும் பேசாமல் சாப்பிட்டு வருவதுதான் இப்போது சிறந்த பண்பு.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அப்படிச் சொல்லுவது, அநீதியை எதிர்ப்பது கேரளப் பண்பு, அநீதியைப் பொறுப்பது தமிழர் பண்பு என்று ஆகிவிடும். அப்படி அல்ல. காலம் வரும்போது எதிர்ப்பார்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் : துணைத் தலைவரவர்களே, தாங்கள் சொல்லும் அந்தக் கருத்தில்தான் சொல்லுகிறேன். அநீதியைக் கண்டு பொறுமை காட்டுவது நல்லதல்ல. துணைத் தலைவர் அவர்களுடைய திருத்தத்தை மனமாற ஏற்றுக்கொள்ளுகிறேன். இதே நேரத்தில் 'கன்ஸ்யூமர் ப்ரிஃபெரன்ஸ்' என்றும் இருக்கின்றது. அதையும் கவனிக்க வேண்டும். அதாவது வாங்கி உண்பவர்கள் எதை விரும்புகின்றார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். தமிழகத்திலிருந்து கேரளத்திற்கு எவ்வளவு அரிசியைக் கொடுக்கிறோம் என்று பார்த்தால், ஸென்ட்ரல் பூலிலிருந்து 1,15,000 டன் கொடுத்திருக்கிறோம். இதைத் தவிர தனியாக 9,000 டன் கொடுத்திருக்கிறோம். அவர்கள் சம்பா அரிசியைத்தான் நம்மிடமிருந்து எதிர்பார்க்கின்றார்கள். நாம் கொடுக்கும் வெள்ளை அரிசியை அவர்கள் சாதாரணமாக விரும்புவதில்லை. சிவப்பாக உள்ள சம்பா அரிசியைத்தான் அவர்கள் விரும்புகின்றார்கள். இதுதான் அங்குள்ள கன்ஸ்யூமர் ப்ரிஃபெரன்ஸ். கன்னியாகுமரி மாவட்டத்தில் சம்பா அதிகமாகப் பயிராகிறது. அங்கு வந்தபோது நமது மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள்கூட இந்தச் சிவப்பு அரிசியைப் பார்த்துவிட்டு இவ்வளவு சிவப்பாக இருக்கிறதே என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்கள். இந்த மோட்டா ரக அரிசியை கேரளத்தில் அதிகமாக விரும்புகின்றார்கள். ஆகவே, கன்னியாகுமரியில் விளையும் இதைக் கேரளத்திற்கு அனுப்பிவிட்டு, தமிழகத்தின் மற்ற மாவட்டங்களிலே விளையும் அரிசியை கன்னியாகுமரிக்கு அனுப்பினால் பயனுள்ளதாக இருக்கும்.

அடுத்து, பதுக்கலைப்பற்றிச் சொல்லப் போனால், இந்த நாட்டிலே அந்நிய நாட்டிற்கு உளவாளியாக ஒருவர் இருந்தால், அந்த நபர் எவ்வளவு பெரிய குற்றவாளியாகக் கருதப்படுவாரோ அதைப் போலவே இப்படி உணவுப் பண்டங்களைப் பதுக்குகின்றவர்களைக் கருதி தண்டிக்கும் சூழ்நிலை உருவாக வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். 'மனிதன் உணவினை மனிதன் பறிக்கும் பழக்கம் உண்டோ?' என்று பாரதியார் அன்றைக்குப் பாடினார். இதுதான் பழக்கம், நிரந்தரப் பழக்கம். இப்படிப் பதுக்கிவைத்துப் பெரும் அளவில் பணத்தைச் சம்பாதித்து நான்கு பங்களா மூன்று கார்கள் என்று வைத்துக்கொண்டு என் கல்லூரிக்கு ஒரு முப்பது ரூபாயை எதற்காவது கொடுத்துவிட்டால், அவரை வாழ்த்தி வணங்குவது என்பது நம் எல்லோருடைய பழக்கமாகிவிட்டது. ஆகவேதான்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: பாரதியார், 'இனியும் உண்டோ' என்றுதான் சொன்னார்.

திரு. கே. ராஜாராம்: இருக்கிறது. இனியாவது இல்லாமல் இருக்கட்டும், எனவேதான், 'இனியும் உண்டோ' என்றார்.

திரு. எம். சங்கரலிங்கம்: ஆனால் இதைக் கண்டித்துப் பாடியிருக்கிறார். பாரதியின் வாரிசாக நம் துணைத் தலைவர் அவர்களே இந்தக் கவிதையைத் திருத்திப் பாட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆக, பதுக்குவது, கொள்ளை லாபம் அடிப்பது என்பது நிரந்தரமான வழக்கமாகி விட்டது. அப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபட்டுள்ளவர்கள்தான் சமுதாயத்திலே பெரிய மனிதர்கள் நமது நாட்டில். இப்போது நமது மாநிலத்தில் 50 குவிண்டாலுக்கு மேலே இருப்பு வைத்திருக்கக் கூடாது. வைத்திருந்தால் கணக்குக் காண்பிக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. அதை முழுமையாக அமுல்படுத்த வேண்டும். இதையெல்லாம் மிகக் கண்டிப்பான முறையில் கண்காணித்து நமது மாநிலத்தில் உணவு நிலையை மேம்பாடு அடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் இவ்வளவு உணவு தானியத்தை உற்பத்தியாளர்கள் அக்கறையுடன் உற்பத்தி செய்து வருஷா வருஷம் உணவுத் துறையில் அபிவிருத்தியைக் காட்டினாலும், அவர்களுக்கு உள்ள பிரச்சினைகளையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும். இன்றைக்கு உரம், பூச்சிக் கொல்லி மருந்து இவைகள் முறையாகக் கிடைக்காமல் அதிக விலையில்தான் அவற்றை விவசாயிகள் வாங்கவேண்டிய நிலை இருக்கின்றது. இவற்றைத் தவிர அவர்கள் அன்றாட வாழ்க்கைக்கு வாங்கும் மற்ற பண்டங்களின் விலையும் மிக அதிக அளவிற்குப் போய்விட்ட நிலையில் அவர்களுக்கு இப்போ

துள்ள நெல் விலை கட்டுப்படி ஆகுமா என்றால் இல்லை. ஒரு ஜோடி மாட்டை ரூ. 1,500-க்குக் குறைவாக வாங்கினால், அது கலப்பையில் வராது. ஒரு வண்டி குப்பை எருகூட ரூ. 30-க்குக் கிடைப்பதில்லை. இந்த நிலையில் அவர்கள் விவசாயத்தை விட்டு விட்டு வேறு ஏதாவது தொழிலுக்குப் போக லாமா என்று அஞ்சும் நிலை ஏற்பட்டிருக்கிறது. உணவு உற்பத்தி செய்யும் பகுதியில் ஸப்ஸிடி ரேட்டில் அவர்களுக்குப் பொருள்களும் அதே போல நுகர் வோருக்கும் ஸப்சிடி ரேட்டில் உணவுப் பண்டங்களும் கிடைக்க வழி செய்ய வேண்டும். இலங்கையில் அப்படி இருப்பதாகச் சொல்லுகின்றார்கள். ஸப்ஸிடி கொடுப்பது போன்ற முறைகளிலே அங்கே உணவுப் பண்டங்களை வழங்குகின்றார்கள். இப்போது அங்கே உணவுப் பற்றாக்குறை மிகக் கடுமை யாக இருக்கிறது என்றும் சொல்லுகின்றார்கள். இங்கே அப்படிப்பட்ட பற்றாக்குறை வராது இருக்க வேண்டுமானால், உணவு தானியத்தை உற்பத்தி செய்கின்றவர்கள் இதிலிருந்து வேறு வியாபாரப் பொருள்களை, கேஷ் கிராப்பை உற்பத்தி செய்வதில் ஈடுபடுவார்களே தவிர, நெல் உற்பத்தியில் கவனம் செலுத்த மாட்டார்கள் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. அடுத்த ஆண்டு நாம் கேட்கும் அளவிற்கு மத்திய அரசு, உரம், பூச்சிக் கொல்லி மருந்து இவற்றைத் தருமா என்ற ஐயப்பாடு நமக்கு இருந்து வருகிறது. சென்ற ஆண்டும் நமக்குப் போதிய அளவு தரவில்லை. வரும் ஆண்டும் இதே நிலைமை நீடித்தால் உணவு உற்பத்திக்கு பாதகம் ஏற்படும், தட்டுப்பாடு ஏற் படும் என்று சொல்லிக்கொண்டு, நாம் தேவையான உர வகைகளைப் பெற வேண்டும், அதற்காக நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்கா ரிடம் முறையிட்டால் போதும் என்று இருந்துவிடாமல், போராட்டமே நடத்த வேண்டும். அத்துடன் இன்னும் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன், இப் போது பதுக்கல் போன்ற குற்றம் செய்கின்றவர்களைக் காண்பித்துக் கொடுக் கின்றவர்களுக்கு பத்து சதவிகிதமாகக் கொடுக்கின்றார்கள். இன்கம்-டாக்ஸில் அப்படி ஒரு முறை இருந்து வருகிறது. இந்த வகையில் மேலும் ஊக்கம் கொடுத்து பதுக்கலைத் தடுக்க வேண்டும், கடத்தலைத் தடுக்க கன்னியாகுமரி எல்லை ஓரத்தில், களியக் காவல் மற்ற எல்லா எல்லைப் பகுதிகளுக்கும்....

(பிற்பகல் 5.40)

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இதை இடையிலே சொல்லலாமென்று நினைக்கிறேன். கண்டுபிடிப்பவர்களுக்கு 10 சதவீதம் என்று கொடுப்பதென்று வரையறுத்து சட்டமன்றத்தில் ஏற்கெனவே அறிவித்திருக்கிறோம். இப்போது திருத்தம் பண்ணியிருக்கிறோம். வழக்குப் போட்டு, நீதிபதியிடம் போய் வழக்கில் கன்விக்ஷனை பிறகு இந்தத் தொகை கொடுப்பது என்ற நிலை இருந்தது. சென்ற மாதத்தில் புதிய உத்தரவு

போட்டிருக்கிறோம். பிடிப்பவர்களுக்கு வழக்குப் போட்டு கன்விக்ஷனை பிறகு பணம் கொடுப்பதில் 'டிலே' ஆகிறது. ஆகவே கையோடு அவருக்கு உடனே கொஞ்சம் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் 1 சதவீதம் முன்னதாகவே கொடுக்கிற புதிய திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். இது தமிழ் நாடு பூராவும் அமுல் நடக்குமென்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: கடைசியாக, அரிசி வினியோகம் செய்கிற பகுதிகளில் கன்னியாகுமரி மாவட்டம் ஒரு பகுதியாக இருக்கிறது. அங்கேயெல்லாம் கூட்டுறவுச் சங்கங்களின் வழியாக வினியோகம் செய்வது சாலச் சிறந்தது என்று ஊக்குவித்து வருகிறார்கள். எல்லாவிதமான கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கொடுக்க வேண்டும். அரிசிக்கென்று தனியாக கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில சங்கங்களுக்குக் கொடுத்து சில சங்கங்களுக்குக் கொடுக்காத நிலையை மாற்றி, எல்லா கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் அரிசி வினியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. கே. ராஜாராம்: துணைத் தலைவரவர்களே, மனிதனுக்கு முக்கியமான வாழ்வுப் பிரச்சினை உணவுப் பிரச்சினை. இதைப்பற்றி மேலவையில் இவ் வருஷம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்வது என்று நாம் ஒப்புக்கொண்டு விவாதிப்பது மிகவும் பொருத்தம் என்று இதை இந்த வருஷம் சேர்த்தோம்.

(மாற்றுத் தலைவர் திரு. எம். எம். பக்கர் தலைமை)

பொதுவாக, உணவுத் துறையை நிர்வகிக்கும் எந்த அமைச்சரும் அது எந்தக் கட்சியைச் சேர்ந்த அரசாங்கமாக இருந்தாலும், கடைசி வரையில் மக்களைத் திருப்தி செய்து நல்ல பெயருடன் அவர்கள் விளங்கியதில்லையென்று சொல்லலாம். இதில் விதி விலக்காயிருந்தவர் அமரர் ரபி அகமத் கித்வாய் ஒருவர்தான். மத்திய அரசாங்கத்திலும் சரி, மாநில அரசாங்கங்களிலும் சரி, உணவுத் துறையை ஒப்புக்கொண்டு நிர்வகித்து வரும் அமைச்சர்கள் மக்களைத் திருப்தி செய்ய முடியாது. பலவிதமான கஷ்டங்கள் வரும் என்பது அனைவரும் அறிந்த ஒரு விஷயம். நமது மாநிலத்தைப் பொறுத்தவரை, பொறுமைக்குணம் நிறைந்த புதிய அமைச்சர் மாண்புமிகு திரு. மன்னை நாராயணசாமி அவர்கள் இதை ஏற்றுக்கொண்டு பல முக்கிய பிரச்சினைகளைத் தீர்த்திருக்கிறார்கள். பொதுவாக இந்த அரசாங்கம் அடிக்கடி உணவு அமைச்சர்களை மாற்றி வருவது தான் சொன்ன இந்தக் கொள்கையின் அடிப்படையில் தான் இருக்குமென்று எண்ணுகிறேன். ஏனென்றால் நீடித்து ஒருவர் உணவுத் துறையை வைத்துக்கொண்டிருப்பது சிரமமான காரியம். நமது மாநிலத்தைப்

பொறுத்தவரையில், நெல் உற்பத்தியை ஓரளவு நாம் பெருக்கியிருக்கிறோம். இன்னும் நம்மில் பெரும்பாலோருக்கு உணவு என்றாலே, அரிசிதான் நினைவிற்கு வருகிறது. ஆனால் உண்மை என்னவென்று பார்த்தால், அது அல்ல. மக்கள் ஜனத்தொகையில் பெரும்பாலோர் சாப்பிடுவது அரிசி மட்டும் அல்ல. மற்ற தானியங்களும்தான். இது அரசாங்கப் புள்ளி விவரத்திலிருந்து தெரிய வரும் என்று நான் எண்ணுகிறேன். ஆனால் அரிசி வேளாண்மையைப் பொறுத்தவரையில், நாம் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். இன்னும் கூட, அடைய வழி இருக்கிறது. இதை விவசாயத் துறை கவனித்துச் செய்ய வேண்டும். புதிய ரக ஒட்டு விதைகள் வந்த பிற்பாடு, கெமிகல் மென்யூர் என்று சொல்லக்கூடிய இரசாயன உரமும், பூச்சிக் கொல்லி மருந்து களும் மிக அதிகமாகத் தேவைப்படுகின்றன. இந்தத் தேவையை நாம் பூர்த்தி செய்ய முடியவில்லை. இப்போது விவசாயிகள் கேட்குமளவிற்கு இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வோமானால், இன்னும் கூட நமது மாநிலத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர இயலும். ஆனால் அது போதாது என்பது தான் என்னுடைய முக்கியமான கோரிக்கை. நெல்லிலே கவனம் செலுத்திக் கொண்டிருப்பதோடு கூட, வரகு, கேழ்வரகு, கம்பு, சோளம் போன்ற புஞ்சை தானியங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டியது மிக முக்கியமென்று எண்ணுகிறேன். ஏனெனில் கிராமங்களில் சென்று பார்ப்போமானால், ஏதோ கொஞ்சம் வசதியாக இருப்பவர்கள் தான் இரண்டு வேளை, மூன்று வேளை அரிசி சாப்பிடுவார்கள். நெல் அரிசி என்று சொல்வார்கள். மற்றவர் களெல்லாம் வரகு அரிசி, குதிரைவால் அரிசி இவைகளைச் சாப்பிடுவார்கள். நெல் அரிசி சாப்பிடுபவர்கள், ஒரு ஆயிரம் ஜனத்தொகை உள்ள குக்கிராமத்தில் 200 பேர் அல்லது 300 பேர் இருக்கலாம். பெரும்பாலோர் சாப்பிடுவது அவர்களுக்கு மலிவாகக் கிடைக்கக்கூடிய மற்ற தானியங்கள்தான். இதில் நமது அரசு போதிய கவனம் செலுத்தவில்லை, இதைப் பெருக்குவதற்கு போதிய கவனம் செலுத்தவில்லை என்பது என்னுடைய குறை. கவனம் முற்றிலும் செலுத்தவில்லை என்று சொல்லவில்லை. ஓரளவு செலுத்துகிறார்கள். இன்னும் அதிகமான அளவில் கவனம் செலுத்த வேண்டும். கம்பு, சோளம், வரகு, கேழ்வரகு, சாமை போன்றவைகள் புஞ்சை தானியங்கள். எங்கள் தெற்கு ஜில்லாக்களில் வரகு முக்கியமான உணவுப் பொருள். தமிழ்நாட்டில் வடக்கு ஜில்லாக்களில் சோளம் முக்கியமான உணவுப்பொருள். வரகும், கம்பும், சோளமும்தான் திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் கிராமங்களில் உள்ளவர்கள் அதிகமாக உபயோகிப்பவை. அங்கே இந்த இரண்டிலும் அதிக உற்பத்தியை, விளைச்சலை ஏற்படுத்தக்கூடிய பசுமைப் புரட்சியைக் கொண்டுவர வேண்டும். இந்த தானியங்களில்

கவனம் செலுத்துவதற்கு அரசாங்கம் முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உணவுப் பிரச்சினை மீது பேசுகிறோம். விவசாயப் பிரச்சினையைப்பற்றி நான் சொல்கிறேன் என்று அமைச்சரவர்கள் எண்ணக் கூடாது. விவசாயம் செய்தால்தான் உணவு கிடைக்கும். அடிப்படை அதுதான். இதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், எண்ணெய் வித்துக்களைப் பெருக்குவதற்கு வசதிகள் நிறைய இருக்கின்றன. பொது வாக எள் சாகுபடி செய்வதில் நமது கிராமங்களில் விவசாயிகள் அதிக ஆவலாக இருக்கிறார்கள். முக்கியமாக வானம் பார்த்த பகுதிகள் என்று சொல்லக் கூடிய, கண்மாயில் மழை பெய்த நீரைத் தேக்கி பயிர் செய்யக் கூடிய பகுதிகளில் நெல்லை அறுத்தவுடனே எள் விதைத்து விடுகிறார்கள். 90, 85 நாட்களில் எள் கிடைக்கும். இதை ஊக்குவிக்க வேண்டும். வீரிய வித்து கொடுத்து விதைக்கும்படி செய்யலாம். இப்போது சூரியகாந்தி விதை கொடுக்கிறார்கள். அதைப் போல எள் விதையும் அதிகமாகக் கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

கோதுமை வினியோகம் போதுமானபடி இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை நகரத்தைப் பொறுத்தவரை, அரசாங்கக் கடைகளில் போதுமான அளவிற்குக் கிடைக்கவில்லை. இதற்காக கார்டு கொடுத்து, டாக்டர் சர்டிபிகேட் இருந்தால்தான், கோதுமை கொடுக்கப்படு மென்று சொல்கிறார்கள். இவ்வளவு தாரம் இது அவசியமா என்று புரிய வில்லை. அவர்கள் கொடுக்கும் கோதுமை, மா கோதுமை, வெள்ளை கோதுமை இப்படித்தான் கிடைக்கிறது. சம்பா கோதுமை கிடைப்பது ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. அமைச்சரவர்கள் அளித்திருக்கும் குறிப்பில் கோதுமை கிலோ 1 ரூபாய்க்குக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் கடைகளில் ஒரு கிலோ 6 ரூபாய் 5 ரூபாய் என்று சம்பா கோதுமை கிடைக்கிறது. இந்த சம்பா கோதுமை, அதாவது brown wheat இந்த ரேஷன் ஷாப்புகளில் ஓரளவு கிடைக்க எற்பாடு செய்ய முடியுமாவென்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, எங்களுக்குக் கொடுக்கப்படுகிற 9 ஆயிரம் டன்னில் சம்பா கோதுமை என்றெல்லாம் வேரைட்டீஸ் கிடையாது. அவர்கள் எதைக் கொடுக்கிறார்களோ அதைத் தான் நாங்கள் கொடுக்க முடியும்.

திரு. எஸ். டி. ஆதித்தன் : தலைவரவர்களே, கோதுமை மாவாகவும், தானியமாகவும் கொடுக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். கோதுமை தானியமாக வடக்கத்திக்காரர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. 'விட் ஈட்டர்' என்று சர்டிபிகேட் வைத்திருக்கிறவர்களுக்கு சம்பா கோதுமை, பஞ்சாபிலிருந்து வருவதைக் கொடுப்பதாகவும் மற்றபடி சின்ன கோதுமை, மாவு அரைக்கக் கூடிய கோதுமை மற்றவர்களுக்கு கொடுக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. இது வாஸ்தவம் தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அது சம்பா கோதுமை அல்ல. மற்றவர்களுக்குக் கொடுப்பது போல அரைக்கப்பட்ட கோதுமையை ஜைன மதக்காரர்கள் வாங்கிக்கொள்வதில்லை, காரணம் பூச்சிகள், வண்டுகள் அதில் சேர்ந்துவிடும் என்று அவர்கள் கருதுகிறார்கள். அவர்களே கோதுமையை வாங்கி தாங்களே நேரில் அரைத்துக் கொள்ளுதல் என்ற முறையை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அப்படி உள்ளவர்களுக்கு மட்டும் இந்த கார்டு மூலம் கோதுமை வழங்கப்படுகிறது. மற்றவர்களுக்கு, சர்டிபிகேட் வாங்கியிருந்தால் கூட, கோதுமை மாவுதான் கொடுக்கிறோம்.

(பிற்பகல் 5.50)

திரு. கே. ராஜாராம் : வெளிமார்க்கெட்டில் சம்பா கோதுமை கிடைப்பதில் ஒன்றும் கஷ்டமில்லை. விலையைப்பற்றித்தான் நான் சொன்னேன். அரசாங்கத்தால் மாவு, கோதுமை, ரவை கொடுக்கப்பட்டு வருகிறது. சம்பா கோதுமை மட்டும் அரசாங்கத்தால் விநியோகிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் கடைத் தெருவில் கிடைக்கிறது என்பதை அறிய வேண்டும். கிலோ ஒரு ரூபாய் விற்கும்போது, வெளியே ஆறு ரூபாய்க்கு விற்கப்பட்டு வருகிறது. சாப்பாடாக சமைத்துச் சாப்பிடும் சிலருக்கு சம்பா கோதுமைதான் வேண்டியிருக்கிறது. அவர்கள் கிலோ ஆறு ரூபாய் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசாங்கத்திடம் கேட்டு, முழு அளவையும் வெள்ளை கோதுமையாக ஒதுக்குவதற்குப் பதிலாக, ஓரளவு சம்பா கோதுமையையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டு வாங்கி விநியோகிக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தப் பருப்பு வகைகள். துவரை, உளுந்து, பச்சைப் பயிறு இவை இன்னும் கொஞ்சம் அதிகமாக உதவியையும் உற்சாகத்தையும் காட்டிலும் இன்னும் கொஞ்சம் அதிகமாக உதவியையும் உற்சாகத்தையும் விவசாயிகளுக்கு நாம் கொடுத்தால், அதிகமாக உற்பத்தி செய்யலாம், அதற்கு

வழி வகை இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் கொண்டைக்கடலை மட்டும் நம்முடைய மாநிலத்தில் உற்பத்திக்கு வருவதில்லை. நம்முடைய மாநிலத்தில் 2,000 குவிண்டால்தான் உற்பத்தியாகிறது. 2,40,000 குவிண்டால் அளவுக்கு வெளியேயிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. தஞ்சை ஜில்லாவில் உளுந்தை அதிகமாக உற்பத்தி செய்யலாம். உளுத்தம் பருப்பு அதிகம் நாட்டில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தஞ்சை ஜில்லாவில் உளுந்தைப் பயிர் செய்வதற்கு வழி இருக்கிறது. இரண்டு நெல் பயிர்கள் விளையும் காலத்திற்கு இடையேயுள்ள காலத்தில், இந்த உளுந்தைப் பயிர் செய்து உளுத்தம் பருப்பு அதிக அளவில் கிடைக்கச் செய்ய வழி இருக்கிறது. துவரை ஒரு ஆபத்தான பயிர். ஒரு வருஷத்தில் அந்தப் பயிர் நல்ல விளைச்சல் கிடைத்து, தாக்கி விட்டு விடும். சில வருஷங்களில் விதைப் பண்டத்திற்குக் கூடக் கிடைக்காமல் போய்விடும். அவைகளில் பூச்சி அதிகமாக விழுந்து விடுகிறது. பூச்சியிலிருந்து அதைக் காப்பாற்றுவதற்கு அரசாங்கம் வழி செய்தால், துவரையை அதிகமாக விளைச்சல் செய்வதற்கு வழி இருக்கிறது. 1974-ஆம் ஆண்டில், சம்பா அறுவடை காலத்தில் வெளிச் சந்தை, லெவி ஆகிய இரண்டின் மூலமாக 1,25,000 டன் கொள்முதல் செய்வது என்று கூறப்பட்டிருக்கிறது. அதிலே பிப்ரவரி மாதம் முடிவு வரையில், 79,688 டன் கொள்முதல் செய்து விட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது மார்ச் மாதம் முடிந்துவிட்டது. இந்த ஒரு மாதத்தில் அந்தக் குறிக்கோளை எட்டியிருப்பார்கள் என்று கருதுகிறேன். கிட்டத்தட்ட ஒரு லட்சம் டன்னாவது கொள்முதல் செய்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இந்த விவரத்தை உரையின் ஆரம்பத்திலேயே சொல்லியிருந்தால், நான் இதைப்பற்றிக் குறிப்பிடுவதற்கே இடமில்லாமல் போயிருக்கும். கிட்டத்தட்ட ஒரு லட்சம் டன் கொள்முதல் ஆகியிருக்கிறது என்று நினைக்கிறேன்.

வைகை, பெரியாறு, தாம்பிரபரணி, காவேரி போன்று பாசன வசதிகள் அதிகமுள்ள இடங்களில் லெவி முறை இருப்பது பாதகமில்லை. ஆனால் முற்றிலும் மழையையே நம்பி விவசாயம் செய்யும் இடங்களில் இந்த லெவி முறை மிகுந்த கஷ்டத்தை உண்டாக்குகிறது. விவசாயிகளிடமிருந்து லெவி முறையில் அங்கேயிருக்கக்கூடிய நெல்லில் ஒரு பகுதியை வாங்கிய பிறகு, அங்கே உள்ள மக்கள் அங்கு கிடைக்கக்கூடிய எஞ்சிய நெல்லையோ, அரிசியையோ வாங்க முடியாத அளவுக்கு விலை உயர்ந்து விடுகிறது. வேறு பிரதேசங்களிலிருந்து அங்கு கொண்டு வருவதற்கில்லை. நல்ல பாசனம் உள்ள இடங்களில் லெவி முறை மூலம் அதிகமாகக் கிடைக்கும். ஆகவே பாசனப் பிரதேசங்களாக இல்லாத இடங்களில் இந்த லெவி முறை தேவை தானா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்

கிறேன். நான் ஏற்கெனவே இதைப்பற்றி அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். உணவுத்துறை கமிஷனர் அவர்கள் இங்கு வந்திருப்பதால், அதை மீண்டும் சொல்லிக் கொள்கிறேன். என்னுடைய இந்த வாதத்தைச் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வறண்ட பிரதேசங்களில் இந்த லெவி முறை இல்லை என்றால், அந்த அளவுக்கு அங்கேயெல்லாம் விலை இறங்கி விற்கும் என்று கூறிக்கொள்கிறேன். இன்னும் 30,000 டன் நம்முடைய லட்சியத்தை அடைவதற்குத் தேவைப்படுகிறது. ஆகவே மேலும் மக்களைத் தொந்தரவு செய்யாமல், ஏப்ரல் 1-ஆம் தேதியிலிருந்து அந்தப் பகுதிகளில் லெவி முறையை ரத்து செய்ய உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, முக்கியமான ஒரு விஷயத்தை மட்டும் கூறி முடித்துக்கொள்கிறேன். இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தையும், உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தையும் பயன்படுத்தி பலரைக் கைது செய்தும், பல வாகனங்களைக் கையகப்படுத்தியும், சுமார் 62¼ லட்சம் பெறுமானமுள்ள பண்டங்களை, அதாவது எண்ணெய், குழந்தைகள் உணவு, கோதுமை, நெல், அரிசி இப்படிப் பலவிதமான முக்கியமான, இன்றியமையாத சரக்குகளைப் பிடித்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்கம் பிடிப்பது இவ்வளவு என்றால், பிடிபடாமல் தப்பித்துப் போயிருப்பது அதை விட எவ்வளவோ மடங்கு இருக்கும். பிடிபடுபவர்கள் நூற்றில் ஒரு பங்குதான். அதைப் போன்று பல மடங்கு வெளியே போயிருக்கும். இந்த நிலைமையில் இப்பொழுது ஒரு இரண்டு மாதங்களாக அமைச்சர் அவர்கள் தானே ஒரு நேரடி அக்கறை எடுத்துக்கொண்டு, ராணுவத்தைத் தருவித்து, நம்முடைய எல்லை ஓரங்களில் நிறுத்தி வைத்து, அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். மதுரை மாவட்ட எல்லை ஓரங்கள், அதாவது மேற்குப்புற எல்லை ஓரங்கள், அடுத்த மாநிலத்தோடு மிகவும் ஒட்டியிருக்கின்றன. அந்த இடங்களில் கடத்தல் செய்யக்கூடிய வசதிகள் அதிகம் இருக்கின்றன. அந்த எல்லை ஓரப் பிரதேசங்களில் எல்லாம் ராணுவம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று கேள்விப்பட்டேன். இதிலே செலுத்தப்படும் கவனம் வேறு ஒரு முக்கிய விஷயத்தில் செலுத்தப்படவில்லை என்று ஏற்கெனவே நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஏற்கெனவே ஒரு முறை சாட்டிய அந்தக் குற்றத்தையே மறுபடியும் சாட்ட விரும்பு

(பிற் பகல் 6·00).

கிறேன். கழுதை மேல் ஏற்றிக் கொண்டு போகிறவர்களையும், மாட்டு வண்டிகளில் கொண்டு போகிறவர்களையும், தலைச் சுமையில் கொண்டு போகின்றவர்களையும் பிடிக்கின்றார்கள். ஆனால் அதே ஆட்கள் நம்முடைய அரசாங்கக் கிடங்குகளில் இருக்கும் மூட்டைகளைச் சரியாகக் கவனித்துக்கொள்வதில்லை.

காலையில் இருந்த மூட்டைகள் மாலையில் இல்லை. அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பது இந்த அறிக்கையில் இல்லை. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கிளியனூர் என்ற இடத்தில் ஒரு சமயம் 4,000 மூட்டைகள் திருட்டுப் போய்விட்டன. கேள்வி நேரத்தில் இதுபற்றிக் கேள்வி கேட்கப்பட்டு, ஒத்துக்கொண்டார்கள். அந்த கேஸ் அதற்குப் பிறகு என்னவாயிற்று என்று தெரியவில்லை. பிடிபட்டதா, சரக்கு கைப்பற்றப் பட்டதா என்று தெரியவில்லை. அடுத்தபடியாக, திண்டிவனத்தில் ஏராளமான மூட்டைகள் காணாமற்போயிற்று. எங்கள் மாவட்டத்தின் தலைநகரமான மதுரையில் அரசாங்கக் கிட்டங்கியிலேயே பொய்யான சலான்களைக் கொண்டுவந்து காட்டி, கஜானாவில் பணம் கட்டியதாகச் சொல்லி, லாரி லாரியாக மாதக் கணக்கில் சரக்கு ஏற்றிக்கொண்டுபோய், கடைசியில் பிடிபட்டார்கள். பிடிபட்டு கேஸ் நடந்துகொண்டிருக்கிறது என்பது எனக்குத் தெரியும். இந்த மாதிரி அரசாங்க ஊழியர்களே, வேலியே பயிரைத் தின்ற மாதிரி வைத்துக்கொண்டு, எங்கோ ராணுவத்தைக் கொண்டு நிறுத்தி, தலைச் சுமையிலே 2 மூட்டை, ஒரு மூட்டை, அரை மூட்டை கொண்டுபோவதைப் பிடிப்பதைக் காட்டிலும், நம்முடைய கையில் இருக்கின்ற சரக்கை, பணம் போட்டு விலைக்கு வாங்கி வைத்திருக்கின்ற சரக்கை, பொது மக்களுடைய பணம், அரசாங்கப் பணத்தைப் போட்டு வாங்கி வைத்திருக்கிற மூட்டைகளைக் காப்பாற்ற வேண்டும். தோலிருக்க பழத்தைத் தின்ற மாதிரி, சாக்கு இருக்கும், அரிசி இருக்காது, கோதுமை இருக்காது என்று அந்த மாதிரி இருப்பதை தடுக்க, நிவர்த்திக்க அமைச்சர் அவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். அந்தக் குறைக்கு இடமில்லாமல் பாதுகாக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் என்ன முறையைக் கையாள்வாரோ, எப்படிச் செய்வாரோ தெரியாது. ஆனால் இந்தக் குற்றம் கண்டிப்பாக தடுக்கப்பட வேண்டும். அரசாங்கக் கிடங்கியிலிருந்து திருட்டுப் போவது நிற்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அப்படி ஒரு முறையை முன்பு வைக்கவேண்டிய அவசியம் இருந்தது. கிட்டத்தட்ட 6 லட்சம் டன் அளவில், புரொட்யூசர் லெவி போட்டு, அதிகமான அளவு கொள்முதல் செய்கின்ற நேரத்தில் அறவைக்கு இயந்திரம் அதிகமாக இல்லாத காரணத்தால், அதிகமான பேர்களை ஏஜெண்ட்களாக ஏற்படுத்துகின்ற நிலைமை ஏற்பட்டு, இப்படிப்பட்ட நிலைமை யெல்லாம் ஏற்பட்டது. இரண்டு ஆண்டுக் காலமாக இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடப்பது குறைந்துவிட்டது. இப்போது புதிய முறையில் சொந்தமாக மாடர்ன் ரைஸ் மில் வைத்திருக்கிறோம். இன்னும் மற்ற மில்கள் மூலம் அரைப்பதில், 1 லட்சம் டன் வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 50 ஆயிரம் டன் வரையில் அதில் அரைக்கிறோம்.

மீதம் உள்ள 60 ஆயிரம், 70 ஆயிரம் டன் அறைக்க வேண்டியதற்கு ஒரு சில ஏஜெண்டுகளை, 70-க்கு மேற்படாத ஏஜெண்டுகளை நியமித்திருக்கிறோம். இப்போது கிட்டங்கிகளை (கோடவுன்) நிர்வகிக்கும் முறைகளையெல்லாம் மாற்றி, அதற்காக தனியாக அதிகாரிகளைப் போட்டு, புதிய முறையில் கண்காணிக்கிற முறைகளையெல்லாம் ஏற்படுத்தியிருக்கிறோம் என்று ஏற்கெனவே இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். ஆகவே பொறுப்பற்ற தன்மையில் நாங்கள் நடந்துகொள்வதாக நினைக்க வேண்டாம். அப்போதும் பொறுப்பற்ற முறையில் எதுவும் நடக்கவில்லை. அதிகமான அளவில் அப்போது சேமிப்பு இருக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டு, திடீரென்று அறவை செய்யவேண்டியிருந்ததாலும், சொந்தமாக மில்கள் இல்லாத காரணத்தாலும், சில நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கலாம். இப்போதும் நமக்குப் போதிய அளவில் சொந்த மில்கள் இல்லாத காரணத்தால், 73, 80 பேரை ஏஜெண்டுகளாக நியமித்திருக்கிறோம். நல்ல முறையில் கண்காணித்து சாவியை நாங்களே வைத்திருக்கிறோம் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, எதிர்க் கட்சி என்ற முறையில் எடுத்துச் சொல்லவேண்டியது எங்களுடைய கடமை. நாங்கள் சொல்ல வேண்டிய யோசனைகளைச் சற்றுக் கடுமையான சொற்களை உபயோகித்துச் சொன்னாலும் கூட, அரசாங்கத்திற்கு உபயோகமாக இருக்கும் என்று தான் சொல்கிறோம். நாங்கள் சொல்வதை உபயோகமாக ஏற்றுக்கொண்டு மேலும் நல்ல முறையில் மக்களுடைய சொத்தைப் பாதுகாக்க வேண்டும். அதற்கு உதவியாக இருக்கும் என்பதால் தான் இதைச் சொல்கிறேனே தவிர, வேறொன்றுமில்லை.

இது ஒருபுறமிருக்க, ஏற்கெனவே பல ஆண்டுகளுக்கு முன்னால், அரசாங்கத்திலிருந்து ரைஸ் மில்காரர்களுக்கு, அவர்களுடைய சக்திக்கு மேற்பட்ட அளவுக்கு நெல்லைக் கொடுத்து அறைத்து அரிசியாகக் கொடுக்க வேண்டுமென்று கொடுத்திருக்கிறார்கள். ஒரு முறை கொடுத்த நெல்லுக்கு அரிசி வராமல் இருக்கும்போது, இரண்டாவது முறை கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அப்படியிருக்க லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நெல்லைக் கொடுத்து, அவர்கள் அறைத்து சொந்தத்தில் விற்றுவிட்டார்கள். அரசாங்கத்திற்கு அரிசியைக் கொடுக்கவில்லை. அம்மாதிரி எங்கள் மாவட்டத்தில் நிறைய நடந்திருக்கிறது. ஏற்கெனவே 2 ஆண்டுகளுக்கு முன்னால் நான் இதைச் சொன்னேன். இன்னும் அவர்களிடமிருந்து பணம் வசூலிக்கப்படவில்லை. இதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அவர்கள் சொத்துக்களை மாற்றி வைத்துவிட்டு, சென்னையில் வீடுகளை வாங்கி

யிருக்கிறார்கள். இதில் கவனம் செலுத்த வேண்டும். ஏராளமான பேர்கள் இந்த அரசாங்கத்தின் நெல்லை வாங்கி அரிசியாக அரைத்துக் கொடுப்பதாகச் சொல்லி, அரிசியை அவர்கள் சொந்தத்தில் விற்று மோசம் செய்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் புதிய ஊக்கத்தோடு உணவுத் துறைப் பொறுப்பை நிர்வகிக்க வந்திருக்கும் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். இது பழைய விஷயம். அவர் காலத்தில் நடந்ததல்ல என்று சொல்லியே சொல்கிறேன். ஆனாலும் விடக்கூடாது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இது ரொம்பப் பழைய விஷயம். முன்னாலிருந்தவர்களுக்கு சில நெருக்கடி ஏற்பட்டதால், இந்த மாதிரி நிகழ்ந்தது என்று சொல்லிவிட்டேன். இவற்றின் பேரில் எல்லாம் நீதிமன்றத்தில் வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று கேள்வி நேரத்தில் சொல்லி, புள்ளி விவரங்களைச் சொல்லியிருக்கிறேன். ஆக, இது பழைய கதை தான்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, பழைய கதை என்று சொல்லி விட்டுவிடக்கூடாது. இது அரசாங்கத்தின் கௌரவப் பிரச்சினை. மக்கள் சொத்து பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களிடமிருந்து எப்படியாவது வசூலித்துத் தீரவேண்டும். அவர்களுக்குச் சொத்தில்லை என்றால் விட்டுவிடலாம். ஆனால் சொத்தை மறைத்து என்னென்னவோ செய்கிறார்கள். அவர்களிடத்திலிருந்து வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பொதுவாக உணவுத் துறை ஏற்கெனவே நடத்தி வரும் வேலைகளோடு, பருப்பு, எண்ணெய் வித்துக்கள், புஞ்செய் தான்யங்கள் இவைகளை அதிகமாகப் பெருக்க அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஓரளவுக்கு நல்ல யோசனைகளையெல்லாம் சொல்லியிருக்கின்றார்கள். நமது எதிர்க் கட்சித் தலைவரவர்கள் உணவுத் துறையை எடுப்பவர்களுக்கு மிகவும் சங்கடம் என்றும், இந்தத் துறையை எடுத்துக் கொண்டவர்கள் யாரும் தப்பித்தது இல்லை என்றும் சொல்லி எனக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். இந்தத் துறையில் அமைச்சர் அடிக்கடி மாற்றப்பட்டிருப்பதற்குக் காரணம், முன்பிருந்தவர்கள் எல்லாம் திறமைக் குறைவானவர்கள் என்பதால் அல்ல. வேலைப் பளுவின் காரணமாக, சிற்சில சமயங்களில் இலாக்காப் பொறுப்புக்களை எங்களுக்குள் மாற்றிக்கொண்டு, வேலைகளைக் கவனித்து வருகிறோம்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, அடிக்கடி உணவு அமைச்சர்களை மாற்றுவதற்குக் காரணம் அவர்களுக்கு ஏற்படுகின்ற அதிகமான சிரமங்களைப்

போக்க, அப்படிச் செய்கிறார்கள் என்று தான் சொன்னேனே தவிர, அவர்களுடைய திறமைக் குறைவால் மாற்றப்படுகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஒரே அமைச்சர் பல வருடங்கள் உணவுத் துறையைப் பார்த்து வந்தால், அவருக்கு அதிகமான சிரமம், கஷ்டம் ஏற்படுகிறது. அந்தச் சிரமத்தைக் குறைக்கத்தான் அடிக்கடி மாற்றுகிறார்கள் என்று சொன்னேன். திறமைக் குறைவு என நான் கூறவில்லை.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இந்தக் கருத்தோடு சொன்னதற்கு உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் நல்ல யோசனைகளையெல்லாம் நான் ஏற்றுக்கொண்டு, மேலும் இந்த இலாக்காவை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு நான் முயற்சிக்கின்றேன் என்ற உறுதியினை முதலில் கூறிக்கொள்கின்றேன். யோசனைகளைச் சொன்னவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், உணவுத் துறையில் வியாபாரிகளால் செய்யப்படும் மோசடியை எல்லோரும் ஒட்டுமொத்தமாக ஒத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் சொன்னது போல, நூற்றுக்கணக்கான, அந்த அளவில் இதற்கான காரியங்களை ஆற்றி வருகின்றோம். அதன் விவரங்களையெல்லாம் பின்னால் கூறுகின்றேன்.

பொதுவாக இந்தியாவில் இன்றைய தினம் உள்ள நிலைமை, விலையேற்றம் எல்லோருக்கும் தெரிந்தது தான். ஆகவே தான் விலைவாசி ஏற்றத்தைப் பற்றி அதிகமாக மாண்புமிகு உறுப்பினர் குறை கூறவில்லை. என்ன காரணத்தால் அவர்கள் குறை கூறவில்லை என்பதை நான் புரிந்து கொள்கிறேன். நமது எதிர்க் கட்சித் தலைவர் திரு. ராஜாராம் நாயுடு அவர்கள் கூட, மற்ற விஷயங்களை எடுத்துத் தாக்கிக் கூறுவது போல, இந்த விஷயத்தை அவ்வளவு அழுத்தமாக இங்கே தாக்கிப் பேசவில்லை. அதற்குக் காரணம், இன்றைக்கு இருக்கின்ற பணவீக்கத்தின் நிலைமையை நல்ல முறையில் புரிந்துகொண்டிருப்பதால் என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில் மத்திய சர்க்கார் மாநில நிர்வாகத்தில் தலையிட்டு அதிகமான தொல்லை தந்து, நமது நிர்வாகத்தைக் கொடுக்கிறது என்று கூறிக் கொள்ளாமல் இருக்க முடியாது. இன்றைக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவர்கள் போட்டிருக்கின்ற பட்ஜெட்டில் துண்டு விழுந்த தொகையெல்லாம் நமக்கு நன்றாகத் தெரியும். 1970-71--ல் 426 கோடி ரூபாய் துண்டு விழுந்திருக்கிறது. 1971-72-ல் 808 கோடி ரூபாயும், 1972-73-ல் 701 கோடி ரூபாயும், 1973-74-ல் 658 கோடி ரூபாயும் துண்டு விழுந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். கிட்டத்தட்ட 2,500 கோடி ரூபாய்க்கு மேல் நான்காவது

ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் மத்திய சர்க்காரில் துண்டு விழுந்திருக்கிறது. இப்படி துண்டு விழுந்த தொகையை எப்படிச் சரி செய்தார்கள்? நோட்டு அடித்ததன் மூலமாகவா, அல்லது வேறு எந்த முறையில் என்று தெரியவில்லை. பொதுவாக பல பொருளாதார வல்லுநர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். பணவீக்கம் அதிகமாக ஏற்பட்டிருப்பதால், இந்தியாவின் எதிர்கால நிலைமை மிக மோசமாக இருக்கும், அதிலும் குறிப்பாக உணவு நிலைமை மிகமிக மோசமாக இருக்கும் என்று கூறியிருக்கிறார்கள். பொருளாதார வல்லுநர் பிரேம் ஜா தம்முடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

"நடப்பில் இருக்கும் பண வீக்கத்தின் பொருட்டு உள்ள விலை ஏற்றத்தின், மிக வேதனைக்குரிய இயல்பு என்னவென்றால் நாடு முழுவதும் 66 மில்லியன் டன்கள் என்ற அளவுக்கு அமோக விளைச்சல் இருந்தும்கூட அந்த விலை ஏற்ற வெளியை தணிக்க இயலவில்லை. வழக்கத்திற்கு மாறாக அறுவடைக்கு அடுத்த டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி திங்களிலேயே விலைகள் ஏறுமுகமாக இருக்கும் விநோதமான காட்சியை காண்கிறோம். இவ்வாறு நமது தேசத்திலேயே இதுவரை காணப்படாத அளவிற்கு விலைவாசி இறங்கக் கூடிய பருவத்தில் ஏறுமுகமாக இருப்பது மத்திய அரசின் கவனத்திற்கு வரவில்லை போலும். இந்த பண வீக்கம் இவ்வாறு தொடர்ந்து இயங்குமானால் விலைகள் 35-லிருந்து 40 சதவிகிதம் மேலே ஏறுவதைத் தடுக்க முடியாது. இம்மாதிரியான பயங்கரமான நிலைமையை தவிர்க்க முடியாதோ என்று நினைக்கவும் இது மேலும் மோசமாகக் கூடும் என்றும் அச்சப்பட வேண்டியிருக்கிறது. இதில் இரண்டு அம்சங்களை கவனிக்க வேண்டும்.

1. இந்த அறுவடை பருவத்திலேயே விலை ஏறினால் பற்றாக்குறை பருவமாகிய, ஜூன், அக்டோபர் மாதங்களில் விலை ஏற்றம் மிகவும் கடுமையாக இருக்கும்.

2. இவ்வாறு வாரா வாரம் விலைகள் உயர்ந்துக் கொண்டே போனால் நுகர்வோர் அதிக அளவுக்கு பொருள்கள் வாங்க வேண்டிய பீதி ஏற்பட்டு அதனாலேயே பண வீக்கம் இன்னும் பயங்கரமானதாக ஆகிவிடும்" என்று சொல்கிறார்.

அவர் மேலும் கூறுகிறார். "மத்திய நிதியமைச்சர் வரவு செலவுக் கணக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது சென்ற ஆண்டு பருவ மழை தவறியதனால் உற்பத்தி பாதிக்கப்பட்டு பண வீக்கம் ஏற்படும் என்பதை மத்திய அரசு மறந்து இருக்க முடியாது. ஆகையால் பண வீக்கத்தைத்

தடுத்து நிறுத்தி அதன் மூலம் விலைகளைக் கட்டுபடுத்துவதில் மத்திய அரசு தனிக் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். அவ்வாறு செய்வதற்கு மாறாக 1974-75 வரவு செலவுக் கணக்கில் 125 கோடி ரூபாய் அளவில் நோட்டு அச்சடிக்க வேண்டி இருக்கும் என்று தெரிவித்தது. ஆனால் இப்பொழுது இருக்கும் நிலையில் இந்த அளவு நோட்டு அச்சடிப்பு செய்தாலே அதன் விளைவு பயங்கரமானதாக இருக்கும். குறிப்பிட்டிருக்கும் அளவைவிட மிக அதிக மான அளவிற்கு அச்சடிப்பு செய்யும்படியான சூழ்நிலை ஏற்படும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறான நிலையை கடந்த சில ஆண்டுகளாக மத்திய அரசு தவிர்க்கவில்லை'' இந்தக் கருத்துக்களை அவர் சொல்லியிருக்கிறார்.

(6·10 பிற் பகல்).

நாம் திறமையாக உற்பத்தியில் கவனம் செலுத்துகிறோம். அதைப்பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். நம்முடைய சர்க்கார் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் திட்டியுள்ள திட்டங்களைப்பற்றி நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சரவர்கள் நேற்றையதினம் விளக்கங் களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு நாம் அக்கறை காட்டி வருகிறோம். நம்முடைய விவசாயிகளும் உற்பத்தியில் அக்கறை காட்டி வருகி றார்கள். இதைப்பற்றி எல்லோருக்கும் நன்கு தெரியும். எவ்வளவு சிறப்பாக நாம் காரியங்களை ஆற்றினாலும், உபரியாக அரிசியை வைத்திருந்தாலும், இந்த மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிற பற்றாக்குறையையும், மற்ற மாநிலங்களில் ஏற்பட்டிருக்கிற பற்றாக்குறையையும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, நமக்குப் பற்றாக்குறையாகவுள்ள பருப்பு போன்ற தானியங்களை அவர்கள் பெருக்கியிருக்கிறார்களா என்றால், இல்லையென்பது நன்றாகத் தெரிகிறது. எதிர்க் கட்சித் தலைவரவர்கள் தஞ்சை மாவட்டத்தில் பருப்பு போன்றவற்றை அதிகமாகப் பயிர் செய்ய முடியுமென்று சொன்னார்கள்.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, நான் உளுந்தைப் பற்றித்தான் சொன்னேன். அதை மட்டும்தான் தஞ்சாவூர் மாவட்டத்தில் உற்பத்தி செய்ய முடியும். இரண்டு 'கிராப்' க்கு இடையே அதை உற்பத்தி செய்யலாம்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: எங்களுக்கே உளுந்து தேவைப்படுகிறது. நாங்களும் அதைப் பயிரிடுகிறோம். தஞ்சை மாவட்டத் தைச் சேர்ந்த திரு. பக்கர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். தை மாதத்தில் நெல்லை அறுப்பதற்கு முன், 4 நாளைக்கு முன் இவைகளைக் கலந்து தெளித்து விடுவோம். அதற்குப் பிறகு செலவேயில்லை. ஒரு மழை பெய்தால் போதும். அதற்கு அதிக மழை கூடாது.

திரு. எம். எம். பக்கர்: இந்த வருஷம் நல்ல மழை பெய்து, அதுவும் போய்விட்டது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இந்தக் கதைதான் அங்கே அதிகமாக இருக்கும். அதைப் பணப் பயிராகச் செய்யும் அளவில் இல்லை. பூமி வளம் எங்களுக்கு இல்லை. தரமான நிலமும் அதிகமாக இல்லை. எனினும் அதற்கான முயற்சிகளைச் செய்திருக்கிறோம். விவசாய இலாகா பருப்பு வகைகளைப் போட சில திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். கொண்டைக் கடலையைப்பற்றிச் சொன்னார்கள். டெல்லிக்குப் போயிருந்தபோது, விவசாயக் கல்லூரிக்குப் போய்ப் பார்த்தேன். அந்தக் கடலை, சாதாரண நிலைமைகளுக் கேற்ப, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் அதிகமாகப் பயிரிடும் அளவுக்கு இருக்கிறது. ஆனால், அது நமது மாநிலத்திற்கு அதிகமாகத் தேவைப்படு கிறது. நாம் நெல்லை எந்த அளவுக்கு அதிகமாக உற்பத்தி செய்திருக் கிறோமோ அந்த அளவுக்கு அவர்கள் கடலை உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தவில்லை. உரம் போன்றவைகள் பற்றாக்குறையாகக் கிடைத்தாலும், அதை வைத்துக்கொண்டு சிறப்பாகக் காரியங்களை ஆற்றியிருக்கிறோம். அந்த அளவுக்கு அகில இந்திய ரீதியில் உற்பத்தி பெருக்காததால், எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய பயங்கரமான சூழ்நிலை நமக்கும் ஏற்பட்டிருக்கிறது. நண்பர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். கேரளாவில் அரிசி ஒரு படி 7 ரூபாய்க்கு விற்கிறது. கேரளாவுக்கு ஒரு மைலுக்கு முன்னால், நாம் ரூ. 1.50-க்குப் போடுகிறோம். சாதாரணமாக ஒரு முடிச்சு கொண்டுபோனால், 15 ரூபாய்வரை லாபம் இருக்கிறது. சுற்றி எங்கு சென்றாலும், தமிழ் நாட்டு எல்லையோரம் பூராவும் பயங்கரமான சூழ்நிலை இருக் கிறது. இந்தக் கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்கு அவர்கள் ஒத்துழைப்புத் தர மறுக்கிறார்கள். நாம் அண்டை மாநிலத்திடம்—உணவுச் செயலாளர் எல்லோ ரிடமும் உதவி கேட்டிருக்கிறோம். தலைச் சுமையில் செல்வதைப் பிடிக்க அவர்களுடைய ஒத்துழைப்பு இல்லையென்றால் முடியாது. கழுதை மேலே போகிறது. இப்படிச் செல்வதைப்பற்றி பத்திரிகைகளில் அடிக்கடி பார்க்கிறேன். இவைகளையெல்லாம் பிடிப்பதற்கு அவர்களுடைய ஒத்துழைப்பு வேண்டும். இதில் இந்திய அரசுகூட தலையிடலாம். இப்படிப்பட்டதொரு நாகரீகம் ஏற்பட வேண்டும். மக்களை மோசடி செய்யும் அளவுக்கு, ஏழு ரூபாய்க்கு ஒரு படி அரிசி விற்கப்படுகிறது. அவைகளைத் தடுக்க வேண்டு மென்ற எண்ணம் மற்றவர்களுக்கு வர வேண்டும். அந்த உணர்வை ஊட்டும் அளவுக்கு உங்களுடைய பேச்சுக்கள் இருக்க வேண்டும்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். இருந்தாலும்கூட அப்படிப்பட்ட நல்ல யோசனைகளையும் சொல்ல வேண்டும். இந்த நிலைமைகளிலும், நாம் மிகத் திறமையாகப் பணியாற்றி இருக்கிறோ மென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் மண்ணெண்ணெய்பற்றிச் சொன்னார்கள். லாபம் ஒரு பர்சன்ட் போதாதென்று சொன்னார்கள். இப்போதிருக்கும் விலைவாசியில், அதிகமாகக் கொடுக்க முடியாதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பிறகு அதைப்பற்றிப் பேசி ஒரு முடிவெடுக்கலாமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேர்க்கடலையைப்பற்றிச் சொன்னார்கள். அது நமது மாநிலத்திலேயே போதிய அளவுக்குக் கிடைக்கிறது. ஆனால் நமது உபயோகத்திற்குக் கிடைக்கவில்லை. சால்ட் கோட்டர்சுக்குப் போனால் தெரியும். எந்தெந்த மாநிலத்திற்குப் போகிறதென்று தெரியும். லெவி போடாமலிருந்தால் நல்லதென்று சொன்னார்கள். இங்குள்ள மக்களுக்கு வாங்கும் திறன் அதிகமாக இல்லை. இங்கே இண்டஸ்டிரீஸ் அதிகமாக இல்லை. இங்கே இருக்கும் ஆயில் மில்கள் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய அளவுக்கு வேர்க்கடலையை வாங்கி, எண்ணெயாக்கி, அதைச் சல்லீசான விலையில் கொடுக்கலாமென்று திட்டமிட்டு, இங்குள்ள ஆலைகளுக்குத் தேவையான வேர்க்கடலையை வாங்குவதற்காக மத்திய அரசிடம் அனுமதி கேட்டோம். அவர்கள் அனுமதி மறுத்துவிட்டார்கள். எனவே விவசாயிகளுக்குக் கிடைக்கும் பணத்தைத் தடுக்கவில்லையென்பதையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடலை எண்ணெய் தவிர மற்றப் பொருள்களை எடுத்துக்கொண்டால், தேங்காய் கொப்பரை நமக்கு 80 சதவிகிதம் வரவேண்டியிருக்கிறது. இப்போதுதான் சூரியகாந்தி எண்ணெய்த் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம். அது குழந்தைப் பருவத்திலிருக்கிறது. எள்ளைத் தனியாகப் பயிரிடுவதற்கு அதிகமான நிலங்கள் இல்லாததால், எவ்வளவு முயற்சி செய்தும், தேவையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. மேலும் அந்த அளவுக்கு நிலவளம் நிச்சயமாகக் கிடையாது. அவைகளெல்லாம் அண்டை மாநிலத்திலிருந்துதான் வரவேண்டியிருக்கிறது. அவர்கள் கொள்முதல்பற்றிச் சொன்னார்கள். நாமும், சர்க்கார்தான் கொள்முதலை ஏற்கவேண்டுமென்ற கொள்கையில் இருக்கிறோம். அதற்காக அபிவிருத்திகளைச் செய்து கொண்டு வருகிறோம். உடனடியாக எடுத்தால் ஆபத்து வந்துவிடுமோவென்று அஞ்சிக் கொண்டிருக்கிறோம். இதை முழுவதுமாக எடுத்துச் செய்தாலும், திரு. ஏ. ஆர். தாமோதரன் போன்றவர்கள் அந்தக் கொள்கையை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். இப்போது சிவில்

சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகச் சில்லரை வியாபாரிகளுக்குக் கொடுத்துக் கொண்டிருந்த மண்ணெண்ணெய், சர்க்கரை போன்றவற்றை கூட்டுறவுத்துறை மூலமாகக் கொடுத்து, எல்லாவற்றையும் சர்க்கார் எடுத்துச் செய்யும் ஆரம்பக் கட்டத்தை நாம் செயல்படுத்தி வருகிறோமென்பதைக் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

(6·20 பிற் பகல்).

தண்டனையைப்பற்றியெல்லாம் அவர்கள் சொன்னார்கள். ஏறக்குறைய ஆயிரத்திற்கு மேற்பட்ட வழக்குகள் போட்டிருக்கிறோம். அவர்களுக்கெல்லாம் என்ன தண்டனை கொடுக்கின்றார்கள் என்று பத்திரிகையிலே பார்த்திருப் பீர்கள். சென்ற மாதம் நூற்றுக்கு மேல் வழக்குகள் போட்டும், முப்பது ரூபாய், நாற்பது ரூபாய்தான் அபராதம் போடுகின்றார்கள்; அவர்கள் மாதத் திற்கு 5,000 ரூபாய்க்குமேல் சம்பாதிக்கின்றார்கள். இலாகாவிலேயே சொல் வார்கள் அவர்களிடம், 'நீ பாட்டுக்கு வேலை செய். எங்களுக்குக் கேஸ் போடு வதற்கு ஒன்றிரண்டு கொடு' என்று சொல்வார்கள். அவன் ரூ. 5,000 சம்பா திக்கின்றான், ஆனால் அபராதம் 50 ரூபாய்தான். சுலபமாகக் கட்டிவிட்டு தொடர்ந்து செய்கின்றான். மண்ணெண்ணெய் மக்களுக்கு எவ்வளவு அத்தியா வசியமான பொருள் என்று எல்லோருக்கும் தெரியும். இதிலே தவறு செய்கி றார்கள். அவர்கள் மேல் வழக்குப் போட்டால், காலையிலேயே கோர்ட்டுக்குப் போகிறார்கள் அவர்களுக்குத் தண்டனை முப்பது அல்லது நாற்பது ரூபாய் தான். அதைக் கட்டியவுடனே அனுப்பிவிடுகிறார்கள். அது மட்டுமல்ல. லாரிகளிலேயும் மற்ற வாகனங்களிலேயும் கடத்தப்படுகிறது. அந்த லாரியைப் பறிமுதல் செய்ய கலெக்டருக்கு அதிகாரம் கிடையாது. நீதிபதிகளிடம் கோர்ட்டிலே கொண்டு விட்டால், அங்கே வைத்துக்கொள்வது கிடையாது. அதற்கென தனி தண்டனையும் கிடையாது. அதற்குக் கடுமையான தண்டனை கொடுத்து, வாகனங்களையும் பறிமுதல் செய்ய வேண்டுமென்று வைத்தால் இதை பெரும் அளவுக்குக் கட்டுப்படுத்த முடியும். அப்படிக் கட்டுப்படுத்தலாம் என்றுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம்.

Thiru A. R. DAMODARAN : Sir,I would not like the Hon. Minister to have the impression that I am against action being taken against smugglers and hoarders on the borders with regard to rice. But my objection is that if these rules were strenghtened, it is only the petty merchants in our villages who are likely to get caught in this matter. That is why I objected and I said that the degree of the offence may be taken into account while deciding about the punishment. Unfortunately, according to the amend-

ment that is being brought forward, even a small technical offence, like the non-display of price list in front of a grocery shop, is likely to result in the imprisoment of a village grocery retail merchant. In June 1973, under the Defence of India Rules, the Civil Supplies Authorities wanted petty merchants to display a notice board indicating the stocks that they were having their shops, indicating the prices at which these stocks were purchased and indicating the sale price and the margin. No dealer in Tamil Nadu was able to display these priceboards. I am only saying that when a law is farmed, it should not be so absurd that it is incapable of being followed.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, சிறிய வியாபாரியாக இருந்தாலும், பெரிய வியாபாரியாக இருந்தாலும், சட்டம் ஒன்றுகத்தான் இருக்க வேண்டும். கணக்கு எழுதி வைக்க வேண்டுமென்று சொல்கிறோம். இதிலே சிறிய வியாபாரி, பெரிய வியாபாரி என்பது கிடையாது. சிறிய வியாபாரி, பெரிய வியாபாரி, என்ற அளவிலே இல்லை. இந்தப் பொருள்கள் மக்களுக்கு அத்தியாவசியமானவை என்பதுதான் முக்கியம். குழந்தை உணவு இருக்கிறது. ஒருவருக்கு இருபது, முப்பது டின்கள் கொடுக்கின்றார்கள். அதிலே தவறு செய்துவிட்டார்கள் என்கிறார்கள். இதிலே தவறு செய்வது சிறிய வியாபாரியா, பெரிய வியாபாரியா என்று சொல்வதற்கில்லை. இந்தக் குழந்தை உணவு விற்பனையில் உள்ள தவறுகளுக்காக 106 வழக்குகள் போட்டிருக்கின்றோம். பட்டியல் போடுவதுபற்றி வழக்குகள் போட்டிருக்கிறோம். இதிலே சிறிய வியாபாரிகள் பெரிய வியாபாரிகள் என்பது அல்ல பிரச்சினை. நம் நாட்டிலே யாரை அதிகம் மோசம் செய்கிறார்கள் என்றால், இல்லாதவர்களைத்தான் மோசம் செய்கிறார்கள். கலப்படம் பொருள்களிலே அதிகமாக இருக்கிறது. ஏழை மக்கள் வாங்கிப் பயன்படுத்துகிற எண்ணெயிலே அதிகம் கலப்படம் இருக்கிறது. இங்கே நான்கு முழ வேட்டியிலே, ஏழைகள் வாங்கி உடுத்துகிற வேட்டியிலே கலப்படம் செய்கிறார்கள். எட்டு முழ வேட்டி என்று எடுத்துக் காட்டுவார்கள். முதல் தட்டிலே நெருக்கமாக நெய்திருப்பார்கள். உள்ளே பார்த்தால் வலைமாதிரி இருக்கும். மூன்றாவது நாளில் அது ஆறு முழமாகக் குறைந்துவிடும். இப்படி ஏழை மக்களைத்தான் ஏமாற்றுகிறார்கள். மண்ணெண்ணெயை எடுத்துக்கொண்டால், பெரிய வியாபாரி, சிறிய வியாபாரி என்று வித்தியாசம் இல்லை. ஒன்றிரண்டு வழக்குகள் அகப்படுகின்றன. எப்படி எப்படிப் பிடிக்க வேண்டுமோ அப்படியெல்லாம் பிடிக்கின்றோம். சட்டங்களைக் கொண்டு வருகிறோம். தவறு செய்பவர்கள் வெகு நிபுணர்களாக

இருந்து கோர்ட்டிலே தப்பித்துக்கொள்கிறார்கள். இது இல்லவே இல்லை என்று சொல்ல முடியாது. அவ்வளவு திறமையாக இருக்கிறார்கள்.

Thiru A. K. DAMODARAN : Sir, there is the due process of law and we have a judicialy. The Hon. Minister says that there are measures by which traders get away. If the court says that they are not guilty, then I am afraid the Hon. Minister will have to accept it.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அது அல்ல பிரச்சினை. இதுபோன்ற சமுதாயத்திற்கு விரோதமான குற்றங்களிலே ஜுடிஷியரி லீனியன்டாக இருப்பதும் தவறு. நமது அரசாங்கம் அதிலே உறுதியாக இருக்கிறது. கடத்தல்காரர்களைப் பிடித்தால், அவர்களை பத்து ரூபாய் அபராதம் போட்டு விட்டுவிடுவது என்று ஜுடிஷியரி லீனியன்ட்டாக விடு செய்யும் முறையை ஒப்புக்கொள்ள முடியாது. சில நீதிபதிகள் தயாராக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால், நாங்கள் சட்டத்தைப் பயன்படுத்தி, அதிகாரத்தைப் பயன்படுத்தி, மினிமம் பனிஷ்மென்ட் என்று வைத்துவிடுகிறோம். இதனால் இம்மாதிரி சிறிய குற்றங்களுக்கு ஆறு மாதம் சிறைத் தண்டனை போடக்கூடிய நிலைமை வாராமல் பார்த்துக்கொள்வோம்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பரம்பரையாக தமிழ் நாட்டிற்கு சேவை செய்துவரும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். சட்டம் போட்டுவிட்டதாலேயே எல்லா வியாபாரிகளையும் மூன்று வருடம் தண்டித்துவிட மாட்டார்கள். தவறு செய்தால்தானே சட்டப்படி தண்டனை கிடைக்கப் போகிறது. ஆகவே தவறு செய்யாமல் தடுக்க அவர்கள் ஏதாவது சமுதாய சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால் தவறு செய்தவர்களை நீதிமன்றத்திற்குக் கொண்டுபோனால், தண்டனை கிடைக்கவில்லை. அங்கே கருணை அதிகமாகப் போய்விட்டது. நான் மாறுவேடம் போட்டுக் கொண்டு போய் சோதனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கேட்டுக்கொண்டார். அப்படியும் செய்கிறேன். கோயம்புத்தூருக்கு ஒரு ஞாயிற்றுக்கிழமை யாருக்கும் தெரியாமல் சென்றேன். அந்த மாவட்ட ஆட்சித் தலைவரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாமல் சென்றேன். அப்படி சென்று பலவிடங்களிலே பலரைக் கண்டுபிடித்திருக்கிறோம். என்றாலும் அவர்கள் மிகவும் திறமையானவர்கள். எப்படி எப்படி எய்த்துப் பிழைக்க வேண்டுமோ அப்படியெல்லாம் செய்கிறார்கள். ஆகவே இந்தக் குற்றங்களுக்கான தண்டனையை அதிகப்படுத்துவதும், மற்ற முறைகளைக் கையாள்வதும்

தவறு அல்ல. மக்களைக் காப்பாற்றுவதற்காக நிச்சயம் இதைச் செய்து தீர வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

நாங்கள் போட்டிருக்கின்ற வழக்குகள் 1972 இலே பதிவு செய்யப் பட்டவை, 5,730. பதுக்கலுக்காகக் கைது செய்யப்பட்டவர்கள் 1,015 பேர். கடத்தலுக்காகக் கைது செய்யப்பட்டவர்கள் 3,402. 1973 இலே பதிவு செய் யப்பட்ட வழக்குகள் 10,505. பதுக்கலுக்காகக் கைது செய்யப்பட்டவர்கள் 1,555. கடத்தலுக்காகக் கைது செய்யப்பட்டவர்கள் 6,789 பேர். இப்பொழுது 1974 பிறந்து மூன்று நான்கு மாதங்களுக்குள்ளாக, 1,234 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 133 பேர் பதுக்கலுக்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கடத்தலுக்காக கைது செய்யப்பட்டிருப்பவர்கள் 738 பேர். மேலும் கடந்த மூன்று நான்கு மாதங்களில் பிடிக்கப்பட்டிருக்கிற

(6·30 பிற் பகல்).

பொருள்கள், குழந்தை உணவு உட்பட, 13 லட்ச ரூபாய்க்கு இருக்கிறது. மூன்று மாத காலத்தில் இவ்வளவு செய்திருக்கிறோம். இன்றைக்கு எந்த அளவிற்கு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டுமோ அந்த அளவிற்கு வேகப்படுத்தியிருக்கிறோம். இரண்டு மாதமாகத்தான் இதில் முனைப்பாக இருக்கிறோம் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட் டார்கள். அப்படி இல்லை. கோவைப் பகுதியையொட்டிய நம் எல்லையோரத்தில் நாம் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியிருக்கிறோம். பதுக்கல், கடத்தல் இவைகள் இப்போது அதிகரித்திருந்தாலும் கூட, அவற்றைத் தடுப்பதில் எல்லோரும் ஒத்துழைத்தாலொழிய ஒன்றும் முடியாது. ஆகவேதான் இதில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பாதுகாப்புச் சட்டப்படி 31 பேரை பிடித்தோம். எல்லோர் பேரிலும் ஒரேமாதிரியான வழக்கைத்தான் போட்டோம். அதில் ஆறு பேர் உள்ளே இருக்கின்றார்கள். மற்றவர்கள் வெளியே இருக்கின்றார்கள். சட்ட அமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டுதான் வழக்குப் போட்டிருக்கிறோம். உள்ளபடியே குற்றவாளிகள் என்ற முறையில்தான் அவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. ஆனாலும் எப்படியோ தப்பித்துக்கொள்ளுகின் றார்கள். ஐம்பது வருஷமாக தமிழ் நாட்டிலேயே இந்த வியாபாரம் பண்ணிக் கொண்டிருப்பவர்கள், கோர்ட்டிலேயே போய் 'தமிழில் அச்சடித்துக் கொடுக்க வில்லை' என்று சொல்லுகின்றார்கள். தமிழ் தெரிந்தவர்கள் அங்கே போய் தமிழ் தெரியவில்லை என்று சொல்லுகின்றார்கள். பிறகு நீதிமன்றத்தில்தான் என்ன செய்ய முடியும்? நீதி மன்றத்தின் பேரிலே குறை சொல்லுவதற் கில்லை.

திரு. ஆர். சக்தி மோகன் : தலைவரவர்களே, பதுக்கல், கடத்தல் இவைகள் மன்னிக்க முடியாத சமுதாயக் குற்றங்களாகும். இவர்கள் பேரிலே நீதி மன்றத்துக்குப் போய் வழக்குப் போடும்போது, எந்தச் சட்டத்தின் அடிப் படையில் வழக்கைப் போடுகிறோமோ அதே சட்டத்தின் கீழே தப்பித்துக் கொள்ளவும் செய்கின்றார்கள். இந்தக் குற்றவாளிகளுக்கு வேறு சில நாடு களில் செய்வது மாதிரி சட்டத்தைக் கடுமையாக்கி கொடுமையான தண்டனை களைக் கொடுக்கும் முறையில் சட்டங்களை உருவாக்கினால், நல்ல பலனை எதிர் பார்க்கலாம். அப்படிப்பட்ட சட்டங்களை உருவாக்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதெல்லாம் இப்போ தைக்குக் கஷ்டம். ஆங்கிலத்தில் இருப்பதைத் தமிழில் படிக்கக் கேட்டு, 'படிக்கக் கேட்டு புரிந்து கொண்டேன்' என்று கையெழுத்துப் போட்டுவிட்டு, நீதி மன்றத்திற்கு வரும்போது தமிழில் கொடுக்கவில்லை என்று விட்டுவிடுகின் றார்கள். என்ன பண்ணுவது ? தயவு தாட்சண்யம் இல்லாமல் பெரிய வியாபாரிகளாக இருந்தாலும், சிறிய வியாபாரிகளாக இருந்தாலும், மக்க ளுக்குத் துரோகம் பண்ணுகின்றவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக பாது காப்புச் சட்டத்தின் கீழே அவர்கள் பேரிலே நடவடிக்கை எடுக்கிறோம். முன் பெல்லாம் பாதுகாப்புச் சட்டம் என்பது அரசியலுக்குத்தான் பயன்படுத்தப் பட்டு வந்தது. ஆளும் கட்சிக்கு எதிர்க் கட்சியாக இருந்தவர்கள்மீதுதான் அதைப் பயன்படுத்தினார்கள். அன்றையதினம் அந்தச் சட்டம், மக்களை இப்படி கடத்தல், பதுக்கல் மூலம் சுரண்டி கொள்ளை அடிப்பவர்களுக்கு எதிராக பயன்படுத்தப்படவில்லை. இன்று இந்த அரசு தைரியமாக அதைச் செய்யும் அளவுக்கு இதற்கு முன்பு இதை யாரும் பயன்படுத்தவில்லை. அந்த அளவிற்கு தைரியமாக நமது மாநில முதலமைச்சர் அவர்கள் செய்கின்றார்கள். இதையெல்லாம் மற்ற மாநில அதிகாரிகள் பார்த்து வியக்கும் முறையில், அவர்களே இங்கே வந்து இந்த நிலைமைகளை யெல்லாம் கற்று அறிந்து செல்லும் அளவிற்கு, மற்ற மாநிலங்களுக்குத் தமிழ் நாடு வழி காட்டியாக இருக்கும் முறையில் இதைச் செய்திருக்கிறோம். சிறிதுகூட தயவு தாட்சண்யம் இல்லாத முறையில் இவற்றையெல்லாம் செய்து வருகிறோம். இன்னும் இதைத் தீவிரப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம். இன்றைக்கு இப்படி விலைவாசிகள் ஏறிக்கொண்டே இருப்ப தைப் பார்த்தால், இந்தத் துறையிலே நாம் இன்னும் தீவிரம் காட்ட வேண்டு மென்று இதிலே நம் அதிகாரிகள் நல்ல முறையில் பாடுபட்டு வருகின்றார்கள். திரு. ராஜாராம் நாயுடு அவர்கள் கவலைப்படுவதைப் போல், பட்டணங்களில்,

நகரங்களில் உள்ளவர்களுக்குச் சிறிது கஷ்டமான சூழ்நிலை என்றாலும்கூட, அதைச் சமாளிப்பதற்கான வகையில் புதிய திட்டங்களைப் போட்டு வருகிறோம். தானியத்தைக் கொள்முதல் செய்வதிலிருந்து மக்களுக்கு அது போய்ச் சேரும் வரையில், கிடங்குகளில் போய்விடுகிறது, அல்லது பாழாய்ப் போய்விடுகிறது, என்று இல்லாமல் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். முன்பெல்லாம் ஹல்லிங் ஏஜெண்டுகளுக்கு ரூ. 15,000 அல்லது ரூ. 10,000 என்று டெபாசிட் இருந்ததை இப்போது ரூ. 25,000 என்றும் மேற்கொண்டு செக்யூரிட்டியாக ரூ 50 ஆயிரத்திற்கு சொத்துக்களை அரசாங்கத்துக்கு அடமானம் செய்து கொடுக்க வேண்டும் என்றும் இப்போது ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். முன்பெல்லாம் வாரந்தோறும் அரவைக்கு அவர்களுக்கு நாம் நெல் கொடுக்க வேண்டும் என்று இருந்தது. இப்போது, நெல்லைக் கொடுப்பதற்கு முன்பாக அதற்கு முந்தைய வாரத்திற்காகக் கொடுத்த நெல் அரவையாகி அதற்குண்டான அரிசி கொடுக்கப்பட்டுவிட்டதா என்று பார்க்க வேண்டும். ஒவ்வொரு வாரமும் நெல் கணக்கை இப்போது அதிகாரிகள் பார்க்கின்றார்கள். சன்ன நெல் கொடுக்கப்பட்டிருந்தால் அவர்கள் அரைத்துக் கொடுக்கும் அரிசியும் சன்ன ரக அரிசிதானா என்று அதிகாரிகள் பார்க்க வேண்டும். புழுக்குவதற்குக் கொடுத்தால், அவர்கள் புழுக்கி அரைத்துக் கொடுக்கும் அரிசி அதுதானா என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் டெஸ்ட் செய்து பார்க்க வேண்டும். இதையெல்லாம் கண்காணிக்க இரண்டு அதிகாரிகள் இருக்கின்றார்கள். இருவரிடமும் இரண்டு சாவிகள் இருக்கின்றன. அவர்கள் இதையெல்லாம் நேரில் போய்ப் பார்த்து டெஸ்டு பண்ண வேண்டும். அந்த இடத்திற்கு நாங்கள் நேரிலே போய்ப் பார்த்தபோது, அந்த அதிகாரி அங்கே இல்லையென்ற காரணத்தினால், அவரை சஸ்பெண்டு செய்திருக்கிறோம். எந்த அளவிற்குப் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அவ்வளவையும் எடுத்து வருகிறோம்.

இப்படியெல்லாம் சிறப்பான முறையில் பணியாற்றினாலும் சிலர் வேண்டுமென்றே எங்களைச் செயலற்ற முறையில் ஆக்குவதற்காகப் பாடுபடுகின்றார்கள் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. சட்டப் பேரவையில் நமது முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், சிறு தானியத்தின் மீது இருந்த கட்டுப்பாட்டை மத்திய அரசு எடுத்துவிட்டதைப் பற்றிக் குறிப்பிட்டு, இதனால் நமது மாநிலத்திலிருந்து ஏராளமான சிறு தானியத்தைக் கட்டுப்பாடு இல்லாமல் அண்டை மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடிய அபாயம் இருக்கிறது, இதன் காரணமாக நமது மாநிலத்திலேயே உணவுப் பஞ்சம் வந்தாலும் வரலாம்

என்று குறிப்பிட்டார்கள். ஆனல் அவர் கூறியதன் பொருளை, எச்சரிக்கையைப் புரிந்துகொள்ள விரும்பாமல், உங்கள் பத்திரிகை அதைக் கேலி செய்து எழுதியிருக்கின்றது. தமிழ் நாட்டிலே சிறு தானியத்தை யார் சாப்பிடுகின்ருர்கள் என்றெல்லாம் கேட்டு பத்திரிகையில் எழுதியிருக்கின்ருர்கள். ஆனல் மாவட்டங்களில் சோளம், கம்பு இவற்றையெல்லாம் மக்கள் எந்த அளவிற்குச் சாப்பிடுகின்ருர்கள் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களே இங்கே குறிப்பிட்டார்கள். ஆனலும் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள், எதிர்க் கட்சிப் பத்திரிகைகள், அரசாங்கம் என்னதான் நல்லதைச் செய்தாலும் வேண்டுமென்றே கொள்கைப் பிடிப்பில்லை என்ற காரணத்தினல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாநிலத்திற்கு ஏற்படக்கூடிய கொடுமையை, தீமையை எடுத்துச் சொல்லும்போது, அதை அந்தப் பத்திரிகைகள் கண்டித்து எழுதியிருக்கின்றன. தமிழ் நாட்டில் சிறு தானியங்களை உணவாகச் சாப்பிடுவதில்லை, எனவே அவற்றைப் பிற மாநிலங்களுக்கு அனுப்புவது ஆபத்துள்ள, கெடுதலான செயல் இல்லையென்று உங்கள் பத்திரிகை எழுதியிருக்கின்றது.

திரு. கே. ராஜாராம்: 'உங்கள் பத்திரிகை' என்ருல், எனக்கு என்று பத்திரிகை ஒன்றுமில்லை.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: உங்கள் பேச்சுக்கள், உங்கள் நடவடிக்கைகள்பற்றியெல்லாம் அந்தப் பத்திரிகையில்தான் வருகின்றன. திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்கள் பேச்சுக்களைக்கூட நல்ல முறையில் அந்தப் பத்திரிகையில்தான் போடுவார்கள். இப்போது சிறு தானியத்தின்மீதான கட்டுப்பாட்டை மத்திய அரசு எடுத்திருக்கின்றது. இதனல் நமது மாநிலத்திற்கு எவ்வளவு பாதகமெல்லாம் வரும் என்று தெரியும். இதற்காக லெவி முறையைக் கூடக் கொண்டு வரவேண்டுமென்று முதலமைச்சர்கள் மாநாட்டிலே கேட்டோம். அநேகமாக இல்லையென்ற செய்திதான் வரும்போல இருக்கின்றது. அதற்கும் லெவி போட்டு, பாதுகாத்துக்கொள்ளத்தக்க நிலைமையில்தான் ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும். இன்று கட்டுப்பாடற்ற நிலையில் சிறு தானியத்தின் விலை கட்டுங்கடங்காமல் போய்க்கொண்டிருக்கின்றது. சென்ற வருஷம் இந்த நாளில் ரூ. 60, ரூ. 80 என்று இருந்தது போய் இந்த ஆண்டுக்கு ரூ. 130-க்கு வந்துவிட்டது. காரணம் இப்போது மத்திய சர்க்கார் எடுத்துக்கொண்டுள்ள நிலைமைதான் என்பதை நாம் உணர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறு தானியத்தின் மீதான நடமாட்டுக் கட்டுப்பாட்டை இந்த அளவிற்கு எடுத்ததனுடைய கொடுமை காரணமாக நாளைக்கு நம் மாநிலத்தில் அரிசி பற்றுக்குறைகூட வரும் நிலைமை, அபாயம் இருக்கிறது. இதன் நிலைமை இன்னும் இரண்டொரு மாதத்தில் தெரிந்துவிடும். உற்பத்தி

செய்யும் விவசாயிகளே பெரிதும் கஷ்டப்படக்கூடிய அபாயம் ஏற்படலாம். தை, மாசி, பங்குனி முடிந்த பிறகு, அதாவது அறுவடையெல்லாம் தீர்ந்த பிறகு, தஞ்சை மாவட்டத்திலேயே கிட்டத்தட்ட தொண்ணூறு சதவிகித மக்கள் வாங்கிச் சாப்பிடும் நிலைமையில்தான் இருக்கிறார்கள். சிறு தானியத்தை உற்பத்தி செய்கிறவர்களுடைய நிலைமை இதுதான். சோளம், கேழ்வரகு போன்ற தானியத்தையெல்லாம் அங்கே உள்ளவர்கள் வாங்கிச் சாப்பிடும் நிலையில்தான் இருக்கின்றார்கள். இந்த நிலையில் இங்கே இருப்பதையும் வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டால் நிலைமை என்ன என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அங்கேயெல்லாம் உணவு நெருக்கடி என்ற காரணங்கள் ஏற்பட்டு, துப்பாக்கிச் சூடு செய்யும் அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. அதற்காக இந்திய சர்க்கார் இந்தக் கொள்கையைக் கைவிட்டிருந்தால், இங்கே உற்பத்தி பண்ணுகின்றவர்கள் அவதியுற வேண்டுமா, சாக வேண்டுமா ? எல்லோருக்கும் அந்தக் கஷ்டம் வர வேண்டுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அப்படி ஒரு கஷ்டம். பஞ்சம் என்று வந்தால், இங்கே உள்ளவர்கள் என்ன செய்வார்கள் ? இது சாதாரணப் பிரச்சினை இல்லை. மிகவும் முக்கியமான பிரச்சினை. இன்றைக்குக்கூட நினைத்தேன், சபையில் அங்கத்தினர்கள் அனைவரும் இருப்பார்கள் என்று. ஆனால் இல்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உணவுப் பசி.

(6·40 பிற் பகல்).

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இன்றுள்ள இந்த நிலையில், நமது மாநில சர்க்கார் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி இங்குள்ள மக்களும் சாப்பிட்டு பிறருக்கும் கொடுக்கும் முறையில் இல்லை. சென்ற ஆண்டிலே அதைச் செய்தோம். அரிசி கொடுத்தோம். கம்பும் சோளமும் வேண்டு மென்று சொன்னபோது, அதைக் கொடுத்தோம். என்னென்ன உணவு தானியத்தைக் கேட்டார்களோ அதையெல்லாம் நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் தாராளமாகப் பிற மாநிலத்தவர்களுக்குக் கொடுத்து உதவினார்கள். அதை வேண்டுமென்றே கெடுக்க வேண்டுமென்ற நிலைமையில் மற்ற மாநிலங்கள் கஷ்டப்படுகிறதென்று திடீரென்று ஒரு கொள்கையை மாற்றுகிறார்கள். இப்படி ஒரு அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறது. இந்த அதிகாரத்தைக் குறைக்க வேண்டும், தலையீடு இருக்கக் கூடாது என்று சொன்னால், உடனே எல்லோரும் சேர்ந்துகொண்டு நாட்டுப் பிரிவினையா, இது மாநில சுயாட்சியா என்று கேட்கிற நிலைமை நிச்சயமாக இருக்கக் கூடாது. என்ன சட்டம் கொண்டுவருவது என்பதில் எல்லாக் கட்சிகளும் ஐக்கியமாகக் கூடி ஒரு முடிவிற்கு வரவேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். நம்முடைய முதலமைச்சரவர்கள் சொன்னதுபோல, இப்போது மத்திய சர்க்கார் வகுத்திருக்கிற

இந்தக் கொள்கை என்ன ஒரு கேட்டினை தமிழ் நாட்டில் உண்டாக்குமோ, தமிழ்நாட்டு உணவுப் பிரச்சினையில் என்ன ஒரு கொடுமையை ஏற்படுத்து வதற்கு உடந்தையாக இருக்குமோ என்ற அளவில் ஒரு கஷ்டமான நிலைமை இருக்கிறது. ஆகையினால் இதற்கான நல்ல ஒத்துழைப்பினை நீங்களெல்லாம் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய திரு. தீக்ஷிதர் பல விவரங்களை வேடிக்கையாகவே சொன்னார்கள். அவர் தம்முடைய கருத்துக்களை வேடிக்கையாகச் சொல்கிற முறையில் சொல்லியிருக்கிறார்கள். சர்க்கரை மாதிரி ஒரு கட்டுப்பாட்டை அரிசிக்கு வைக்க வேண்டுமென்று சொல்கிறார். இதற்கு நாம் ஒரு பெரிய இயந்திர சாதனத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கு நாம் பெரிய அளவில் கொள்முதல் செய்து ஸ்டாக் பண்ணிக்கொள்ள வேண்டும். இந்தக் கொள்கையை 10 ஆண்டுகளுக்கு முன்னால் எடுத்திருப்பார்களானால், நிச்சயமாகச் சொல்கிறேன், தமிழ் நாட்டைப் பொறுத்தவரைக்கும் எல்லோரும் சுகமாக அரிசி வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டிருக்கலாம். ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்தான் இந்தக் கொள்கையை ஏற்படுத்தி, கொள்முதலை எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ அவ்வளவு செய்திருக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டம் போன்ற மாவட்டங்களிலே தனியார்களைக் கூட கொள்முதல் செய்ய அனுமதிக்கவில்லை. கூட்டுறவு முறையில் தான் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று நினைப்போமானால், நிச்சயமாக பல கோடி ரூபாய் அளவுக்கு இதற்காக ஒரு நிதி தேவைப்படுகிறது. நமக்கிருக்கிற ரூ. 4½ கோடியிலே கிட்டத்தட்ட 3 கோடியே 90 லட்ச ரூபாய் இப்போது செலவிடப்படுகிறதென்று நான் கருதுகிறேன். அந்த அளவிற்கு 300 ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ள மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 400 கிராம் அளவில் போட வேண்டுமென்றால், 50 லட்சம் டன் அரிசி வேண்டும். உதவித் தொகை கொடுத்துப் போட வேண்டுமென்றால், 300 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும். பட்ஜெட்டே கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய் அளவில்தான் இருக்கிறது. 400 கோடிக்கு மேல் கொஞ்சம் இருக்கும். நாம் அரிசிக்கு மட்டும் சப்சிடி கொடுக்கிற நிலைமை வருமானால், இவ்வளவு செலவு ஏற்படும். ஓரளவு தேவையைப் பூர்த்தி செய்கிற அளவில் பற்றாக்குறை இருக்கிற பகுதிகளுக்கு நெல்லைக் கொடுத்து விலை ஏறாமல் பார்த்துக்கொள்கிறோம். விலை ஏறாமல் பார்த்துக்கொள்ள கொள்முதல் செய்கிறோம். திரு. ராஜாராம் நாயுடு சொன்னதுபோல 70 ஆயிரம் டன் என்று போட்டிருந்தாலும் 1,03,549 டன் அரிசி இதுவரையில் லெவி கொள்முதல் ஆகியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: மொத்த குறிக்கோளே 1¼ லட்சம் டன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டு மாதத்தில் செய்து விடலாம்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: குறிக்கோள் இன்னும் நிறைய இருக்கிறது.

திரு. கே. ராஜாராம்: குறிக்கோளே 1¼ லட்சம் டன்தானே.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இன்னும் குறிக்கோளை எட்டுவதற்கு 22 ஆயிரம் டன் வேண்டும். இருக்கிற நிலைமையைப் பார்க்கும் போது, இன்னும் அதிகமாகக் கொள்முதல் பண்ணவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் கேட்டைத் திறந்துவிட்டு விட்டார்கள். ஆகவே நமக்கு அதிகமான அளவு தேவைப்படுகிறது. நாம் கொள்முதல் செய்யவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் திருமங்கலம் தாலுகாவில் லெவியை எடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் பரந்த இந்தத் தமிழ்நாட்டைப் பற்றி சிந்தித்துப் பார்க்கிறேன். இன்றைக்கு லெவியைக் கூட்ட முடியுமா, லெவியைக் குறைக்க முடியுமா அல்லது லெவியை எடுக்க முடியுமா என்று ஆராயவேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

திரு. தீக்ஷிதர் நினைப்பது போல, மண்ணெண்ணெய்க்குக் கலர் கொடுக்க நாங்கள் ஒன்றும் டெக்னீஷியன் இல்லை. அதில் என்ன கலக்குகிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. ஏ. ஆர். தாமோதரன்: இரண்டு மாதங்களுக்கு முன்பு சிவப்புக் கலரை கிரசினோடு சேர்த்திருக்கிறார்கள். அதனால் மண்ணெண்ணெய் கலர் அப்படியிருக்கும். மண்ணெண்ணெயில் கலர் போட்டு கலப்படம் பண்ண வழியில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: புகை அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. நரை வருகிறது. என்னவென்று தெரியவில்லை.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அம்மாதிரியாக எங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. இருப்பினும் என்ன என்பதைக் கவனிக்கிறோம். ஆகையினாலே திரு. தீக்ஷிதர் சொல்வதுபோல, கூடிய வரையிலே மண்ணெண்ணெயை எந்த அளவிற்குக் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்குக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். உங்களுக்குத் தெரியும். டீசல் விலை, பெட்ரோல் விலை அதிகமாகவும், மண்ணெண்ணெய் விலை குறைவாகவும் இருந்தபோது வாகனங்களுக்கு மண்ணெண்ணெயை பயன்படுத்திக்கொண்டார்கள். இப்போது டீசல் விலைக்கும் இதற்கும் அதிக வேறுபாடு இல்லாத

காரணத்தினுல் அதிகத் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கிறது. தட்டுப்பாடு இருக்கிறதென்று சொன்னுர்கள். ஒரு சில இடங்களில் இப்படி இருக்கிறதே தவிர, பெரும்பாலான இடங்களில் நிச்சயமாக இந்த நிலைமை இல்லை. கூட்டுறவு ஸ்தாபனத்தின் மூலமாகக் கொடுக்கச் சொல்லி ஏற்பாடு செய்திருக் கிருேம். சில கிராமங்களில் ஒரு கூட்டுறவு சொசைடி இருக்குமானுல், 4 மைல் 3 மைல் அப்பால் உள்ள கிராமங்களுக்குக் கூடச் சென்று அந்தப் பகுதி மக்க ளுக்குக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை ஆர்.டி. ஓ.க்கள் செய்யவேண்டு மென்று கலெக்டர் உத்தரவு போட்டு, கலெக்டர் இதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிருர். இரண்டொரு மாதத்தில் இவைகளெல்லாம் சீராகப் போய்விடும். ஆனுல் நம்முடைய உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னது போல, வருகிற மாதங்களில் நமக்கு எவ்வளவு கிடைக்குமோ, அவர்கள் என்ன உத்தரவு போடுவார்களோ தெரியாது. அது 24 ஆயிரம் கிலோ லிட்டராக இருக்குமா, அல்லது 22 ஆயிரமாக இருக்குமா, அல்லது 20 ஆயிரமாக இருக்குமாவென்று தெரியவில்லை. எப்படி இருந் தாலும், இதை மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கின்ற நிர்வாக இயந்திரம் மோசமான அளவிற்கு இல்லாமல் ஓரளவிற்குச் செய்கிற அளவிற்கு இருக் கிறது.

நம்முடைய திரு. சங்கரலிங்கம் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றிய பல பிரச்சினைகளைச் சொன்னுர்கள். அவர்களே எல்லா நியாயங் களையும் சொல்லிவிட்டார்கள். எந்த அளவிற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த அளவிற்கு எடுக்கிருேம். தோவாளைப் பகுதி களுக்கு ரேஷன் கார்டு கொடுக்க வேண்டுமென்று சொன்னுர்கள். ப்ரொட் யூசருக்கு லெவி போட்டு வினியோகம் செய்யலாமா என்ற யோசனை இருக் கிறது. இப்போது ப்ரொட்யூசர் லெவி போடுகிற சீசன் இல்லை. அவர் களுக்குத் தேவையான அளவிற்கு, உற்பத்தியானது போக 30 ஆயிரம் டன் கூட வேண்டும். இருந்தாலும் 50 ஆயிரம் டன்னுகை சென்ற ஆண்டு கூட அனுப்பியிருக்கிறேன். என்ன கொடுத்தாலும் அவர்களுக்குத் திருப்தி இருப்பதில்லை. சில கிராமங்கள் இப்படி இருக்கிறதென்று அவர்கள் வாயா லேயே சொன்னுர்கள். பலர் தொழிலாகவே நெல்லைக் கடத்துவதால், புதிய முறைகளையெல்லாம் போலீசார் எடுத்துக்கொண்டிருக்கிருர்கள். எஸ்.பி. அவர்கள் 14 மைல் நடந்தே மலை மேல் போயிருக்கிருர். அவர்கள் கழுதை மேல், 200, 100 கழுதைகள் மேலே ஏற்றிவிட்டு, காடு வனந்திரங்கள் வழியாக அனுப்பிவிடுகிருர்கள். ஜீப்பில் போனுல் ஆட்கள் ஓடிப்போய்விடுவார்களாம், கழுதைகள் மட்டும் அகப்படுமாம். ஆகவே எஸ்.பி. பட்டாளத்தோடு நடந்தே சென்று, 16 மைல் நடந்தே சென்று, அங்கே எல்லையில் போய் நின்

திருக்கிறார். கழுதையும் மனிதனும் சேர்ந்து அகப்பட்டிருக்கிறார்கள். இப்படி கடத்தலை தினமும் நடந்துபோய்ப் பிடிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. சுவர் வைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். பெரிய கோட்டைச் சுவர் மாதிரி, சைனாவில் உள்ளது போன்ற சுவர் வைக்க வேண்டுமென்கிறார்கள். அந்த மாதிரி பெரிய சுவர் வைக்க முடியுமாவென்பது எனக்குத் தெரியாது. அப்படிப்பட்ட விஷயமெல்லாம் என்னால் ஆகாத காரியம். நான் போட முடியாத ஒரு திட்டம். பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் இருக்கிறார்கள். அவர் மனது வைத்தால் நடக்கும். இந்தக் கடத்தலை எந்த அளவிற்கு நிறுத்த முடியுமென்று நம்முடைய போலீஸ் இலாகா, அதாவது உணவு போலீஸ் இலாகா பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அந்த மக்களை எந்த அளவிற்குத் திருத்த முடியுமோ அதற்கு முயற்சி செய்ய வேண்டும். திரு. சங்கரலிங்கம் போன்று பகுதியிலிருக்கிற நல்ல படித்தவர்கள், பொதுவாழ்க்கையில் இருப்பவர்கள் அவர்களை வேறு ஏதாகிலும் தொழில் செய்யுமாறு தூண்ட முயற்சிக்கலாம். இன்னொரு பயம்கூட அவருக்கு உண்டு. தாட்சண்யம் இல்லாமல் விஷயத்தை வெளிப்படையாகச்

(6·50 பிற் பகல்).

சொல்லிவிட்டார். ஒரு சட்ட மன்ற உறுப்பினராக இருந்தால் சொல்ல மாட்டார், ஏனென்றால் ஓட்டு வாங்க வேண்டும். மேலவை உறுப்பினராக இருப்பதால், சொல்லி விட்டார். அவரைப் பாராட்டுகிறேன். ஒத்துழைப்பையும், இப்படிச் செய்கின்றவர்களைக் காட்டிக் கொடுக்கக் கூடிய ஒரு நிலைமைக்கு நீங்கள் எல்லோரும் வந்தாலொழிய, நிச்சயமாக இந்தக் காரியம் நடக்காது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அந்தப் பகுதி மக்களுக்கு என்னென்ன நன்மைகள் செய்ய முடியுமோ, அதையெல்லாம் செய்துகொண்டிருக்கிறோம். ஒரு தாலுக்கா பூராவும் என்ற அளவில் குடும்பக் கார்டு கொடுத்து, அவர்களுக்கெல்லாம் அரிசி கொடுத்து வருகிறோம். தோவாளை வட்டம் எல்லாம் கொஞ்சம் சர்ப்ளஸ் உள்ள பகுதி. அங்கே உற்பத்தியாகின்ற நெல்லை அங்கேயுள்ள மில்களுக்கே கொடுக்க மறுக்கும் நிலைமை இருந்து வருகிறது. அரிசியானாலும், நெல் ஆனாலும், ஆறு வாய்க்கால்கள் வழியாக எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறது. அந்தப் பகுதிகளில் வீடுகளின் திண்ணைப்புறம் தமிழ் நாட்டில் இருக்கிறது, வீடுகளுடைய தோட்டப்புறம் கேரள மாநிலத்திலிருக்கிறது. ஆகவே இங்கேயிருந்து போகின்ற அதிகாரிகள் தவறைச் செய்கின்றவர்களைப் பிடிப்பதில் பெரும் சங்கடங்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. சில இடங்களில் பிடிக்கிறோம். இந்தப் பகுதியில் உள்ள அதிகாரிகள், அந்தப் பகுதியில் உள்ள அதிகாரிகள் என்ற நிலைமை எல்லாம் வருகிறது. பெரும்பாலானவற்றைப் பிடித்திருக்கிறோம். இன்னும் சிலவற்றைப் பிடித்துக்கொண்டிருக்

கிறோம். அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது. உணவு இலாகாவைப் பொறுத்த வரையில், மற்ற மாவட்டங்களை விட கன்னியாகுமரி மாவட்டத்தில் நல்ல சிந்தனையோடு பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறது. அந்தத் தொகுதியில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜேம்ஸ் போன்றவர்களே நேற்று சட்டமன்றத்தில் பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தைக் கவனித்து வருகிறோம். நாங்கள் இன்னும் பற்றுக்குறை போன்ற இதர பிரச்சினைகளில் எந்த அளவுக்கு அக்கறை காட்டி கொள்முதல் செய்து காரியங்கள் செய்ய வேண்டுமோ அதற்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், உளுந்து உள்பட பல பொருள்களை ஓரளவுக்கு வாங்கி வைத்துக்கொண்டு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் வினியோக முறையில் குறைகள் ஏதும் இல்லாத அளவுக்குச் செயல்பட முயற்சிக்கிறோம் என்ற நிலைமையைச் சொல்லி, இந்தத் துறையில் நல்ல முறையில் ஒத்துழைக்கின்ற உணவுத் துறை செயலாளர், மற்றுமுள்ள அதிகாரிகள் எல்லோருக்கும் உங்கள் மூலமாக என்னுடைய நன்றியை மீண்டும், சொல்லிக்கொள்கிறேன். இன்னும் பல நல்ல கருத்துக்களை இங்கு எடுத்துச் சொன்னீர்கள். அருமை நண்பர் திரு. பொன்னுவேலு அவர்கள் மிக ஆங்காரத்தோடு உணவு இலாகாவில் ஆரம்பித்து, விவசாய இலாகாவுக்கு வந்து கடைசியில் பாராட்டுகிறேன், ஆதரிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். அது தனிப்பட்ட முறையில் என்மீது உள்ள அன்பு காரணமாக என்று சொல்லத் தேவையில்லை. விவசாயிகளுக்காக ரொம்ப அக்கறை காட்டினர். அவர் கிராஜுவேட். அவர் காலேஜில் படித்துக்கொண்டிருந்தபோது, நான் உழுதுகொண்டிருந்தேன். பயிர் செய்கின்ற தொழில் எனக்கு நன்றாகத் தெரியும். அதிலே உள்ள கஷ்டங்கள் எல்லாம் எனக்குத் தெரியாதவை அல்ல. நூற்றுக்கு 90 பேர், உழுது பயிர் செய்கின்றவர்கள் வாங்கிச் சாப்பிடும் நிலைமையில் இருப்பார்கள். எனக்கு நிலம் இருக்கிறது. எனக்கு அதிலிருந்து வருவாய் வருகிறது. உழுது நெல்லை உற்பத்தி செய்து கொடுக்கிறவன் தனக்குத் தேவையான நெல் வைத்துக்கொள்ள முடியாத நிலைமை தான் இருக்கிறது. பாரதிதாசனே பாடியிருக்கிறார்.

'பொழுதுதோறும் புனலுக்கும், அனலுக்கும்
சேர்த்து நிற்கும், தற்குறித்த பாம்பினுக்கும்
பிலத்தினுக்கும் பலியாகி கால் கைகள்,
உடலசைந்து, பச்சை ரத்தம் பறிமாறி,
இந்த நாட்டில் சலியாது விவசாயம் செய்து
வருகிறானே'

அந்த ஏழை விவசாயத் தொழிலாளிகளில் நூற்றுக்கு 90 பேர், இந்தத் தமிழ் நாட்டில் ஒரு மாதத்திற்கு வேண்டிய நெல்லை வைத்துக்கொண்டிருக்கிருர்கள் என்ற நிலைமை இல்லை. அவர்களையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? சென்னையிலும் கோயம்புத்தூரிலும் உள்ளவர்கள் கொடுத்து வைத்தவர்கள் என்று சொல்வது வேறு. வந்தால் என்ன தருகிருய், வரும்பொழுது என்ன கொண்டு வருகிருய் என்று கேட்பது வேறு. நாம் இன்றையதினம் விவசாயி களுக்கு ஒன்றும் குறைவாகச் செய்துவிடவில்லை. 36 சதவீதம் விலையை உயர்த்தியிருக்கிருேம். ஒன்றும் குறைவாக அவர்களைக் கவனித்துவிட வில்லை. அவர்கள் தங்களுடைய தேவைக்கு, ஓரளவு அத்தியாவசியமானவற் றிற்கு ஏற்பாடு செய்துகொள்ளும் வகையில் செலவைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனுல் வேட்டி அளவுக்கு உயர்த்திக்கொடுக்க முடியாது.

திரு. டி. கே. பொன்னுவேலு: மாண்புமிகு தலைவரவர்களே, உயர்த்தியதற்கு நன்றி. உயர்த்தியது போதாது. இன்றையதினம் 1962-ல் நிர்ணயித்ததற்கு மேல் 36 சதவீதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனுல் மற்ற பொருள்கள் 300, 400 மடங்கு என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. ஆகவே மேலும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெல்லுக்கு விலையை நிச்சயமாக உயர்த்த வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய இடத்திலிருந்து பேச வேண்டும்.

The Hon. member, an educated man, should not have raised the point from the seat of another member.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நாங்கள் என்னென்ன செய்திருக்கிருேம் என்பதையெல்லாம் இந்தக் குறிப்பில் எடுத்துக்காட்டி யிருக்கிருேம். நேற்று அந்த அவையில் படித்துக் காட்டினேன். இங்கே படிக்க வேண்டாமென்று நினைக்கிறேன். ஏனென்ருல் நேரம் இல்லை. 1946-லிருந்து விலையை ஏற்றிக் கொண்டே வந்திருக்கிருேம். இது மூன்ருவது கட்டமாக ஏற்பட்ட விலை உயர்வு. வேட்டி போன்ற மற்ற பொருள்களை விட அரிசி மிக அத்தியாவசியமான பொருள். தினந்தோறும் நாம் வேட்டி வாங்குவதில்லை. தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகளுக்குத்தான் வாங்குகிருேம். சாப்பிடு வதற்கு அரிசி எப்பொழுதும் தேவை. அதற்கு அதிகமாக வைத்துக்கொள்ள வேண்டும். இந்தப் பணவீக்கத்தால் ஏற்படுகின்ற பணம் யார் கையில் போகிறது என்று தெரியவில்லை. ஒரு தொழிற்சாலை ஏற்பட்டு அதற்கு இயந்திரங்கள் போன்றவை வாங்கப்பட்டால், அந்தப் பணம் ஓரிடத்தில் போய் வரவு-செலவு செய்யப்படும். யார் யார் கைக்கோ போய் அவர்கள் அதை வைத்துக்கொண்டு

என்னென்னமோ வாங்குகிறார்கள். அவர்கள் என்ன விலை வேண்டுமானாலும் கொடுத்து வாங்கத் தயாராக இருக்கிறார்கள். அந்த நிலைமைக்கு தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் அரிசிக்கு வராது. ஏழை விவசாயி காப்பாற்றப் படுவான். இரண்டு பேரையும் காப்பாற்றுகின்ற முறையில்தான் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படும். நேற்றைய நிலைமை நிச்சயமாக இன்றையதினம் வராது என்று சொல்லிக்கொள்கிறேன். நண்பர் திரு. பொன்னுவேலு குறைப்பட்டுக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயி களைப் பொறுத்த வரையில், விவசாயிகளுடைய பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்த வரையில், இந்த அரசாங்கம் மிகுந்த கவனம் காட்டி வருகிறது. விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கடன் கொடுத்து வருகிறோம். அதை எந்த அளவுக்குப் பெருக்கியிருக்கிறோம் என்பதை தயவுசெய்து உணர்ந்து பார்த்தால், எந்தெந்த அளவுக்கு விவசாயிகளுக்கு நன்மைகள் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு பல வழிகளில் செய்திருக்கிறோம் என்பது விளங்கும். உரங்கள் கொடுத்து வருகிறோம். கிட்டத்தட்ட 9 சதவீத வட்டிக்குக் கடன் கொடுத்து வருகிறோம். அந்தக் கடன்களும் காலா காலத்தில் கிடைக்கும்படி செய்திருக்கிறோம். உற்பத்தியான பொருள்களின் விலைகள் குறைந்து விடாத அளவுக்கு வாங்குகின்ற நிலைமைக்குக் காப்பாற்றுகிறோம். இப்படிப்பட்ட நன்மைகளைச் செய்திருக்கிறோம். இந்த அரசு விவசாயிகளுக்கு நிச்சயமாக நண்பனாகத்தான் இருக்கும். ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கூலிகள் நான்கு படி நெல் தான் கூலியாகப் பல வருஷங்கள், நூறு வருஷங்களாகப் பெற்று வந்தார்கள். எனக்குத் தெரிந்து 1947-லிருந்து நான்கு படி நெல் தான் இருந்தது. 1968-ல் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அதை ஆறு படியாக்கி உயர்த்திக் கொடுத்தார்கள். அதற்காகத் தஞ்சை மாவட்டத்தில் பல உயிர்கள் பலி கொடுக்கப்பட்டிருக்கின்றன. அண்ணாவே ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார், 'மாஸ்கோவும் மன்னார்குடியும்' என்று. அது பெரிய பிரம்மாண்டமான போராட்டம். மாஸ்கோவில் நடந்த புரட்சி மன்னார்குடியில் நடந்தது என்று எழுதியிருக்கிறார். மன்னார்குடி என்றால் எல்லோரும் சிரிக்கிறார்கள். மணலி பிறந்த பகுதி. ஒரே நாளில் ஆறு பேரைச் சுட்டுக் கொன்றார்கள். வெள்ளைக் காரர்கள் ஆட்சியில் அல்ல, சுதந்திர ஆட்சியில்தான் நடந்தது. களப்பால் குப்பு, கோட்டூர் நடேசன் போன்ற கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் சுட்டுத் தள்ளப்பட்டார்கள். ஒரு நாள் தொலைபேசி மூலம் கேட்டேன். அப்பொழுது தஞ்சாவூரில் முத்தரப்பு மாநாடு நடந்துகொண்டிருந்தது. மிராசுதார்கள், விவசாயத் தொழிலாளிகள், அதிகாரிகள், கலந்து கொண்ட மாநாடு. மாவட்டக் கலெக்டர் நடத்தினார். அண்ணா அவர்கள் உடனே ஆறு படியாக உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, இந்த ஆட்சியில் நாலு விவசாயிகள் சுட்டுத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: Time is extended

7 00 பி.ப.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தஞ்சை மாவட்டத்தில் நடந்த போராட்டத்தைப்பற்றிச் சொன்னேன். அந்தக் காலத்தில் இரண்டு படி கூட வேண்டும் என்பதற்காகக் கஷ்டங்கள் ஏற்பட்டன. அந்தப் பிரச்சினையைப்பற்றி முத்தரப்பு மாநாடு நடந்து கொண்டிருந்தது. பேச்சு வார்த்தை நடக்கின்றபோது, அண்ணா அவர்களை ஃபோனில் கூப்பிட்டுக் கேட்டோம். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ரங்கபாஷ்யம் ஃபோனில் கேட்டார்கள். "அண்ணா அவர்களே, மிராசுதாரர்கள் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள், என்ன செய்வது" என்று கேட்டார்கள். இரண்டு படி கொடுக்கும்படி கலெக்டரை விட்டு அவார்டு (award) போடச் சொன்னார் அண்ணா அவர்கள். இந்த மாதிரி எந்தக் காலத்தில் நடந்திருக்கும் என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த அளவுக்கு விவசாயக் கூலிகள் நிலைமையை உணர்ந்து காரியங்களைச் செய்திருக்கிறது இந்த அரசு. திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் இடத்திலிருந்து போய்விட்டார். அவர் சமீபத்தில் நடந்த விவசாயிகள் போராட்டத்தைப்பற்றிச் சொன்னார். அது பட்டகாரர் தலைமையில், ஜமீன்தார் தலைமையில் நடந்த மிராசுதாரர்கள் போராட்டமே தவிர, விவசாயிகள் போராட்டமல்ல. நான் மணலி கந்தசாமி தலைமையில், சீனுவாசராவ் தலைமையில், கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் நடத்திய விவசாயிகள் போராட்டத்தைப்பற்றிச் சொன்னேன். திரு. தீக்ஷிதர் அவர்கள் பட்டகாரர் தலைமையில் நடந்த மிராசுதாரர்கள் போராட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று சொல்லி, உணவுத் துறை நன்றாகப் பணியாற்றுகிறது என்றும், எதிர்காலத்தில் ஏதாவது கஷ்டம் வருகிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து அவற்றைத் தீர்ப்பதில் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடிக்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மீண்டும் 1—4—1974 திங்கட்கிழமை மாலை 4 மணி அளவில் கூடும்.

7·02 பி.ப.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

217. Notification issued with G.O. Ms. No. 1913, Home, dated the 13th July 1973 in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

218. Notification issued with G.O. Ms. No. 2194, Home, dated the 18th August 1973 in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

B. Reports, Notifications and other papers.

96. Erratum issued with Memorandum No. 59400/ME/73-2, Rural Development and Local Administration, dated the 31st May 1973 to G.O. Ms. No. 2154, Rural Development and Local Administration, dated the 10th October 1972 published at pages 944–945 of Part II—Section I of the *Tamil Nadu Government Gazette*, dated the 8th November 1972.

97. Notication issued with G.O. Ms. No. 7569, Revenue, dated the 27th December 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1399) in respect of the gift deed to be executed in favour of the Government by the Madura Mills Company Limited, Madurai.

98. Notification issued with G.O. Ms. No. 4880, Revenue, dated the 14th August 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the endowment deed to be executed by the settlers mentioned in the schedule in favour of the Sree Ayyappa College Managing Committee in Kanyakumari district.

99. Notification issued with G.O. Ms. No. 7359, Revenue, dated the 13th December 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) on the instruments of transfer of debentures to be issued in the form of stock certificates and promissory notes by the Tamil Nadu Housing Board in connection with the loan to the value of Rs. 110 lakhs (Rupees one hundred and ten lakhs), floated by the said Board during December 1972.

இணைப்பு I

[II ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 12 OF 1974.

(As passed by the Assembly)

A Bill to provide for the appropriation of certain further moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year which commenced on the 1st *April* 1973

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fifth year of the Republic of India as follows :—

Short title.—This Act may be called the Tamil Nadu Appropriation Act, 1974.

2. *Supplementary appropriation out of the Consolidated Fund for the financial year which commenced on the* 1st *April* 1973.—The State Government may appropriate out of the Consolidated Fund of the State for the financial year which commenced on the 1st April 1973, a further sum not exceeding fifty three crores ninety lakhs sixty seven thousand and two hundred rupees, being moneys required to meet—

(*a*) the suplementary grants made by the Tamil Nadu Legislative Assembly for that period, as set forth in column (3) of the Schedule; and

(*b*) the supplementary expenditure charged on the consolidated Fund of the State for that period, as set forth in column (4) of the Schedule.

TRUTH ALONE TRIUMPHS

THE SCHEDULE.

Demand number.	Services and purposes.	Sums not exceeding. Voted by the Legislative Assembly.	Charged on the Consolidated Fund of the State.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
1	Land Revenue Department ..	55,25,900	..	55,25,900
2	State Excise Duties ..	21,17,000	..	21,17,000
3	Motor Vehicles Acts Administration.	9,51,800	2,600	9,51,800
4	General Sales Tax and Other Taxes and Duties—Administration.	83,37,600	..	83,40,200
5	Stamps—Administration	10,98,200	..	10,98,200
6	Registration Department ..	18,41,900	400	18,42,300
7	Statt Legislature	12,19,600	19,000	12,38,600
8	Elections	12,76,200	..	12,76,200
9	Head of State, Ministers and Headquarters Staff.	1,31,47,000	6,89,500	1,38,36,500
10	Milk Supply Schemes	77,50,700	..	77,50,200
11	District Administration and Miscellaneous.	2,65,11,700	37,900	2,65,79,600
12	Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowsmens Act, 1959.	6,60,800	..	6,60,800
13	Administration of Justice ..	44,53,100	7,14,500	5,67,600
14	Jails	56,45,000	..	56,45,000
15	Police	3,24,70,700	44,800	3,25,14,800
16	Education	7,41,63,900	500	7,41,64,400
17	Medical	2,52,32,700	..	2,52,32,700
18	Public Health	300	..	300
19	Agriculture	1,60,37,700	71,900	1,61,09,600
20	Fisheries	48,67,800	..	48,67,800
21	Animal Husbandry	300	6,500	6,800
22	Co-operation	35,35,200	..	35,35,200

[1974 மார்ச் 30

Demand number.	Services and purposes.	Sums not exceeding. Voted by the Legislative Assembly.	Charged on the Consolidated Fund of the State.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
23	Industries	44,28,500	..	44,28,500
25	Handloom and Textiles ..	1,57,200	..	1,57,200
26	Khadi	100	..	100
27	Community Development Projects, etc.	4,10,97,200	..	4,10,97,200
28	Labour including Facto-ries.	19,36,600	..	19,36,600
29	Welfare of the Scheduled Tribes and Castes, etc.	10,00,000	..	10,00,000
32	Public Works—Works] ..	1,47,65,300	4.72,100	1,52,37,400
33	Public Works—Establishment and Tools and Plant.	1,75,98,200	..	1,75,98,200
34	Public Works—Grants-in-Aid.	100	..	100
35	Road Transport Schemes..	87,28,600	1,50,000	88,78,600
37	Pensions	1,72,71,900	..	1,72,71,900
38	Miscellaneous	200	82,800	83,000
40	Forest Department ..	53,47,000	—	53,47,000
44	Capital Outlay on Agriculture.	..	3,85,200	3,85,200
45	Capital Outlay on Industrial Development.	4,11,01,800	3,11,500	4,14,13,300
46	Capital Outlay on Irrigation.	24,32,900	..	24,32,900
47	Capital Outlay on Public Works.	1,56,94,300	6,87,000	1,63,81,30
48	Capital Outlay on Road Transport Schemes.	43,03,100	..	43,03,100
50	Commuted Value of Pensions.	..	9,000	9,000
51	Capital Outlay on Schemes of Government Trading.	..	9,600	9,600
52	Loans and Advances by the State Government.	12,26,35,300	..	12,26,35,000
	Grand Total ..	53,53,72,400	36,94,800	53,90,67,200

இணைப்பு II

[476 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க]

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் கொள்கை

விளக்கக் குறிப்பு,

1973-74ஆம் ஆண்டில், இந்நாட்டில், உணவுப் பொருள்களின் விலையும் ஏனைய நுகர் பொருள்கள் மற்றும் தொழிற்சாலை உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றின் விலையும் எல்லா வகையிலும் உயர்ந்தன. வரலாறு காணாத வகையில் விலைவாசி ஏறியது. அனைத்திந்திய பொது வாழ்க்கைச் செலவுப் புள்ளியானது, 1973, மார்ச்சில் 216 ஆக இருந்து 1973, டிசம்பரில் 260 ஆயிற்று. வாழ்க்கை உணவுச் செலவுப் புள்ளியானது, 1973, மார்ச்சில் 236 ஆக இருந்து 1973, டிசம்பரில் 289 ஆக உயர்ந்தது. நுகர் பொருள்கள், குறிப்பாக உணவுப பொருள்கள் கிடைப்பது மிகவும் அரிதாய் இருந்தது. டில்லி, பம்பாய், கல்கத்தா ஆகியவிடங்களிலுள்ள சந்தைகளிலிருந்து அரிசி, கோதுமை, பயறு வகைகள், சமையலுக்கான எண்ணெய்கள் போன்ற இன்றியமையாப் பொருள்கள் கூட இருந்த இடந்தெரியாமல் மறைந்தன. இத்தகைய சூழ்நிலையின் காரணமாக போராட்டங்களும் கட்டுக்கடங்கா வன்முறையும் உருவாகி அரசுகள் கவிழவும் காரணமாய் அமைந்தது.

இத்தகைய இருளார்ந்த சூழ்நிலையில் நாடு நலிந்து தவித்துக் கொண்டிருக்கையில், பொதுமக்களும் உற்பத்தியாளர்களும் மன நிறைவு பெறும் வகையில் தமிழ்நாடு தனித்து நின்று தன்னை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளைச் சமாளித்தது. ஒரு சிலரால் செயற்கையாக ஏற்பட்ட நெருக்கடிகள் தவிர, மற்றப்படி, மாநிலம் முழுதும், போதுமான அளவுகளில், நியாயமான விலைகளில் பொருள்கள் வழங்கப்பட்டன. தமிழ்நாட்டில், வாழ்க்கை உணவுச் செலவுப் புள்ளி 1973, மார்ச்சில் 216 ஆக இருந்து 1973, டிசம்பரில் 241 ஆக உயர்ந்தது என்பதையும், அனைத்திந்திய அளவில் இவ்வுயர்வு 22·4 சத வீதமாக இருக்க, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இவ்வுயர்வு 11·6 சத வீதம்தான் என்பதைக் கேட்டு நமது மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். முக்கியமாக, தானிய வகைகள், எண்ணெய் வகைகள் ஆகியவற்றின் விலைகள் உயர்ந்த காரணத்தால் இந்த விலை உயர்வு ஏற்பட்டது, பயறு வகைகள், 4 சத வீதம் விலை குறைந்தன. எண்ணெய்கள் 14 சத வீதம் விலை உயர்ந்தன. துரதிருஷ்டவசமாக, எண்ணெய் வித்துக்கள் நமது மாநிலத்தில் குறைந்த அளவில்தான் உற்பத்தியாகின்றன. இவ்வகையில் நாம் பெரும்பாலும் பிற மாநிலங்களையே நம்பியிருக்க வேண்டிய நிலையுள்ளது. தானியங்களின் விலை 15·5 சத வீதம் உயர்ந்தது.

உரம், பூச்சிக்கொல்லி மருந்து, பயிர்நோய் பூச்சிக் கொல்லி மருந்து ஆகிய வகைகளில் பற்றுக்குறை ஏற்பட்டிருந்தும் இயற்கை நம்மிடம் காட்டிய பரிவு, ஏறத்தாழ நல்ல விளைச்சல் ஏற்பட்டது ஆகியவையே இதற்கு ஓரளவு காரணமாகும். இருப்பினும், நமது மாநிலத்திலுள்ள மனநிறைவளிக்கும் நிலைமைக்கு இதுவே முழு காரணமாகச் சொல்லமுடியாது. சில மாநிலங்களில் மிகு விளைச்சல் காணப்பட்ட போதிலும், நெருக்கடி மிகுந்து காணப் பட்டது.

நியாயமான விலைகளில் போதுமான அளவுக்கு வெளிச்சந்தை கொள்முதல் செய்தல், உரிய நேரத்தில் ஆதரவு விலையில் கொள் முதல் செய்தல், லெவி முறை மூலம் உற்பத்தியாளர்களுக்குத் தேவையற்ற தொல்லை தருவதைத் தவிர்த்தல் ஆகியவற்றின் மூலம் உற்பத்தியாளர்களுக்கு எல்லாவகையிலும் அரசு ஊக்க மளித்தது. அரிசி வணிகத்தைப் பொறுத்தவரையில், அவசிய மான இடங்களிலெல்லாம் எளிய மக்களுக்குப் பொதுப்பங்கீட்டு முறை மூலம் பொருள்களை வழங்கியும் மாநில முழுவதிலும் கோதுமை, கோதுமைப் பொருள்கள், சர்க்கரை ஆகியவற்றின் மொத்த வணிகத்தை மேற்கொண்டும் பாதகமான சூழ்நிலை உரு வாகும் என்று தோன்றிய சமயங்களில் இன்றியமையாப் பொருள் களின் விலை உயராமல் இருக்க, வணிகம் மற்றும் தொழில் வகைகளில் தொடர்ந்தாற்போல் தொடர்பு கொண்டும் பொது மக்களின் நலனில் அக்கறை காட்டினோம். பயறு வகைகளுக்கு விற்பனை வரிவிலக்கு அளிப்பது மக்களுக்கு நன்மை பயக்கும் என்று தெரியவந்ததால், பயறு வகைகளுக்கு விற்பனை வரியி லிருந்து நாம் விலக்களித்தோம். இம் மாநிலத்தில் மனநிறை வளிக்கும் சூழ்நிலை நிலவிவருவதற்கு இதுவே முக்கிய காரண மாகும்.

அரிசி பற்றிய கொள்கை.

அரிசி, நெல் வணிகத்தை முறைப்படுத்தவும், விலைவாசி ஒரு நிலையிலிருக்குமாறு பார்த்துக் கொள்ளவும், ஒரு சீரான பங்கீட்டு முறையைச் செயற்படுத்தவும் இயலும் வகையில் இம் மாநிலம் 19 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. ஏற்றுமதி செய்யும் மாவட்டத்தின் ஆட்சித் தலைவரால் வழங்கப்படும் அனுமதிகள் மேலன்றி மற்றப்படி ஒரு மண்டலத்திற்கும் மற்றொரு மண்டலத் திற்கும் இடையே அரிசி-நெல் கொண்டு செல்லப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

1973-74ஆம் ஆண்டில், பொதுப் பங்கீட்டு முறைக்கும் அண்டை மாநிலங்களுக்கு உரிய தருணத்தில் வழங்கவும், மத்தியத் தொகுப்பு ஏற்பாட்டுக்கு அனுப்பவும் தேவைப்படும் தானியங்களைப் பெறும் பொருட்டு வணிகர்கள், ஆலையதிபர்கள் ஆகியோர்மீது லெவி விதிக்கும் கொள்கையைத் தொடர்ந்து

1974 மார்ச் 30]

அரசு பின்பற்றியது. அறுவடை, விற்பனை நிலைமைகளையொட்டி, வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு பகுதிகளில் லெவி விதிக்கப் பட்டது. 20 சத வீதம் முதல் $33\frac{1}{3}$ சத வீதம் வரை வெவ்வேறு விகிதங்களில் லெவி விதிக்கப்பட்டது. இந்த லெவி விதிப்பு மூலம் நாம் 1,14,027 டன் அரிசியைச் சேகரிக்க முடிந்தது. மேலும், குறுவை பருவத்தின்போது அறுவடையான நெல்லை விற்பனை செய்யும் வகையில் சிக்கல்கள் தோன்றியபோது ஆதரவு விலையில் இந்திய உணவுக் கழகமும் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகமும் சேர்ந்து 91,367 டன் அரிசி வாங்கப்பட்டது. பல்வேறு வகைகளில் கொள்முதல் செய்யப்பட்ட அரிசியின் அளவு மொத்தம் 2,09,398 டன்னாகும். இதில், சென்னை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களில் பொதுப் பங்கீட்டு முறைக்காக 98,590 டன் அரிசி எடுத்துக் கொள்ளப்பட்டது, மத்தியத்தொகுப்பு ஏற்பாட்டிற்கு மாநிலத்தின் பங்காக 111,435 டன் அரிசி கொடுக்கப்பட்டது, இருதரப்பு உதவித் திட்டத்தின்கீழ் பின்வரும் மாநிலங்களுக்கு 34,000 டன் அரிசி கொடுக்கப்பட்டது:—

	(டன்கள்).
மகாராஷ்டிரம்	10,000
குஜராத்	11,000
கேரளா	9,000
மைசூர்	3,000
மேற்கு வங்காளம்	1,000
மொத்தம் ..	34,000

சென்னை, கோயம்புத்தூர் மாநகர்களிலுள்ள, திங்களொன்றுக்கு ரூ. 300 அல்லது அதற்குக் குறைவான வருமானமுள்ள குடும்பங்களுக்கு முறையின் மரபில் (Informal distribution system) அரிசி வழங்கும் முறையை நாம் தொடர்ந்து மேற்கொண்டோம். இதன் மூலம் 28·25 இலட்சம் பேர் பயன் பெற்றனர். எல்லையோரப் பகுதியைத் தாண்டி அரிசி கடத்திச் செல்லப்படுவதைத் தடுக்கவேண்டி கடுமையான கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டி வந்த கன்னியாகுமரி மாவட்ட எல்லையோரப் பகுதிகளில் அரிசி கிடைக்கச் செய்யவும், நெல் உற்பத்தியாகாத இப் பகுதியில் நியாய விலையில் அரிசி கிடைக்கச் செய்யவும் விளவங்கோடு வட்டத்திற்கும் கல்குளம் வட்டத்தைச் சேர்ந்த பத்து கிராமங்களுக்கும் பொதுப் பங்கீட்டுத் திட்டம் நீட்டிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் அப் பகுதியிலுள்ள 10·91 இலட்சம் மக்கள் பயன் பெற்றனர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோதுமை.

நமதும மாநிலத்திற்கு, 1972-73-ல் மொத்தம் 359,000 டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க 1973-74-ல், மொத்தம் 147,000 டன் அளவுக்கே கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடந்த இரு மாதங்களில் கோதுமை ஒதுக்கீடு படிப்படியாக குறைக்கப்பட்டது. மாதந்தோறும் சாதாரணமாக 34,000 டன் கோதுமை ஒதுக்கப்படுவது வழக்கம், ஆனல், தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது 9,000 டன்தான். கோதுமை ஒதுக்கீட்டில் இத்தகையதொரு கடுமையான வெட்டு இருந்த போதிலும், கோதுமை உணவு உண்போர், நீரிழிவு நோயாளிகள், கோதுமையைப் பெருமளவில் பயன்படுத்தும் ஓட்டல்காரர்கள், ரொட்டிக் கடைக்காரர்கள், சேமியா தயாரிப்பாளர்கள், பிஸ்கட் தயாரிப்பாளர்கள் ஆகியோரின் நியாயமான தேவைகளையும் நாம் நிறைவுசெய்து, சமாளித்து வருகிறோம். கோதுமை, கோதுமைப் பொருள்கள் மொத்த வணிகத்தை முழு மனதோடும், வெற்றிகரமாகவும் மேற்கொண்ட ஒரே அரசு தமிழ்நாடு அரசாகத்தான் இருக்க முடியும்.

தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு நிறுவனத்தின் கடைகளிலிருந்தும், கூட்டுறவு பண்டகசாலைகளிலிருந்தும் கீழ்க்கண்ட கட்டுப்பாட்டு விலைகளில் பொதுமக்களுக்கு கோதுமையும், கோதுமைப் பொருள்களும் விற்கப்படுகின்றன:—

	(கிலோ கிராம் ஒன்றுக்கு). ரூபாய்.
கோதுமை	1·00
மைதா	1·30
ரவை	1·30
கப்பி ஆட்டா	1·00

தற்போது, கோதுமை உணவு உண்போருக்கும், நீரிழிவு நோயாளிகளுக்கும், திங்களொன்றுக்கு, முறையே, ஆறு கிலோ, ஐந்து கிலோ வீதங்களில் நாம் கோதுமை வழங்கி வருகிறோம். கோதுமையை பெருமளவில் பயன்படுத்துவோரின் 1971-72 ஆண்டு மொத்தக் கணக்கு, 1972, ஏப்ரலிலிருந்து 1972, செப்டம்பர் வரை கோதுமை விற்பனைமீது கட்டுப்பாடு இராத, பற்றுக்குறை இராத நிலை இருந்தபோது அவர்கள் வாங்கிய கோதுமையின் அளவு ஆகியவற்றில் எது குறைவோ அதைக் கணக்கிற்கொண்டு, அவர்களுக்காக கோதுமை ஒதுக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெரும் வேறுபாடுகள் காணப்படும் நேர்வுகளில், 1969-70, 1970-71, 1971-72 ஆண்டுகளுக்கான மொத்தக் கணக்குகள்

1974 மார்ச் 30]

கணக்கிற் கொள்ளப்படுகின்றன. கிடைக்கக்கூடிய கோதுமையின் அளவுக்கேற்ப, ரொட்டி தயாரிப்பாளர்களுக்கு அதிக முக்கியத்துவமும், சேமியா தயாரிப்பாளர்களுக்கு குறைந்த முக்கியத்துவமும் அளிக்கப்பட்டு பங்கீடு முறைப்படுத்தப்படுகிறது.

பங்கீடு அட்டை பெற்றுள்ளோருக்கு எஞ்சிய கோதுமையிலிருந்து சிறு அளவில் கோதுமை வழங்கப்படுகிறது. நம்முடைய குறைந்த அளவு நியாயமான தேவைகளை நிறைவு செய்ய நமக்கு 20,000 டன் கோதுமை தேவைப்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சர்க்கரை.

சர்க்கரைத் தொழிற்சாலைகளிலிருந்து பல்வேறு பகுதிகளுக்குச் சர்க்கரை வழங்குவதை மத்திய அரசு முறைபடுத்துகிறது. இந்நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையில் 70 சத வீதத்தை இந்திய அரசு லெவி சர்க்கரையாக எடுத்துக்கொண்டு, அந்தச் சர்க்கரையை ஏற்றுமதி செய்வதுடன் பல்வேறு மாநிலங்களின் சொந்தப் பயனுக்காகவும் ஒதுக்கீடு செய்கிறது. சர்க்கரைத் தொழிற்சாலைகள், எஞ்சிய 30 சத வீத அளவு சர்க்கரையை இந்தியாவின் எப்பகுதியிலும் உள்ள சந்தைகளில் தாராளமாக விற்பனை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. லெவி சர்க்கரையானது நாடு முழுவதும் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2·15 என்ற குறிப்பிட்ட விலையில் விற்கப்பட வேண்டும். 1973-74-ம் ஆண்டில், தமிழ் நாட்டிற்கு பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ளவாறு மொத்தம் 1,24,660·12 டன் சர்க்கரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உணவுப்பொருள் வழங்கு ஆணையாளர், மாநிலத்திற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள சர்க்கரையை, நபர்வாரி அடிப்படையில் மாவட்டங்களுக்குப் பங்கீடு செய்கிறார். தேவைப்படும் அளவை நிர்ணயிக்க கீழ்க்கண்ட விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன:--

வருமானம். (1)	நகர்ப் பகுதிகள். (2)	கிராமப் பகுதிகள். (3)
ஒரு திங்களுக்கு ரூபாய் 300-ம் அதற்குக் குறைந்தும்.	2 கிலோ.	1 கிலோ.
ஒரு திங்களுக்கு ரூபாய் 301 முதல் ரூபாய் 499 வரை.	4 கிலோ.	2 கிலோ.
ஒரு திங்களுக்கு ரூபாய் 500-ம் அதற்கு மேற்பட்டும்.	6 கிலோ.	4 கிலோ.

மேற்சொன்ன வகையில் பார்த்தால், இம் மாநிலத்திற்குத் திங்களொன்றுக்கு மொத்தம் 14,000 டன் சர்க்கரை தேவைப்படும்.

LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இவ்வாறு மாவட்ட அளவில் சர்க்கரை ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர், பல்வேறு மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள், மேற் சொன்ன அடிப்படையில் (சிறு மாறுதல்களுடன்) தத்தம் மாவட்டங்களில் இந்த ஒதுக்கீட்டுச் சர்க்கரையைப் பங்கீடு செய்கிறார்கள்.

இம் மாநிலத்தில், அவ்வப்போது துணை மொத்த வணிகர்களாகச் (Sub-wholesalers) செயல்படும் கூட்டுறவுகளின் உதவியுடன், தமிழ்நாடு உணவுப்பொருள் பங்கீட்டுக் கழகமே சர்க்கரை மொத்த வணிகத்தை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் கழகத்தின் சில்லறை விற்பனைக் கடைகள், கூட்டுறவுகள், தனிப்பட்ட விற்பனையாளர்கள் ஆகியோர் மூலம் சில்லறைப் பங்கீடு செய்யப்படுகிறது. தனிப்பட்ட விற்பனையாளர்கள் செய்யும் சர்க்கரைப் பங்கீட்டை கூட்டுறவுகளே படிப்படியாக மேற்கொள்ள வேண்டுமென்று அரசு அண்மையில் கொள்கை முடிவெடுத்தது. பங்கீட்டு முறை அனுவளவேனும் ஊறு ஏற்படாவண்ணம் இக்கொள்கை பின்பற்றப்படுகிறது.

சர்க்கரைப் பங்கீடு செய்யும் செயல்நோக்கத்திற்காக, இம் மாநிலத்திலுள்ள (நகர்ப்புற, கிராமப்புற) மக்களனைவருக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இம் மாநிலத்தில் **94,82,604** குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

பயறு வகைகள்.—நமது மாநிலத்தில் பயறு வகைகளின் உற்பத்தி மிகவும் குறைவாகவே உள்ளது. கீழ்க்கண்ட அட்டவணை பயறு வகைகளில் நமது தேவை உள்ளூரில் உற்பத்தியாகும் அளவு, ஏனைய மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அளவு ஆகிய விவரங்களைக் காட்டும்:—

	உள்ளூர் உற்பத்தி.	இறக்குமதி அளவு.	உபயோக அளவு.
(1)	(2)	(3)	(4)
துவரையும், துவரம் பருப்பும்	46,000	65,000	1,11,000
உளுந்தும், உளுத்தம் பருப்பும்	36,000	50,000	86,000
பச்சைப்பயறும், பச்சைப் பருப்பும்	28,000	3,000	31,000
கொண்டைக்கடலையும் கடலைப்பருப்பும் ..	2,000	2,40,000	2,42,000
மொத்தம் ..	1,12,000	3,58,000	4,70,000

1974 மார்ச் 30]

விலை குறைப்பிற்கு வழியே இல்லை என்பதை இதன்மூலம் அறியலாம். அரசு விலைகளை நிர்ணயம் செய்து கட்டுப்பாடு விதிக்க வேண்டும் என்று இந்த அவையில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. இவ்வகையில் சரிப்பட்டு இணங்கும் தரக்குறைவான கொள்கையைப் பின்பற்றினுல் மோசமான பற்ருக்குறை நிலை ஏற்படும் என்ற காரணத்தால் நாம் அக்கொள்கையைப் பின் பற்றவில்லை.

ஏனெனில் இவ்வகையில் வெளியிடங்களிலிருந்து இறக்குமதி செய்ய வணிகர்கள் மறுப்பர். மக்கள் பட்ட தொல்லைகளே நம்மை இந்த சரியான முடிவெடுக்கச் செய்தது. நாமாக முடி வெடுக்கவில்லை. அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு இந்தியப் பாதுகாப்பு விதிகளின்கீழ் இன்றியமையாப் பொருள்கள் சிலவற்றின் விலைகள் நிர்ணயம் செய்யப்பட்ட மாநிலங்கள் சிலவற்றில் பொருள்கள் பதுக்கப்பட்டு, அவை கிடைப் பதே அரிதாகிவிட்டது. மக்கள் சொல்லொணுத் துயருற்ற கார ணத்தால் அக்கொள்கையைக் கைவிட வேண்டிய நிலைமை ஏற் பட்டது. நாம் அதிக விலைகள் கொடுத்து வாங்கியிருக்கிறோம்; ஆனல் பொருள்கள் கிடைக்காத சூழ்நிலை நமக்கு ஏற்படவில்லை.

சமையல் எண்ணெய்கள்.—எண்ணெய் வகைகளைப் பொறுத்த வரையில் நிலைமை இன்னமும் மோசமாக இருந்தது. சமையல் எண்ணெய்களின் விலை ஒரேயடியாய் உயர்ந்து, அவை கிடைப்பதே அரிதாகி விட்டது. நமது மாநிலத்தில் வேர்க்கடலை நீங்கலாக ஏனைய வகைகளின் உற்பத்தி மிகவும் குறைவே என்ற உண்மையும் இந்த அவைக்குத் தெரியும். வேர்க்கடலை விற்பனைக்கு லெவி விதிப்பதன் மூலம் கடலெண்ணெயின் விலையைக் குறைப்பதற்குத் தீர்வு காண முயன்றோம். வேர்க்கடலை விற்பனைக்கு 25 சதவீத லெவி விதித்து அவற்றைக்கொண்டு எண்ணெய் தயாரித்து நமது மக்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 6 வீதம் விற்பனை செய்ய விரும்பினோம். துரதிருஷ்டவசமாக இதற்கு இந்திய அரசு அனுமதி வழங்கவில்லை. இவ்வகையில் நாம் மீண்டும் மீண்டும் முறையிட்டுக் கொண்டபோதிலும் பயனுள்ள பதிலேதும் இந்திய அரசிடமிருந்து வரவில்லை.

ஓரளவேனும் உறுதியாக எண்ணெய் கிடைக்கச் செய்யும் முயற்சியில் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு கழகமானது தாவர எண்ணெய்களை இருப்பு வைத்திருந்தோரிடமிருந்து சிறிய அளவில் எண்ணெய்களைப் பெற்று கழகத்தின் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக அவற்றை விற்பனை செய்தது. விநியோகத் திற்கென்றுள்ள வனஸ்பதியை நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்ய தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு கழகமானது வனஸ்பதி தயாரிப்பாளர்களின் முகவர்களாக இருக்க வேண்டு மென்று அத் தயாரிப்பாளர்களுக்கு நிபந்தனை விதிக்கப்பட வேண்டு மென்று நாம் இந்திய அரசிடம் முறையீடு செய்துகொண்

டோம். அவ்வாறு செய்ய தம்மால் இயலாது என்று தெரிவித்த இந்திய அரசு வனஸ்பதி தயாரிப்பாளர்களுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தமானது தற்போதைய ஏற்பாட்டின் மூலமே மொத்த பங்கீட்டை மட்டும் அனுமதிக்கும் என்று குறிப்பிட்டுள்ளது.

மண்ணெண்ணெய்.—இந்திய அரசு நமக்கு மாதந்தோறும் சராசரியாக 30,000 மெட்ரிக் டன் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்து வருகிறது. தூய்மைப்படுத்தப்படாத எண்ணெய்க்குத் (Crude oil) தட்டுப்பாடு வந்தபோது இந்த ஒதுக்கீடு படிப்படியாகக் குறைக்கப்பட்டது. 1974, பிப்ரவரியில் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு 20,000 மெட்ரிக் டன் அளவுக்குக் குறைந்துவிட்டது. மண்ணெண்ணெய் உயர் வேக டீசல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் சீரமைக்கப்பட்டதன் காரணமாக டீசல் மண்ணெண்ணெய் கலப்படம் குறைந்தது. எனவே மண்ணெண்ணெய் தேவை சுமார் 15 முதல் 20 சதவீதம் வரை குறைந்துள்ளது. எனினும் நம்முடைய தேவை இன்னமும் 24,000 மெட்ரிக் டன் முதல் 25,000 மெட்ரிக் டன் வரை என்ற அளவில்தான் உள்ளது. இடர்ப்பாடான காலத்தை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று டில்லியிலிருந்து அடிக்கடி அறிக்கைகள் வந்த வண்ணம் இருக்கின்றன. மண்ணெண்ணெய் விலை ஏறலாம். வழங்கப்படும் அளவு குறைக்கப்படலாம் என்றெல்லாம் அறிக்கைகள் வருவதன் காரணமாக மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்ற உணர்வு அவ்வப்போது உருவாகி வருகிறது. ஆனால் மொத்த விற்பனையாளர்களும் சில்லறை விற்பனையாளர்களும் செய்யும் விற்பனையைக் கடுமையாகக் கண்காணிப்பதன் மூலமும் விலைக் கட்டுப்பாட்டை கடுமையாகச் செயல்படுத்துவதன் மூலம் நிலைமையை நம்மால் சமாளிக்க முடிந்தது.

பல்வேறு உரிமம் வழங்குதல் மற்றும் கட்டுப்பாடு விதித்துறைகளை அரசு செவ்விய முறையில் செயல்படுத்தி வந்துள்ளது. உணவு தானியங்களை எல்லைக்கப்பால் கடத்திச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள், சோதனைச் சாவடி ஏற்பாடுகள் ஆகியவை கடுமையாக்கப்பட்டுள்ளன. எல்லை நெடுக சுற்றுக்காவல் பணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கடத்தல் நடக்கும் முக்கியமான இடங்களில் தமிழ்நாடு சிறப்பு காவல் துறையினரின் பணிகள் பயன்படுத்தப்பட்டன. சட்டப்படியான எல்லைப் பகுதிகளில் உணவு தானியங்களைக் கொண்டு செல்வது நுழைவு அனுமதிச் சீட்டு மூலம் முறைப்படுத்தப்பட்டது. நெல் அரிசி ஆகியவற்றின் போக்குவரத்தை கட்டுப்படுத்துவதற்காக எல்லையோரப் பகுதியைச் சுற்றி இரண்டாவது பாதுகாப்பு மண்டலம் ஒன்று தனியாக அமைக்கப்பட்டது. புலனாய்வுத்துறை உணவுப்பொருள் குற்றங்கள் குறித்த பிரிவு, பதுக்கி வைக்கப்பட்டுள்ள உணவுத்தானியங்கள் மற்றும் இன்றியமையாத பொருள்கள் ஆகியவற்றை வெளிக் கொண்டுவர பல திடீர் சோதனைகளை நடத்தியது.

1974 மார்ச் 30]

இந்த முன்னேற்பாடுகள் தவிர பிரபலமான கள்ளக் கடத்தல் காரர்கள் மற்றும் பதுக்கல்காரர்கள் ஆகியோர் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மொத்தத்தில் உணவுத் தானிய நிலைமையை அரசு கட்டுப் பாட்டில் வைத்துள்ளது. தேசீய அரங்கில் தமிழ்நாடு ஒரு பாலை வனப் பசுஞ்சோலையாக இருக்கிறது என்பது அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

1974–75 ஆம் ஆண்டு கண்ணோட்டம்.

தேசீய பொருளாதாரம் இன்னும் இடர்பாடுகளிலிருந்து விடு படவில்லை. அப்படியே விடுபட்டிருந்தாலும்கூட அந்த இடர் பாடுகள் இன்னும் நம்மை அச்சுறுத்தி வருகின்றன. உரங்கள், பயிர்ப் பூச்சிக் கொல்லிகள், பூச்சி மருந்து ஆகியவற்றின் பற்றாக் குறை நிலைமைகள் பசுமைப் புரட்சியின் அடிப்படை கொள்கை யையே அச்சுறுத்துகின்றன. அதன் விளைவாக நமது உணவுக் கொள்கை, இன்றியமையாப் பண்டங்கள் வழங்குதல் ஆகியவற் றையும் பாதித்தன. நம்பிக்கையுடனும், நல்லெண்ணத்துடனும் நம் பணியை நாம் தொடங்கினாலும் நம்மை அச்சுறுத்தி வரும் இச் சிக்கல்களை நாம் மறந்துவிடக் கூடாது.

உற்பத்திப் பொருள்களுக்கு நியாய விலை அளிப்பதன் மூலம் உற்பத்தி செய்வோருக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் பெற உறுதி அளிக்கலாம். வேளாண்மைப் பொருள் விலை ஆணைக் குழுவின் பரிவுரையின் மேல் இந்திய அரசு முடிவு செய்த பல்வேறு தானிய வகைகளின் கட்டுப்படியாகும் விலைகள் கீழே கொடுக்கப்பட் டுள்ளன:—

		ரூ.	
நடுத்தர ரக நெல்	..	70	ஒரு குவிண்டால்.
சோளம்		63	ஷை
கம்பு		65	ஷை
மக்காச் சோளம்	..	63	ஷை
கேழ்வரகு		62	ஷை

இந்த தானிய வகைகளில் அங்காடி விலையில் குறைவு ஏற் படும்போது விற்பனைக்கான பொருள்கள் முழுவதையும் அரசு ஆதரவு விலையில் எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கும்.

1974 ஆம் ஆண்டின் சம்பா அறுவடைக் காலத்தில் வெளிச் சந்தை மூலமும் லெவி முறை மூலமும் 1·25 இலட்சம் டன்கள் அரிசி கொள்முதல் செய்வது என்று அரசு முடிவு செய்துள்ளது.

இதை உறுதி செய்வதற்கு தமிழ்நாடு நெல் அரிசி போக்குவரத்துக் கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் இம் மாநிலம் 19 தனி மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வணிகர்கள் கொள்முதல் செய்யும், கொண்டு செல்லும் தானியங்கள்மீது 25 முதல் 40 சதவீதம் லெவி விதிக்கப்பட்டுள்ளது. 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி இறுதி வரையில் லெவி மூலமும் வெளிச் சந்தை மூலமும் 79,688 டன்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்த இருப்பானது பொது மக்களுக்குப் பங்கீடு செய்ய போதுமானது. நெருக்கடியான நேரங்களில் முடையிருப்புக்களை வைத்திருக்கவும் நாம் கருதியுள்ளோம்.

